# வெண்ணிலவே வருவாயோ...



ரமணிசந்திரன்

# வெண்ணிலவே வருவாயோ

ரமணிசந்திரன்

# அத்தியாயம் - 1

அது ஒரு பெரிய இடத்துக் கல்யாணம். மண்டபமும் பெரிதே. பக்கத்தில் ஒரு பெரிய கார்ப் பார்க்கிங் உண்டு . என்ன காரை அங்கே நிறுத்திவிட்டு. திருமண மண்டபத்துக்கு நடந்து வர வேண்டும்.

மண்டப வாயிலில் காரை நிறுத்தும்போதே உள்ளே தாலிகட்டும் சடங்கு முடிவடைவதின் அடையாளமாகக் கெட்டிமேளம் கேட்டது.

“அம்மா. நீங்கள் இறங்கி உள்ளே போங்கள். நான் காரை நிறுத்திவிட்டு வந்து. உங்களோடு சேர்ந்து கொள்ளுகிறேன்.” என்றான் அருமை மைந்தன் வசீகரன்.

“வேண்டாமடா. உள்ளே யாரையும் எனக்குத் தெரியாது. அதனால் உன்னோடேயே வருகிறேன். சேர்ந்தே போகலாம்.” என்று கோகிலா சொல்லிக் கொண்டிருக்கும்போதே சீருடை அணிந்த இருவர் ஓடி வந்தனர்.

திருமண வீட்டார். புத்திசாலித்தனமாக “வாலெட் பார்க்கிங்” ஏற்பாடு செய்திருந்தனர். கார்ச் சாவியை அவர்களிடம் கொடுத்துவிட்டு. தாயும் மகனுமாகச் சேர்ந்தே மண்டபத்தினுள் சென்றனர் .

திருமண மேடை அமைத்திருந்த பெரிய ஹாலின் வாயிலில் வரவேற்புக்காக நின்ற அழகிய சிறு பெண்கள் பன்னீர் தெளித்து பூக் கொடுத்து வரவேற்றனர்.

அடுத்து நின்ற பெரியவர்களும். “வாருங்கள். வாருங்கள்.” என்று பொதுவாகச் சிறப்பாகவே வரவேற்றபோதும். தாலி கட்டுவதை அடுத்த திருமணச் சடங்குகளில். முக்கியமானவர்கள் ஈடுபட்டு இருந்ததால். அம்மாவுக்கும் மகனுக்கும். தெரிந்த யாரும் கண்ணில் படவில்லை.

அவர்களுக்குத் தெரிந்தவர் என்றால். மணப் பெண்ணுடைய தாயோ தந்தையோவாகத்தான் இருக்க முடியும். திருமணத்துக்கு அழைப்பதற்காக வீட்டுக்கு வந்தவர்கள். அவர்கள் இருவரும்தான்.

சந்தானத்தடைய பழைய நண்பர். ஞானதேசிகன் ரொம்ப காலமாகத் தொடர்பு விட்டுப் போயிருந்தது. தற்செயலாக. ஒரு பொது இடத்தில் சந்தித்தில். இருவருக்கும் ஒரே மகிழ்ச்சி. கட்டிப் பிடித்துக் குதிக்காத குறைதான். விட்டுப் போன தொடர்பு இரு மடங்காக ஒட்டிக்கொள்ள மகளுக்குத் திருமணம் என்று. மனைவியோடு வீட்டுக்கு வந்து ஞானதேசிகன் அழைத்தார்.

மனைவியும் தானுமாகத் திருமணத்துக்குச் செல்ல வேண்டும் என்றுதான். சந்தானமும் எண்ணியிருந்தார். ஆனால். தொழில் விஷயமாக அமைச்சரைச் சந்திப்பதற்காகக் கட்டாயமாக டெல்லிக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்துவிட. அவருக்குப் பதிலாக. மகன். தாயோடு செல்லும்படி ஆயிற்று.

முணுமுணுத்துக் கொண்டேதான். மகன் கூட்டிச் சென்றான். "எவ்வ...வளவு வேலைகள் இருக்கின்றன! புதிதாக வாங்கியிருக்கும் நிறுவனத்தின் பழைய கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்தவே. இரண்டு வாரங்கள் தேவைப்படும்!

அவர்கள் என்ன. கணக்கா எழுதி வைத்திருக்கிறார்கள்? இப்படிக் கணக்கு எழுதினால். இழப்பு ஏற்படாமல் எப்படி இருக்கும்? எவ்வளவு முடியுமோ. அவ்வளவு சீக்கிரமாக கணக்குகளைச் சரிபார்த்து சீர்ப்படுத்தலாம் என்று பார்த்தால். இன்றைக்கு எவ்வளவு நேரம் வீணாகுமோ தெரியவில்லையே!

"புலம்பாதேடா. திருமணம்தான் முடிந்துவிட்டதே. பரிசைக் கொடுத்துவிட்டு. உடனே கிளம்பி விடலாம்." என்று மகனுக்கு ஆறுதல் சொன்னாள் அன்னை.

உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு. "காட்!" என்றான் வசீகரன்.

தாலி கட்டி முடிந்துவிட்டதால். பாதிப்பேர்ச் சாப்பிடப் போனார்கள். நிறையப் பேர். மணமக்களுக்குப் பரிசைக் கொடுத்துவிட்டுப் போனால். பரிசைக் கொடுத்துவிட்டு உணவுக்குப் போனால். சாப்பிட்டதும் உடனே கிளம்பிவிடலாமே என்ற எண்ணத்தில். பரிசு கொடுப்பதற்கான வரிசையை நிரப்பத் தொடங்கினார்கள்.

வரிசை நிரம்பிய வேகத்தைப் பார்த்து தாயிடம் திரும்பி. "அம்மா. இந்த வரிசை போகிற நீளத்தைப் பார்த்தால். ரொம்ப நேரம் நிற்க வேண்டியிருக்கும் போலத் தெரிகிறது.

நீங்களாவது. முன்னே போய் இருக்கையில் உட்காருங்கள். இந்த க்யூ உங்கள் கிட்டே வரும்போது. எழுந்து சேர்ந்து கொள்ளலாம்." என்றான்.

தாயார் யோசனையாகப் பார்க்க. அவர்களது சிறு உரையாடலின் போது. மேலும் பலர் வந்து நின்றுவிட. இன்னும் யாரும் இடையிலே புகுந்து. வரிசையில் மேலும் பின் தங்கிவிடக் கூடாதே என்று. சட்டென வரிசையில் இணைந்து கொண்டான் அவன். இன்னமும் அவன் அருகிலேயே நின்ற தாயிடம். "எவ்வளவு நீண்ட வரிசை! எனக்கு

எவ்வளவு வேலை இருக்கிறது! என் வேலையெல்லாம் போட்டுவிட்டு. இங்கே இழுத்து வந்து. நிற்க வைத்துவிட்டீர்களே. நியாயமா அம்மா?" என்று குறையோடு கேட்டான் மைந்தன்.

மகனோடு கூடவே மெல்ல நகர்ந்தவாறு. சுற்றுமுற்றும் பார்த்தாள் கோகிலா.

"பாருடா. இவ்வளவு பெரிய கூட்டத்தில். யாரும் தெரியாத இடத்தில். நான் மட்டுமாக வந்து மாட்டினால். அது மட்டும் நியாயமா? அப்பா ஊரில் இல்லாதபோது. பக்கத்தில் இருக்கும் உத்தம சத் புத்திரன் நீதானே. அம்மாவுக்குக் கை கொடுக்க வேண்டும்?" என்று புன்னகையோடு இலகுவாகக் கேட்டாள்.

"ஊகூகூம்... " என்று வேகமான தலையசைப்புடன் மகன் மறுத்தான்.

வரிசையும் அசையாமல் நின்றுவிட. எரிச்சலான மூச்சுடன். "அம்மா. இது சரியான வாதமில்லை! உத்தம புத்திரன். சத் புத்திரன் என்றுகொண்டு

முழுக்க முழுக்க பிளாக்மெயில்!" என்றான் அழுத்தமான குரலில்.

"என்னடா. பெரிய பிளாக்மெயில். நீ ஒரு திருமணத்தைப் பண்ணியிருந்தால் புலம்பல் நாயகம் உன்னைத் துணைக்குக் கூப்பிட்டிருப்பேனா? உன்னிடம் கெஞ்சிக் கூத்தாடிய நேரத்துக்கு. என் மருமகளோடு அப்போதே வந்திருக்க மாட்டேனா? நம்ப முடியவில்லையா? எளிதாக நிரூபிப்பேன். முதலில் கல்யாணத்தைப் பண்ணு. அப்புறம் எதற்கேனும் உன்னைக் கூப்பிடுகிறேனா. பார்! மருமகளைக் காரை ஓட்டச் சொல்லி. நாங்களே ஊரெல்லாம் சுற்றுவோமே! வேண்டுமானால் பார்க்கிறாயா?" என்று சவால் விட்டாள் தாயார்.

"மெள்ள மெள்ள. ரொம்ப அவசரப்பட்டுச் சவால் விடாதீர்கள். அம்மா. அந்தப் பெண்ணுக்கக் கார் ஓட்டத் தெரியுமோ. என்னவோ? சைக்கிள் மிதிக்கவே பயப்படும் பேக்காக இருக்க இருக்கப் போகிறது!" என்று சற்றே இளக்காரமான குரலில் பதில் கொடுத்தான் பிள்ளை.

"அந்தக் கதை. என்னிடம் வேண்டாம். தம்பி. இன்றையப் பெண்கள். கப்பல். ஹெலிகாப்டர் எல்லாமே ஓட்டுகிறார்கள். கார் என்ன. சுண்டைக்காய் சமாசாரம்!" என்றாள் கோகிலா விடாமல்.

"ஹெலிகாப்டரா? அப்புறம். மொட்டை மாடியில் ஹெலிபாட் வைத்துக் கொடு என்று கேட்பீர்கள். இந்த வம்பே வேண்டாம்! ஆளை

விடுங்கள்! “ என்று முடிக்க முயன்றான் வசீகரன்.

அப்போதும் விடாமல். “சரிப்பா. ஹெலிபாட் வேண்டாம். அந்த அளவுக்குக் கேட்கவில்லை. உன் ஆடியை வைத்தே. நாங்கள் சமாளித்துக் கொள்கிறோம். ஒரு மருமகளை மட்டும் தந்துவிட்டால். அப்புறம் உன்னைக் கூப்பிடவே மாட்டேனே! அதற்கு மட்டும் “இம்” என்று ஒரு தரம் தலையை ஆட்டி வையேன். அப்புறம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்! இந்த மாதிரித் தொல்லையே பண்ண மாட்டேன். நிச்சயம். வசி!” என்று. சற்றுக் கெஞ்சுதலாகவே கேட்டாள் தாயார்.

“அதுசரி. இங்கே சுற்றி. அங்கே சுற்றி. கடைசியாக இந்த இடத்துக்கே வந்துவிடுவீர்களே! வேண்டாம் என்று ஒரு தரம் சொன்னால். தானாகப் புரிய வேண்டும். சொல்லுங்கள். இப்போது உங்கள் பேச்சு மட்டும் மட்டும் பிளாக்மெயில் இல்லையா? அப்பாடி. நல்ல வேளை வரிசை நகர்கிறது. முன்னே போய் உட்காருங்கள். போங்கள்.” என்று. சிறு சிடுசிடுப்புடன் மகன் கூற. இனிப் பேசிப் பயனில்லை என்று எண்ணியவளாய். கோகிலா. முன்னே போய். காலியாகியிருந்த ஓர் இருக்கையை நோக்கி நகர்ந்தாள்.

தாய் செல்வதைக் கவனித்துவிட்டு. “என்ன பெரிய கல்யாணமோ? குடும்பத்தின் அமைதியைக் குலைப்பதற்கென்றே இப்படி ஒரு தகதகா. ஜிகுஜிகு வழியைக் காட்டி ஏமாற்றுவது! “ என்று முணுமுணுத்தபடியே. வரிசையின் பக்கம் பார்வையைத் திருப்பியவன் சற்றுத் திகைத்தான்.

வரிசையில் அவனுக்கு முன்னே நின்ற ஒரு பெண்.. தன் அழகான பெரிய விழிகளில் சிறு கேலி கலந்த ரசனையுடன். தாய் மகன் பேசுவதை. ஆர்வமாகக் கவனித்துக் கொண்டிருற்தாள்.

அதாவது. சந்தோஷமாக ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

விரிந்த விழிகளின் அழகு அவன் கண்ணில் பட்டது ஒரு கணமே. வடிவான இதழ்களின் சிறு முறுவலும்கூட!

உடனேயே. அவனும் தாயும் பேசுவதை. அடுத்தவரின் குடும்ப உரையாடலை ஒட்டுக்கேட்டதோடு. சிரிக்க வேறு செய்கிறாளே என்று தோன்றிவிட்டது!

தணிந்த குரலில் கடுப்பைக் கலந்து. “அடுத்தவர் சொந்தப் பேச்சை ஒட்டுக் கேட்பது. நாகரீகம் இல்லை!” என்றான் அவன்.

வரிசையில் முன்னே சளசளத்தபடி சென்ற இன்னும் சில இளம் பெண்களோடு சேர்ந்து நகர்ந்து கொண்டிருந்தவள் தலையை மட்டும் நன்றாகத் திருப்பி. அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

வளைந்த புருவங்களை மேலே உயர்த்தி. “பொது இடத்தில். பக்கத்தில் நின்று. ஒருவர் ஏதோ பேசினால். காதைப் பொத்திக் கொள்ளவா. முடியும்? சொல்லப் போனால். பொது இடத்தில் நின்று சொந்த விஷயம் பேசுவதுதான். நாகரீகத்தோடு சேராது. “ என்று பதில் கொடுத்தாள்.

தப்பில் பெரும்பகுதி தங்களதுதான் என்பதும். அவனது எரிச்சலைத்தான் கூட்டியது. எனவே. “காதில் சும்மா விழுவது வேறு! ஆனால். அதைக் கேட்டு ரசிக்கலாமா?” என்று. அவளைக் குன்ற வைக்க முயன்றான் வசீகரன்.

ஆனால் அப்படிப்பட்ட எண்ணமே இல்லாமல். “அது. காதில் விழுகிற பேச்சைப் பொறுத்தது!” என்றாள் அவள். சற்றும் தயக்கமற்று.

தாயாரும் தானுமாக நடத்திய உரையாடலின் நினைவில். அவனுக்குத்தான் இப்போது முகம் லேசாகக் கன்றியது. அவனது திருமணம் பற்றிய பேச்சு! அதாவது. அவனைப் பார்த்துதான் சிரித்திருக்கிறாள்!

சே! அம்மாவுக்குத்தான் எப்போதும் அதே நினைவு என்றால். அவனாவது சற்று யோசித்துப் பேசியிருக்கலாம்! இப்போது. யாரோ ஒரு துடுக்குக்காரப் பெண்ணிடம் தலை குனிந்து நிற்க வேண்டியிருக்கிறது... என்று எண்ணும்போதே. மனதால் மட்டுமின்றி. உடலாலும் காட்டி விடக் கூடாதே என்று. சற்று விறைப்பாக நிமிர்ந்து நின்று அவளைப் பார்த்தான்.

ஆனால் அவளது கவனம். அவனிடம் இல்லை.

முன்னே நின்ற பெண்களோடு சேர்ந்து. ஏதோ கலகலத்துக் கொண்டிருந்தாள்.

“பேசாமல் சாப்பிட்டுவிட்டு வந்தே. நிலாவிடம் பரிசைக் கொடுத்திருக்கலாம்பா! இப்போது பார். இந்தக் கூட்டத்தில். நாம் ஒரு வழியாகச் சென்று பரிசைக் கொடுத்து முடிக்குமுன். பசியில் சிறு குடலைப் பெருங்குடலே தின்றுவிடும் போல இருக்கிறது!”

என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

நல்லவேளை! “கல்யாண சமையல் சாத”த்துக்குக் காத்திராமல் சீக்கிரமாகக் கிளம்புவதற்காக வீட்டிலேயே காலை உணவை முடித்துக்கொண்டு வந்த கெட்டிக்காரத்தனத்தைத் தனக்குள்ளேயே அவன் பாராட்டிக் கொண்டபோது. மற்ற சினேகிதிகள். அவளிடம். ஒட்டுக் கேட்டதையே நியாயப்படுத்திய அவளிடம் பாய்ந்தார்கள்.

“ஏய். எல்லாம் உன்னால்தானேடி? பரிசைக் கொடுக்கும்போது. நிலாவோடு நிறுத்திப் படம் பிடிப்பார்கள்.. விருந்தை ஒரு பிடிபிடித்துவிட்டு வந்தால். தொப்பையாகத் தெரியும்.. பிறகு சாப்பிடப் போகலாம் என்றாயே! சரி. எங்களை விட. உனக்கு விஷயம் தெரியும் என்று நின்றால். இப்போது தட்டை மாற்றுகிறாயே!” என்றாள் ஒருத்தி.

“விருந்து அயிட்டங்கள் நன்றாக இருக்கும் என்று நிலா சொன்னாளே என்று. நான் வெறும் வயிற்றோடு வந்தேன்ப்பா!” என்றாள் பசியில் இருந்த இன்னொருத்தி!

“சாரிப்பா. சாரிப்பா! இந்தக் க்யூ இவ்வளவு நேரம் இழுக்கும் என்று தெரியாமல் சொன்னனேன்ப்பா! ஆனால். அந்தப் பக்கமாகக் குறுக்கு வழியில் போகிறவர்களைத் தடுத்து நிறுத்தினால். நாமும் சீக்கிரமே பரிசைக் கொடுத்துவிட்டுச் சாப்பிடப் போயிருக்கலாம். “ என்று சமாதானம் சொன்னாள். அவனுக்கு முன்னே நின்றவள். சொல்லும்போதே ஏதோ தோன்ற. தனக்கு அடுத்து நின்றவனைச் சடக்கெனத் திரும்பிப் பார்த்தாள்.

காதில் விழுந்ததை. அதிலும் முக்கியமாக முன்னே நின்றவளை மற்றவர்கள் வாருவதை ரசித்துக் கொண்டிருந்தவன்தான். அவனும்.

அவள் திரும்புவதை உணர்ந்து. முகத்தை மாற்றிக் கொள்ளுமுன் கண்டுவிட்டு.

“இது மட்டும் நாகரீகமாக்கும்?” என்றாள் அவள்.

லேசாகக் கன்றிய போதும். “பொது இடத்தில். அடுத்தவர் காதில் விழுகிற பேச்சைப் பொறுத்து. அதை ரசிப்பது அநாகரீகம் இல்லை என்று. சற்று முன் கேள்விப்பட்டேனே!” என்று திருப்பினான் அவன்.

தன் பேச்சைத் தானே மறுப்பது எப்படி?

பதில் சொல்ல மாட்டாமல் முகம் லேசாகக் கன்றிச் சிவக்க. முன்னே நின்றவளிடம் பேசுவது போல. அவள் திரும்பிக் கொள்ளவும். அவளது வாயை அடைத்துவிட்ட திருப்தியில் நிமிர்ந்து நின்றான் அவன்.

வரிசை ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது.

குடும்பமாகவோ. தனியாகவோ படியேறி மேடைக்குச் சென்று. மணமக்களுக்குப் பரிசு. வாழ்த்து. ஆசியை வழங்கிவிட்டு. மறுபுறமாக. இதே போன்ற படிகளில் இறங்கிச் சென்றனர்.

முன்னே நின்ற பெண்கள். மேடைக்குச் செல்லப் படியேறும்

இடத்தை அடையவும். வசீகரன் தாயை அழைத்தான். “இனிச் சீக்கிரமாகப் போய் விடலாம்மா. வாருங்கள்.” என்று கூப்பிட்டான்.

கோகிலாவும் எழுந்து. மகனை நோக்கி. மெல்ல நடக்கலானாள்.

மணமேடைக்கு ஏறும் படியருகில் வந்து விட்டதால். மேடையில் மகள் அருகில் நின்ற மணப்பெண்ணுடைய தந்தை ஞானதேசிகன் கண்ணிலும். இருவரும் பட்டார்கள் போலும்! உடனேயே மேடையிலிருந்து வேகமாக இறங்கி வந்து. “வாங்கம்மா. வாங்கம்மா!” என்று வரவேற்றார்.

“வந்து...அவர்...” என்று கோகிலா தொடங்கு முன்யே. “சதா என்னிடம் சொன்னானம்மா. தொழில் என்று வந்துவிட்டால். இதெல்லாம் நடக்கத்தான் செய்யும்! கல்யாணம் முடிந்த பிறகு. சற்று நேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று திட்டம் போட்டோம். சரி. இன்னொரு தரம்தான் பார்க்க வேண்டும். தம்பி... சதா பையன்தானே? நீங்கள் இருவரும் வரிசையில் நின்று கொண்டிருப்பதா? என்னோடு வாங்க. வாங்கம்மா. வாங்க வாங்க.” என்று வசீகரனின் கையைப் பிடித்து. வேகமாக. மறுபுறம் அழைத்துப் போனார்.

முதுகில் குத்துவது போன்ற ஓர் உணர்வு . வசீகர்பனை லேசாக உறுத்தியது.

பின்னே நின்றவன். குறுக்கு வழியில் போய் முந்திக் கொள்கிறானே என்று திட்டிக் கொண்டிருப்பாள்! எரிச்சல் நியாயமானதும்தான்.

ஆனால். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால். அவன் எப்போது அலுவலகம் போவது? அத்தோடு. அவனாக ஒன்றும். குறுக்கு வழியை நாடவில்லையே!

மணப் பெண்ணுடைய தந்தையின் பின்னே. மறுபுறமாகப் படியேறிச் சென்று. மணமக்களை அடைந்தபோது. அந்தத் துடுக்குப் பெண்ணும். தோழிகளோடு மேடையில் ஏறியிருந்தாள். ஞானதேசிகன் குறுக்கீடு இல்லாதிருந்தால். தோழியர் கூட்டம்தான். இப்போது பரிசைக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்.

வசீகரன். தாயாருடன். அந்தக் கும்பலின் பின்னே நின்றிருப்பார்கள்.

அவளது குத்தல் பார்வையைக் கவனியாதவன் போல. ஞானதேசிகன் புறம் திரும்பிவனை அவர் அறிமுகம் செய்து வைக்கவும் மாப்பிள்ளையோடு கை குலுக்கி. பரிசைக் கொடுத்து. வீடியோ.

ஃபோட்டோ எடுத்து. விடைபெற்றுக் கிளம்பும்போது பாய்ந்த பார்வை. அவளது கண்களின் ஆத்திரப் பளபளப்பையும். உதட்டோர அழுத்தத்தையும் பதிவு செய்தது.

எப்போதாவது சந்திக்க நேர்ந்தால். தந்தையுடைய சினேகிதரின் வற்புறுத்தலை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று எண்ணியவாறு வந்த வழியே நகர்ந்தால். அவர்களைப் போலவே. எதிரே குறுக்குவழியில். “வா ! வேறே யாரும் வந்துவிடுமுன் சீக்கிரம் வா!” என்று இன்னொரு குடும்பம் வேகமாக வந்துகொண்டிருந்தது.

அந்தக் குடும்பத்தார் பற்றி. வசீகரனுக்குத் தெரியும். புதுப் பணம்! ஏதோ தங்கள் வீட்டுத் திருமணம் போல. வீடியோ. ஃபோட்டோ எடுப்பவர்களை. இப்படி எடு. அப்படி எடு என்று எடுக்க வைத்துக்கொண்டு. மேடையை விட்டு லேசில் நகர மாட்டார்கள்.

அந்தத் தோழியர் கூட்டம். வெகு நேரம் காத்திருக்க நேரும்.

கட்டு மீறி. எள்ளும் கொள்ளும் வெடிக்கத் தோடங்கிய முகத்தை மீண்டும் ஒரு தரம் திரும்பிப் பார்த்துவிட்டு. புதிய விருந்தாளிகளின் பாதையில் குறுக்கே போய் நின்று. “அங்கிள்  நீங்களா? குடும்பத்தோடு வந்திருக்கிறீர்கள் போல?” என்று. வந்தவரோடு  பேச்சுக் கொடுத்தான்.

கூடவே. அந்தக் குடும்பம் முன்னே நகர்ந்து சென்று விடாமல் மறித்தாற்போல வழியில் நின்று. “எங்கள் அம்மா. அங்கிள். உங்கள் வீட்டு ஆன்ட்டி எங்கே? அம்மாவுக்கு அறிமுகப் படுத்த வேண்டுமே! அம்மா. உங்களுக்கு அங்கிளைத் தெரியுமல்லவா?” என்று. தாயை அவர்களுக்கு  அறிமுகம் செய்து வைக்கத் தொடங்கினான்.

நகரத்தின் ஒரு பெரிய தொழில் பிரமுகருடைய மனைவியின் அறிமுகத்தை விட்டுவிட. அந்தப் புதுப் பணக்காரருக்குப் பைத்தியமா. என்ன?

அந்தப் பெண்ணின் குழு பரிசைக் கொடுத்துப் படம் பிடிக்கத் தொடங்கும்வரை அவர்களை நிறுத்தி வைத்துவிட்டே. வசீகரன் கிளம்பினான்.

சற்று விலகிப் போன பிறகு. “என்னடா. பெரிதாக அறிமுகம் செய்து வைத்தாய்? கழுத்துச் சங்கிலியைப் பெரிதாக. இருபத்தியொரு சவரனில் செய்து போட்டுக் கொள்ளும்படி. எனக்கு அறிவுரை சொல்கிறாள். அந்த அம்மாள்! ஒரு நாலு பட்டை கூடப் போடவில்லையே. இருக்கிறதா. இல்லையா என்று. சரியான அறுவைப்பா!

என் கழுத்தில் கிடப்பதைப் பார்த்துவிட்டு. அமெரிக்கன் டைமண்ட் நன்றாகப் பளபளப்பாய் இருக்கிறது இன்னும் கொஞ்சம் பெரிதாகப் போடக் கூடாதா என்கிறாள்! உடம்பில் அணிந்திருக்கிற நகை தவிர. வேறு நினைவே இராது போல! எதற்கு. இந்தம்மாவைப் போய் எனக்கு அறிமுகம் செய்தாயோ. தெரிவில்லை! ஒரு வார்த்தை இணைந்து பேச முடியவில்லை." என்றாள் அன்னை. சற்று சலிப்பாக.

எதற்கு என்று எப்படிச் சொல்வது? ஒரு பெண்ணுக்காக என்றால். உடனே அந்தப் பெண் யார் என்ன என்று விசாரிக்கத் தொடங்கி விடுவார்கள். அப்புறம் இருக்கவே இருக்கிறது. "கல்யாணம் பண்ணிக்கொள்" பாட்டு!

"உங்கள் வைர மாலையின் விலையில். அந்தம்மா அணிந்திருக்கும் நகைகள் அத்தனையையும் வாங்கி விடலாம் என்று மட்டும் தெரிந்தால். அவர்களுக்கு நெஞ்சு வலியே வந்துவிடும்." என்று மகன் சிரிக்க. கூடச் சேர்ந்து நகைத்தாள் அன்னை.

விடை பெற்றுக் கிளம்ப முயன்றால். சாப்பிடாமல் போகக் கூடாது என்று. ஞானதேசிகன் மனைவி தடுத்தாள். பாயசத்தை மட்டுமாவது பருகச் சொல்லி. கொண்டு வரச் செய்து கையில் கொடுத்தாள். அந்த அம்மாள்.

குடித்து முடித்த பிறகும். தாய்மாரின் உரையாடல் முடியவில்லை.

அன்னையர் இருவரும் பேசுகையில். மெல்ல வாயிற்புறமாக நகரத் தொடங்கினான் வசீகரன். அதைப் பார்த்துவிட்டேனும். அன்னை விரைந்து கிளம்பிவிட மாட்டாளா. என்ற ஆவல்.

ஆனால். ஆவல் நிறைவேறாவிட்டாலும். வேறு ஓர் ஆச்சரியம் அவனை எதிர்கொண்டது!

# அத்தியாயம் - 2

வழக்கமான திருமண வீட்டு அலங்காரங்கள்தான். ஆனாலும் சுவாரசியமாகப் பார்த்து ரசிப்பது போன்ற பாவனையில். வாயில்புறமாக வசீகரன் மெதுமெதுவே நகரலானான். ஆனால். நத்தை நடையாய் அவன் கிட்டத்தட்ட வாயிலை நெருங்கியபோதும். தாயாரின் பேச்சு முடிவுக்கு வந்து சேரவில்லை.

எப்போது இந்தப் பேச்சு முடிந்து. எப்போது அம்மா வந்து சேர்ந்து. அவர்களை வீட்டில் கொண்டு விட்டுவிட்டு. எப்போது அலுவலகம் சென்று. அந்தப் புதிய நிறுவனம் பற்றிய வேலையைத் தொடங்குவது என்ற சலிப்பு. அவனுக்குச் சட்டென மறைந்தது. காரணம். மணமக்களுக்குப் பரிசு கொடுக்கும்போது வரிசையில் முன்னே நின்ற அந்தப் பெண். திடுமென மண்டப வாசலுக்கு வெளியிலிருந்து உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

அதுவும். சும்மா தனியாக அல்ல! ஒரு சின்னஞ்சிறு பையனைக் கையில் பிடித்து. இழுத்துக்கொண்டு! முன்னும் பின்னும் பார்த்தால். வேறு யாரையும் காணோம்.

ஏதோ விளம்பரத்தில் பார்த்த மாதிரி. இவள். இந்தப் பையனுடைய தாயா?

அப்போதும் நம்ப முடியாமல் வியந்து பார்த்துவிட்டு. “ஊகூம். இருக்காது!” என்று அவனே மறுப்பாகத் தலையசைக்கவும். காரணம் புரிந்து. லேசாக முகம் சிவந்தாள் அவள். அவசரமாகத் தலையசைத்து. “இவன் வந்து...இவன் யாரோ. தெரியாது. தனியாக வெளியே ஓடிப் போய்க் கொண்டிருந்தான். சின்னப் பையன். இன்னும் வெளியே. சாலைக்கே ஓடிவிடக் கூடாதே என்று. பின்னோடு போய்ப் பிடித்து வந்தேன். இனி. இவனுடைய பெற்றோரைத் தேடி. ஒப்படைக்க வேண்டும்.” என்று விளக்கம் கொடுத்தாள் .

அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே. “ஏய்ய்...அசோக் இங்கே இருக்கிறான். மாமா. கழுதை. எங்கேடா போனாய்? அம்மாவை விட்டு நகரக் கூடாது கையைக் கட்டிக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டும் என்று எத்தனை முறை சொன்னேன்? வீட்டுக்குப் போய் முதுகுத்தோலை உரிக்கிறேன். பார்!” என்று மிரட்டியபடி . பையனைப் பார்த்துவிட்டு ஓடி வந்த ஒரு பெண். சிறுவனைப் பிடித்து. இழுத்துக்கொண்டு போனாள் .

நன்றி என்று ஒரு வார்த்தை சொல்லத் தெரியவில்லையே என்று வசீகரன் எண்ணும்போதே. அந்தப் பெண் திடுமெனத் திரும்பி. நின்று கொண்டிருந்த இருவருக்கும் பொதுவாக. “நன்றிங்க!” என்றுவிட்டுப் போனாள்.

“பரவாயில்லை. “நன்றி” என்கிற மந்திர வார்த்தை. ஒரு வழியாக நினைவு வந்துவிட்டது! ஆனால். யாருக்குச் சொல்வது என்பதில்தான் பெரிய குழப்பம் போல! “நெல்லுக்கிறைத்த நீர்... ” பாட்டில் வருவது போல. எனக்கும் ஓசியில் ஒரு நன்றி கிடைத்தது.” என்று கிண்டலாக மொழிந்து. நகைத்தவாறு அவளைப் பார்த்தவன். அவளது முக பாவனையில். “இங்கே என்ன குழப்பம்?” என்று விசாரித்தான்.

அவள் பதில் சொல்லத் தயங்கவில்லை. “குழப்பம்தான். உங்களிடம் கோபப்படுவதா? பின்னே செய்த உதவிக்கு நன்றி சொல்வதா என்ற குழப்பம்! சரி...போகட்டும். கடைசியில் செய்ததற்கு நன்றியாகவே இருக்கட்டும்! “ என்று ஒரு பளீர்ப் புன்னகையை உதிர்த்துவிட்டு. தூரத்தே நின்று. கையசைத்து அழைத்த தோழிகளை நோக்கி விரைந்தாள்!

புன்னகை மின்னலடித்தது என்பது. இதைத்தான் போலும் என்று எண்ணிக் கொண்டான் அவன்!

வசீகரன் அந்தப் பெண்ணையே நினைத்துக் கொண்டிருந்தான் என்று சொல்ல முடியாது. அவனது மன நிலைக்கு. அப்படி எந்தப் பெண்ணையும். எண்ணி எண்ணி உருகுவது சாத்தியமும் இல்லை!

ஆனால். ஏதாவது அழகான காட்சி கண்ணில் படும்போது. அந்த மின்னல் சிரிப்பு அவனது மனக் கண்ணில் வந்துவிட்டுப் போகும்.

ஆனாலும். அவளுக்குத் தைரியம்தான்! அந்தச் சிறுவனைப் பின்னோடு போய்ப் பிடித்து வந்தாளே. அவனுக்கு ஏதாவது நகையைப் போட்டிருந்து. அதை யாராவது திருடிவிட்டுப் பிள்ளையைத் தனியே போக விட்டிருந்தால்? நகைக்காக அவளை அல்லவா பிடிப்பார்கள்? அதை யோசிக்க வேண்டாம்?

அதையெல்லாம் கொஞ்சமும் நினையாமல். அந்தச் சிறுவன் வெளியே போய் என்னமும் ஆகிடக் கூடாதே என்று. பின்னோடு போய்ப் பிடித்து வந்திருக்கிறாள்! பரவாயில்லை! இந்தக் காலத்தில் கூட. இது போல மனிதாபிமானத்தோடு ஒருத்தி. அதிலும் இளம் பெண் இருக்கிறாளே! ஆச்சரியம்தான்!

யோசித்துக் கொண்டிருக்கும்போதே. “சார். எட்டு மில்லிமீட்டர்

டையில் சிறு விரிசல் விழுந்துவிட்டது. சார்...” என்று தொழிற்சாலை ஃபோர்மன் வருவான்.

அத்தோடு. அவளைப் பற்றி. அவனுக்கு மறந்து போகும்!

ஒரு காரணம் வேலை மிகுதி. செல்வமும் செல்வாக்கும் இருந்தபோதும். மேலேமேலே வளர்ச்சி இருக்க வேண்டும் என்பது. அவனுடைய தந்தையின். ஏன். அவனது கருத்தும் கூட.

“போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து” என்பதெல்லாம். யாரோ சோம்பேறிக் கூட்டம் எழுதி வைத்ததாக இருக்கும் என்பான் .அவன்.

“நேரத்துக்குச் சாப்பிடக் கூட வராமல். அப்படி உழைத்தாக வேண்டுமா? இருப்பது போதாதா?” என்று கேட்கும் தாயாருக்கு. அவனது பதில் இது.

“குந்தித் தின்றால். குன்றும் மாளும்” என்று கூடப் பழமொழி இருக்கிறதும்மா. நாம் இருக்கிற நிலையிலிருந்து இறங்கலாமா? கூடாதுதானே? அதனால். வேலை விஷயத்தில். எங்களை. எங்கள் போக்கில் விட்டுவிடுங்கம்மா.” என்பான் பையன்.

“பாவம். விட்டு விடேம்மா. ஏதோ பையன் வாய்க்கு ருசியாகச் சாப்பிட ஆசைப்படுகிறான் போல! என்னைப் போலத் தட்டில் போட்டதை. ருசி. சுவை பாராமல் முழுங்குகிற வயதா. அவனுக்கு? ஆசைப்பட்டதைச் சாப்பிடட்டும். விடு!” என்று. மகன் மீது கரிசனம் போல. மறைமுகமாக மனைவியின் காலை வாருவார். சந்தானம்.

கண்டுகொண்டு. “என்னமோ. வீட்டில் நல்ல சாப்பாடே சாப்பிட்டதில்லை போலப் பேசுகிறீர்களே! சாப்பாடு பிடிக்காமல்தான். டாக்டர் உங்களை பருமனைக் குறைக்கச் சொல்லி. விரட்டோ விரட்டென்று விரட்டுகிறார் போல? அப்பாடியோவ்! ஓர் இணுக்குக் கிடைத்துவிடக் கூடாதே! வாய்ப்புக் கிடைத்தது என்று. வைத்து வாங்கி விடுவீர்களே!” எனபாள் கோகிலா.

“கேட்டுக்கொள் மகனே! என்னமோ நான் வைத்து வாங்குகிறேனாம். உனக்குப் பரிந்து இரண்டு வார்த்தை பேசினேன். அதற்குத் திட்டி இவ்வளவு பேசிவிட்டு. என்னைக் குற்றம் சொல்வதைப் பாரேன்!” என்று அதிசயப்படுவார் தந்தை.

“பின்னே? உங்கள் அம்மா கற்றுக் கொடுத்து. அதை அப்படியே செய்து வைக்கிற சமையல்காரம்மா. பிடிக்கவில்லை என்றால். அவளிடம் சொல்லாமல். என்னமோ நான் சமைத்து வைத்தது போல...

.ஓகோ  என்னைச் சொல்லவில்லை! இருக்கட்டும். இருக்கட்டும்! நாகம்மாவிடம் முதலில் போட்டுக் கொடுத்து விடுகிறேன்!" என்று. குதூகலத்துடன் தாயார் மிரட்டுவாள்.

தன்னைப் பெற்றவளின் கையில் தயாரான நாகம்மையிடம். சந்தானத்துக்கே பயம் உண்டு. அவளது சமையலைக் குறை சொன்னால். நீட்டி முழக்கிக்கொண்டு. பழைய கதைகளோடு வந்து விடுவாள்.

காலைப் பிடிக்காத குறையாக மனைவியிடம். தந்தை கெஞ்சுவதைப் பார்த்துச் சிரித்தபடியே. வசீகரன் அலுவலைப் பார்க்கக் கிளம்பி விடுவான்.

இலகுவான கேலியும் சிரிப்புமாக. எப்படிப்பட்ட குடும்பம் அவனுடையது என்று எண்ணிப் பூரிக்கும்போதே. அவன் முகத்தில் இருள் படிந்தது!

இந்த இனிய குடும்பத்தின் நிம்மதியே கொஞ்ச காலம் தொலைந்து போயிற்றே! எல்லாம் அந்தப் பாதகியால்  .......குடும்பமே சிதறிவிட்டதே!

அந்தக் காயங்கள். அதன் வடுக்கள் எல்லாம் ஒருவாறு மறைய. கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன! இயல்பான பேச்சு. சிரிப்பு எல்லாம். பெருமளவு மாதிரி தலை தூக்குவதற்கு.

இதைப் போய் மறுபடியும் அழிப்பதற்கு. அவன் எப்படி ஒப்புவான்?

எப்படியும். இன்றிருக்கும் நிம்மதியேனும். நிலைத்தே தீர வேண்டும்! இதையும் கெடுத்துக் கொள்ள. அவன் ஒருபோதும் ஒப்ப மாட்டான்.

கல்யாணப் பேச்சை இனி எடுக்கவே கூடாது என்று அம்மாவிடம் கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும்.

அன்று நண்பன் ஒருவனுடைய தந்தையோடு. வசீகரனுக்கு ஒரு சந்திப்பு இருந்தது. மகனுக்குப் புத்தி சொல்வதற்காக. அவனை அழைத்திருந்தார் தந்தை. ஆனால். அந்தத் தந்தையிடமே. தன் காதலைச் சொல்லி. தந்தையின் ஒப்புதலை உடனே வாங்கும்படி. நண்பன். அவனது காதுக்குள்ளேயே. காகமாகக் கரைந்தான்.

ஓரளவு பெரிய ஹோட்டல்தான். பழைய பாரம்பரியத்தை அப்படியே கடைப்பிடிக்கிறவர்கள். பெரியவரை உட்கார வைத்து. வேண்டியது ஆர்டர் கொடுக்குமாறு கூறிவிட்டு. வசீகரன் கையைக் கழுவச் சென்றான்.

கழுவிவிட்டு வந்து பார்த்தால். காலியாகக் கிடந்த அடுத்த மேஜைக்கு ஆள் வந்து. சர்வர். அந்தக் கும்பலிடம் ஆர்டர் எடுத்துக் கொண்டிருந்தான்.

எல்லோரும் இளம் பெண்கள்.

“இங்கே வெங்காய பஜ்ஜியும் போண்டாவும் ரொம்ப நன்றாக இருக்கும்ப்பா! பழைய ஃபில்டர் காஃபியாம். அதற்கு. எங்கள் பெரியப்பா ரொம்ப அலட்டுவார். அதனால்தான். ட்ரீட்டுக்கு இங்கே கூட்டி வந்தேன்.” என்றது ஒரு பெண்குரல்.

“நம்பாதீங்கப்பா. பர்கர். பீட்சா என்று போனால் பர்ஸ் மெலிந்துவிடும் என்று. இந்தக் கதை சொல்லுகிறாள்.” என்றாள் இன்னொருத்தி.

“ஏய். சாப்பிட்டுப் பாருங்கள். பிடிக்கவில்லை என்றால். அங்கேயும் கூட்டிப் போகிறேன்.” என்ற முதல் குரல். “மூன்று ப்ளேட் பஜ்ஜி. மூன்று … “ என்று ஆர்டர் கொடுக்கத் தொடங்கியது. “

கையைக் கழுவிக்கொண்டு வெளியே வந்த வசீகரனுக்கு ஆத்திரம் பொங்கியது.

நண்பன் சிவநேசனுடைய தந்தை சிவனே என்று உட்கார்ந்திருக்க. புதிதாக வந்து. அடுத்த மேஜைமுன் உட்கார்ந்திருந்த இளம் பெண்களிடம் ஆர்டர் எடுத்துக் கொண்டிருந்தார். ஹோட்டல் பரிசாரகர்.

அவன் கோபமாகக் கை தட்டி அழைக்க. “பொறுங்கள் சார். இங்கே முடித்துவிட்டு வருகிறேன்.” என்றார் சர்வர்.

“ஹலோ. நாங்கள்தான் முதலில் வந்தவர்கள். முதலில். இங்கே ஆர்டர் எடுங்கள்.” என்றான் அவன் கடுப்புடன்.

அவனது குரலில். அவனுக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்த பெண். சட்டெனத் திரும்பிப் பார்த்தாள்.

அந்த அவள்! கல்யாண வீட்டு மின்னல் சிரிப்புக்காரி!

ஒரு கணம் அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை. தலையைத் திருப்பிக்கொண்ட அந்தக் அந்தக் க்யூ பெண். சன்னக் குரலில் ஏதோ சொல்லியிருக்க வேண்டும்.

“மெல்லச் சொல்லிக் கொள்வதா? என்னப்பா. திடீர் புத்தர் புத்தி? நாம் இன்னும் தியேட்டருக்குப் போக வேண்டும். மறந்துவிட்டதா? கண்டதையும் உளறாமல். வாயை மூடிக்கொண்டு சாப்பிட மட்டும் செய்?” என்று மற்ற தோழியர் பாய. “வாயை மூடிக்கொண்டு எப்படிச்

சாப்பிடுவதாம்?” என்ற சிறு திருப்பலோடு. அந்தப் பெண் வாதாடலை நிறுத்திக் கொண்டாள்.

வசீகரனும். திகைப்பை மறைத்துக்கொண்டு. “சரிசரி. சீக்கிரமாக அங்கே முடித்துக்கொண்டு வாருங்கள். கூடவே. எங்களதையும் சேர்த்தே எடுத்துக்கொண்டு போங்கள்.” என்று. எரிச்சலை மறையாத குரலில் விட்டுக் கொடுத்தான்.

பரவாயில்லை அவள் ஒருத்திக்கேனும். கொஞ்சமேனும் நியாய புத்தி இருக்கிறதே என்று அவன் எண்ணும்போதே. சர்வர் வந்துவிட. “என்ன கொண்டு வரச் சொல்லட்டும். அங்கிள்?” என்று பெரியவரிடம் திரும்பிக் கேட்டான்.

ஏதோ ......எதையோ கொண்டாடுவதற்காக வந்தார்கள் போலும். அந்தப் பெண்களின் குதூகலமும் கும்மாளமும். சிவநேசனுடைய தந்தையோடு ஆழ்ந்து பேசச் சற்று இடையூறாகவே இருந்தது.

ஆனால். ஹோட்டலில் விருந்துண்ண வந்தவர்களை “வாயை மூடுங்கள்” என்று எப்படிச் சொல்வது? சொன்னால் கேட்பார்களா. என்பது வேறு.

ஆனால். இரண்டு முறை பேச்சை நிறுத்தி. எரிச்சலோடு அவன் லேசாகத் தலையைத் திரும்பிப் பார்க்கவும். அதிகப்படிச் சத்தம் விரைவிலேயே அடங்கிவிட்டது.

வசீகரனாலும். பெரியவரோடான பேச்சில். முழுக் கவனத்தையும் செலுத்த முடிந்தது.

பெரியவரை மனம் குளிர வைத்து நண்பனின் கோரிக்கையைப் பற்றி நல்லவிதமாகச் சிந்திக்கும் மன நிலைக்கு அவரைக் கொணர்ந்து முடிக்கும்போது. தோழியர் கூட்டம். கிளம்பிப் போயிருந்தது.

எந்த சினிமா தியேட்டரில் கலக்கிக் கொண்டிருக்கிறார்களோ என்று அவன் நினைக்கையில். “ஜாதி மதமெல்லாம் எனக்கும் ரொம்பப் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால். இங்கே கத்திக் கொண்டிருந்தார்களே. அந்த மாதிரிப் பெண்ணாக இருந்தால் என்ன செய்வது என்கிற ஒரு கவலைதான். சத்யாத் தம்பி.” என்றார் நண்பனுடைய தந்தை.

“அப்படி இருந்தால். சிவா அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்திருக்கவே மாட்டானே. அங்கிள். அத்தோடு. அவர்களிலும் ஒரு பெண் நியாயமாகத்தானே பேசினாள்? அவள் மெல்ல ஏதோ சொல்லவும். அதற்குப் பிறகு சத்தம்கூடக் குறைவாகத்தானே இருந்தது? “ என்று

அவரிடம் ஏதோ கூறி சமாளித்தான் சின்னவன்.

கூடவே. அந்தப் பெண்ணுக்காக வக்காலத்து வேறு வாங்கும்படி ஆகிவிட்டதே என்று தோன்ற. எல்லாம் சிவநேசனுக்காகத்தான் இல்லாவிட்டால் அங்கிள் மறுபடியும் மலையேறி விட மாட்டாரா என்றும் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

ஆனால். சந்தித்த ஒவ்வோர் இடத்திலும். அவளுக்காக ஏதாவது செய்யும்படிதான் முடிகிறது! பெரிதாக எதுவும் இல்லைதான். என்றாலும்... இத்தனைக்கும் அவளது பெயர் கூட. அவனுக்குத் தெரியாது!

போகட்டும்.. போகட்டும்! எந்தப் பெண்ணின் பெயரும் அவனுக்குத் தெரிந்தாக வேண்டும் என்கிற அவசியம் அவனுக்கு. நிச்சயமாகக் கிடையாது! அந்தத் தேவை ஒருபோதும் வரவும் வராது!

அடுத்த பல நாட்கள். சில வாரங்கள் என்றே சொல்லாம். வேலையில் முழுகி என்றால். வசீகரன் நிஜமாகவே வேலையில் முழுகிக் கிடந்தான்!

புதிதாக எடுத்துக் கொண்டிருந்த நிறுவனம். பெயர் பெற்ற நிதி நிறுவனமே. ஆனால். சமீப காலமாகச் சற்றுத் தட்டித் தடுமாறுவதாக. உள் தகவல் ஒன்று கிடைத்தது.

சும்மாவே. வசீகரனுக்கு நிதி நிறுவனம் ஒன்று தொடங்கும் விருப்பம் இருந்தது. புதிதாகத் தொடங்குவதை விட. நாலு பேர் அறிந்த நிறுவனம் என்றால். சீக்கிரமே உயரக் கொண்டுவருவது எளிது என்பது அவனது கருத்து.

நிதி நிறுவனம் சரியும் நிலை வெளியே தெரிந்தால். அடியோடு அழிவதுதான் இயல்பு. ஆனால். வெளியே விஷயம் கசியுமுன். அதைக் கைப்பற்றிக் கணிசமாக முதலீடும் செய்தால். தொழில் லாபகரமாகவே நடக்கும் என்ற அவனது வாதத்தைத் தந்தையும் ஒத்துக் கொண்டார்.

அப்படி வாங்கியதுதான். "விருத்தி" நிதி நிறுவனம்.

பிள்ளைகள் இருவரும் வெளி நாடுகளில் குடியேறி. கூடவே இணை பிரியாதிருந்த மனைவியும் மறைந்துவிட்ட பிறகு. நிறுவனத்துடைய உரிமையாளர் கதிரேசனுக்கு. தொழில் நடத்துவதில் ஆர்வம் அழிந்து போயிற்று.

உழைக்கும் வலுவும் குறைந்துவிட. கையை உதறிக்கொண்டு சென்றுவிடவே விரும்பினார். அவர்.

அவரைத் தடுத்துக் கொண்டிருந்தது. பல்லாண்டு காலமாக அவரோடு இணைந்து உழைத்தவர்கள். ஆனால். இருக்கும் அலுவலர்கள் அனைவரையும் சேர்த்தே பராமரிக்கப் போவதாக வசீகரன் வாக்குக் கொடுக்கவும். மன நிம்மதியுடனேயே. “விருத்தி”யை அவனிடம் ஒப்படைத்தார் கதிரேசன்.

சம்பளப் பட்டுவாடா. பல்வேறு வாடிக்கையாளர்கள் குறிப்புகள் கணக்கு வழக்குகள் என்று அத்தனை விஷயங்களையும் ஆய்வு செய்து. பலவீனமானவற்றைத் வலுப்படுத்தி. இன்னும் அறவே பயன் அற்றவைகளைக் களைந்து... தொழிலை வளர்ப்பது குறித்து. வசீகரனுக்கு நிறையவே வேலையிருந்தது.

அதிலும். இந்தத் துறையில் கால் பதிப்பது அவனது யோசனை என்பதால். சிறு தவறு கூட நேர்ந்து விடக் கூடாது என்பதில் அவன் வெகு கவனமாக இருந்தான்

கூடவே புதிய தொழில் என்பது வேறு.

கணக்கு வழக்குகளை ஊன்றிக் கவனித்தபோதுதான். தொழில் சரியத் தொடங்கியதன் காரணம். காரணங்கள் அவனுக்குப் புலப்பட்டன.

வரவுக்கு மீறிய செலவு. புழக்கத்தில் விடக் கூடிய தொகையை மீறிக் கடன் கொடுக்கப் பட்டிருந்தது.

கூடவே. பண வசூலில் மெத்தனம்! மெத்தனமோ. அல்லது கறாராக வசூலிக்கும் சக்தியில்லையோ?

எல்லாவற்றையும் விட. தொழிலை நடத்தும் ஆர்வம். முதலாளிக்கு இல்லாது போனதுதான். சரிவின் மிக முக்கியமான காரணமே என்பது. வசீகரனின் அபிப்பிராயம்!

எல்லாமே சீர்செய்து விடக் கூடிய சாதாரணப் பிரச்சினைகள்! ஆனால். உடனே செய்தாக வேண்டியவை.

வசீகரன் முனைப்புடன் வேலையைத் தொடங்கினான்.

முதலில். நிறுவனத்தின் மீதான நம்பிக்கையைப் பெருக்கும் விதமாக. வைப்பு நிதிகளுக்கான வட்டித் தொகைகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைத்தான்.

அடுத்து. “விருத்தி” நிறுவனத்திடம் கடன் வாங்கியவர்களின் பட்டியல் எடுக்கப்பட்டது

தனிப்பட்டவர்களில். பணம். வட்டி தராதவர்களுக்கு  கண்டிப்பைக்

காட்டும் விதமான கடிதங்களே முதலில் அனுப்பப் பட்டன. குறிப்பிட்ட தேதிக்குள் பபணத்தைக் கட்டவில்லை என்றால். சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எச்சரிக்கையுடன்.

அடுத்து. பல தொழில் நிறுவனங்களுக்குக் கதிரேசன் கடன் கொடுத்திருந்தார். நிதி நிறுவனம் நடத்தும்போது. இது போலக் கடன் கொடுப்பதுதான். அவர்களது தேவைக்குக் கொடுக்கும்போது. அந்தந்தத் தொழில்கள் வளரும். அவர்கள் வட்டியோடு திருப்பித் தரும்போது. நிதி நிறுவனமும் வளரும். நிதி நிறுவனத்தின் அசமஞ்ச நிலையைப் பயன்படுத்திக்கொண்டு. கடனைக் கட்டுவதில் சிலர் காலம் தாழ்த்தி வந்தனர். ஆனால். வசூலுக்கு ஓர் ஆளை ஏற்பாடு செய்தால். இந்தக் கடன் எளிதாகத் திருப்பிக் கைக்கு வந்து விடும்!

இன்னும் ஒரு வகைக் கடன்களையும் கதிரேசன் கொடுத்திருந்தார். அது. தொழில் வளர்ச்சிக்கான கடன். தொழிலைத் தொடங்கவோ. விரிவாக்கம் செய்வதற்கோ என்று பலருக்கும் பணம் கொடுத்திருந்தார்.

சிலரிடம் பின் தேதியிட்ட காசோலைகளை வாங்கி வைத்திருந்தார். சிலருக்குத் தேவைக்குப் பணத்தைப் படிப் படியாகக் கொடுத்துக்கொண்டே இருந்து. விரிவாக்கம் முடிந்த பிறகு. மொத்தப் பணத்தையும் பொதுவான கடன் முறையில் திரும்பப் பெற. ஏற்பாடு செய்திருந்தார்.

ஓரளவு கல்விக் கடன் மாதிரியாக.

ஆனால். இந்த வகைப் பட்டுவாடாவில்தான். நிறையக் குளறுபடிகள் நேர்ந்திருப்பதாக. வசீகரனுக்குத் தோன்றியது .

கல்விக் கடன் லாபத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. மாணவர்களுக்கு உதவி செய்யும் குறிக்கோளில் ஏற்படுத்தப்பட்டது.

ஆனால். தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுக்கும்போது. அது போல வாபத்தை விட்டுக் கொடுக்க முடியாது  கூடாது!

கதிரேசனும். ஒரு பக்கம் பணத்தைக் கொடுத்துக் கொண்டே. மறுபுறம். ஓரளவு பணத்தைத் திருப்பி வாங்கத்தான் செய்திருந்தார். ஆனால் பெயரளவுக்குத்தான்.

அவர். பாவம். பரிதாபம் பார்த்திருப்பது போல. வசீகரனுக்குத் தோன்றியது.

எந்தத் தொழிலிலுமே. உணர்ச்சிகளைக் கலப்பது சரியல்ல என்பது. அவனது தெளிவான கருத்து!

நல்லவேளையாக இது போலக் கதிரேசன் பாவம் பார்த்துப் பணம் கொடுத்திருந்த நிறுவனங்கள். வெகு சிலவாகத்தான் இருந்தன. மூன்றுதான்.

அந்த மூன்று நிறுவனங்களோடான ஒப்பந்தங்கள். நிறுவனங்களைப் பற்றிய விவரங்களை அலசி ஆராய்ந்துவிட்டு. “விருத்தி”யின் புதிய நிர்வாகத்தின் விதிகளை அவைகள் ஏற்குமாறு செய்ய வேண்டும் என்று திட்டமிட்டான் அவன்.

அப்படி ஆராய்ந்தபோது. எதிர்பாராத பேரதிர்ச்சி ஒன்று. அவனுக்குக் காத்திருந்தது!

# அத்தியாயம் - 3

சில நாட்களாகவே. அந்த வீட்டில் எல்லோரது மனநிலையும் சற்று டல்லாக... சோர்வாகத்தான் இருந்தது. உற்சாகத்தை வலிந்து வரவழைக்கவும் வேண்டியிருந்தது.

தந்தையின் இழப்பிலிருந்து தேறுவதற்குக் கிட்டத்தட்ட ஓர் ஆண்டு காலம் ஆகிவிட்டது. ஒருவாறு மீண்டுவிட்டோம். தலை நிமிரலாம் என்று பார்த்தால். அதற்குள் இப்படி ஓர் இடி! இடிதான் என்று ஒரேயடியாக நிச்சயமில்லை என்றாலும். எதையும் முழு நம்பிக்கையோடு எதிர்பார்க்கும் தைரியம். அவர்களில் யாருக்கும் வரவில்லை.

ஏனெனில். குடும்ப நண்பரான கதிரேசனைப் போல. அவரது நிதி நிறுவனத்தின் புதிய நிர்வாகம். அவர்களது நிலை உணர்ந்து செயல்படுவது சந்தேகமே!

நிதி நிறுவனம் கை மாறிவிட்டது பற்றித் தெரிவித்த கதிரேசனே. அப்படித்தான் சொன்னார்.

அலுவலர்களை அப்படியே வைத்துக் கொள்ளச் சம்மதித்திருக்கும் புதிய நிர்வாகம். தொழிலில் லாபத்தையே முதன்மையாகக் கருதியே செயல்படும் என்பதை உறுதியாகவே கூறியதாம்.

எதிர்பார்க்கப்பட வேண்டிய விஷயம்தான். யாரும் நஷ்டத்துக்குத் தொழில் நடத்த மாட்டார்கள். கதிரேசனுமே அப்படித்தான். ஆனால். பெரிய லாபத்துக்குப் பழகியவர்கள். எதையும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

பழக்க தோஷத்துக்காகக் கதிரேசன் செய்துவந்த உதவியைப் புதிய நிர்வாகமும் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால். எப்படியாவது. இன்னும் கோஞ்சம் கொஞ்சமென்ன. ஓரளவு நிறையக் கடனுதவி கிடைத்தால்தான். அவர்களது நிலைமை சரியாகும்.

இப்போது. முக்கால் கிணறு தாண்டிய நிலையில் அல்லவா. இருக்கிறார்கள்!

வங்கிக் கடன் வாங்கலாம். ஆனால். இவ்வளவு கிடைக்காது. உடனடியாகக் கிடைப்பதும் கடினம்!

தன் கலக்கத்தை மறைத்துக்கொண்டு. தாயார் பகவதி எப்போதும் உற்சாகமாக இருப்பது போலவே காட்டிக் கொண்டாள். இல்லை என்று எதிர்மறையாக ஏன் நினைக்க வேண்டும் என்பாள். முடிந்த வரை

முயற்சி செய்து பார்க்கலாமே என்பது. அவளது கருத்து.

அவளுடைய சின்ன மகள் எப்போதுமே. கொஞ்சம் துடிப்பானவள்.தாய் கவலையோடு எண்ணியதையே. அவள் உற்சாகத்துடன் எதிர்பார்த்தாள்.

புதியவர்களிடம் பேசுவோம்.. அவர்களும் மனிதர்கள்தானே? பெண்களாக நடத்துகிறார்கள் எனும்போது. பணத்தையும் ஒழுங்காகக் கொடுத்துவிடத் தயாராக இருக்கும்போது. அவர்கள் மனதில் இளக்கம் தோன்றாதா. என்ன. என்கிறவள். அவள்.

ஆனால். பெரியவள் மதிவதனி பற்றித்தான் பகவதிக்குக் கவலை. கணவனும் மனைவியுமாகப் பார்த்துப் பார்த்துப் பராமரித்துதான். அவளை இந்த நிலைக்குக் கொண்டுவந்தார்கள். அவளைத் தொழிலில் முழுமையாக ஈடுபடுத்தியதும் அப்படியே. தொழில் வளர. வளர. சொந்த சாதனை போல. அவளது முகம் பூவாய் மலரத் தொடங்கியிருந்தது.

அந்த நிலையில். தந்தையின் மரணம் அவளை முன் போல நத்தையாய்ச் சுருட்டிக்கொள்ள வைத்துவிடுமோ என்று பகவதிக்குப் பெரும் அச்சமாக இருந்தது. அன்பான கணவரின் இழப்பு. அவளுக்கே தாங்க முடியாத துயரமே. ஆயினும். கணவரின் கடைசி நேரத்து கலக்கத்தை நீக்க. அவள் அவருக்குக் கொடுத்த வாக்குறுதிக்காக. தொழில். தொழிலில் தந்தையின் ஆசை என்று மூத்த மகளை இந்த விரிவாக்கம் பற்றிச் சிந்திக்க வைத்து. ஆர்வமாகச் செயல்படவும் செய்திருந்தாள்.

முதலில். பெண்களின் உள்ளாடைகளுக்கு மட்டுமான கடைதான் அது. அதுவுமே. பகவதியின் ஆலோசனையின் பேரில் வைக்கப்பட்டதுதான்.

மகேசுவரனை மணக்குமுன். ஒரு ரெடிமேடு கடையில்தான். பகவதி வேலை செய்தது. அவள் வேலை செய்த கடையில் மட்டுமின்றி. இன்னும் பல ரெடிமேடு துணிக்கடைகளிலும் கூட. உள்ளாடைகளுக்கு அதிய முக்கியத்துவம் கொடுத்து. நிறைய அளவில் விற்பனைக்கு வைப்பதே கிடையாது என்று. அவள் கண்டிருந்தாள். எனவே உள்ளாடைக்கு மட்டுமாவே தனியாகக் கடை வைத்தால். நன்கு விற்கும் என்ற எண்ணம் பகவதிக்கு.

மனைவியின் விருப்பம் போலத் தொடங்கிய கடை. நன்றாக வளரவே. அதை இன்னமும் வளர்ப்பது பற்றி. ஓரிரு ஆண்டுகளாக மகேசுவரன் யோசித்தவர்தான். “உங்களுக்காக” என்று கடைக்குப் பெயர் வைத்ததே. என்றோ ஒரு நாள் என்றோ ஒரு நாள் விரிவாக்கம்

செய்யும்போது. ஆண் பெண் இரு பாலருக்கும். அவர்களிலும் எல்லா வயதினருக்கும் உடைகள் வைக்கும்போதும். கடைப் பெயர் பொருத்தமாக இருப்பதற்காகத்தான். எல்லா ஆனால். யோசித்து முடிவெடுக்குமுன். ஏதேதோ நடந்து. அவரது விதியும் முடிந்துவிட்டது.

ஒன்றிலிருந்து ஒன்றாக. மகள் துயரங்களைப் பெருக்கிக் கொள்ளக் கூடாது என்று. கடையில் ரெடிமேடு ஆடைகளை வைப்பது பற்றிய தந்தையின் ஆசையை அவளிடம். பகவதி எடுத்துரைத்தாள்.

ஏற்கனவே. மதிவதனியும் இதே வளர்ச்சித் திட்டம் பற்றி. தந்தையிடம் ஓரிரு முறை குறிப்பிட்டது உண்டு. எனவே. கடையை வளர்க்கும் அந்த ஆவலை விடாமல் தூண்டிவிட்டு. அது பற்றிய சிந்தனையில் மகளின் மனதைப் பகவதி முழுதாகத் திருப்பிவிட. மகளும் அதையே உறுதியோடு பற்றிக் கொண்டாள்.

அவர்களது கடை இருக்கும் இடம். இப்போது அவர்களுடையதே. அதை வாங்கவே. கையில் இருந்த பணம் கிட்டத்தட்டக் காலியாகியிருந்தது.

இடத்தைக் காட்டிக் கதிரேசனிடம் கடன் பெற்றுதான். பக்கத்து இடத்தையும் எடுத்து. முதலில் சிறுவர்களுக்கான ஆடைகளை வைத்தார்கள். அது ஓரளவு நிலைக்கு வரும்போதே. கடைக்கு மேலே உள்ள இடமும் முழுதாகக் கிடைக்க. அதில் பெண்களின் உடைகளைப் பெரிய வைப்பதற்கான வேலையைத் தொடங்கினார்கள். “ஷோ கேஸ்”. “கவுன்டர்” முதலியன அமைக்கும் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

கடனும் பெரிய அளவில் ஏறிற்று. என்றாலும். பெண்கள் உடைகளை வைத்ததும். எல்லாமே கட்டுக்குள் அடங்கிவிடும் என்ற நிச்சயம். அவர்கள் மூவருக்குமே இருந்தது.

கடன் தந்த கதிரேசனுக்கும் அதே எண்ணம்தான்! அந்தக் குடும்பத்தைப் பற்றி நன்கு அறிந்தவர் என்பதால். பணம் திரும்பிவிடும் என்கிற நம்பிக்கை. அவருக்கு இருந்தது. அதனால். உரிமையாளர் என்கிற முறையில். ஈட்டுக்கு அதிகமாகப் பணம் தரவும். அவர் தயங்கவில்லை.

எல்லாமே நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது. கடன் கொடுத்துப் பண உதவி செய்து கொண்டிருந்த கதிரேசனின் நிதி நிறுவனம். அடுத்த கைக்கு மாறும் வரை!

ஆனால். மூத்த தலைமுறையாகப் பகவதி அஞ்சிய அளவுக்குப்

பெரிய மகள் மதிவதனியும். அப்படி ஒன்றும் கவலைப்பட்டு ஓய்ந்து விடவில்லை. படிக்கும்போது அவ்வப்போதும். படிப்பு முடிந்ததில் இருந்து. ஓர் ஆண்டாக. முழு நேரமும் கூடவே இருந்து உதவி வரும் தங்கையின் கலகலப்பும் உற்சாகமும் அவளையும் தொத்தி விட்டிருந்ததால். வரட்டும் பார்க்கலாம் என்ற மனோ பாவமே. அவளுக்கும் வந்திருந்தது.

எது நடப்பதாக இருந்தாலும். அதது நடக்கும்போது தெரிந்து கொள்ளலாம். அதை நினைத்து. இப்போது வேறு எதற்காகக் கவலைப்பட வேண்டும்?

"நம்மை மீறி என்னக்கா?" என்பாள் மயூரி. "எல்லாம் கொஞ்சம் தாமதமாக நடக்கும்!  கிளைக் கடைகளை. இந்த ஆண்டே தொடங்குவது மாறி. மூன்றோ. நாலோ ஆண்டுகள் சென்றபின். கொஞ்சம் பணத்தைச் சேர்த்துக் கொண்ட பிறகு. இந்த விரிவாக்கத்தைத் தொடங்கி செய்ய வேண்டியதுதான். கதிரேசன் சாரிடம் பணம் கேட்கும்போதே. கடன் கிடைக்காவிட்டால்

என்று நாம் போட்ட மாற்றுத் திட்டம் அதுதானே? அத்தோடு ஒரு சில ஆண்டுகள் காத்திருக்க முடியாதபடி. நாம் ஒன்றும் கிழடு கட்டைகள் அல்லவே! அம்மாவையும் சேர்த்துதான் சொல்கிறேன்." என்று நம்பிக்கையோடு கூறுவாள்.

தங்கை  சொல்லும்போது சரியென்று மதிவதனிக்கும் தோன்றினாலும். பெண்கள் ஆடைப் பிரிவு செயல்படாமல். கடனைத் திருப்புவது கடினம் என்பதை. அவள் உணர்ந்தே இருந்தாள்.

ஆயினும். "பிரச்சினை வந்தால். அதை அப்போது பார்த்துக் கொள்ளலாம். எப்படியும். இதுவரை கதிரேசன் சார் தந்த பணத்துக்கு. முறைப்படியான பத்திரங்கள் இருக்கின்றன. புதியவர்களால். அதை ஒன்றும் பண்ண முடியாது. மேற்கொண்டு தருவதில்தான் தகராறு செய்ய முடியும். வட்டி கொஞ்சம் அதிகமாகத் தருவதாகச் சொல்லலாம்.. ஒருவேளை அதற்கு ஒத்து வரவில்லை என்றால். அடுத்த வழியைக் கடைப் பிடிக்க முயற்சிக்கலாம்." என்று அவளும் தன் வழக்கமான பணிகளை. எப்போதும் போலக் கவனிக்கலானாள்.

மக்களின் மனம் தாயிடமும் பிரதிபலித்தது.

எல்லோருமே அவ்வப்போது கலங்கினாலும். உடனே திடமும் தென்புமாகத் தங்களைத் தாங்களே நிமிர்த்தியும் கொண்டார்கள்.

அன்றும் அப்படித்தான்.

"ரெடிமேடு" ஆடைகள் சிலவற்றுக்கு "ஆர்டர்" கொடுப்பது பற்றி.

அக்காவும் தங்கையும் கலந்து ஆலோசித்தார்கள்.

அதன்படி. “டெயிலரிங் ஹவு”சுக்குச் சென்று. வெய்யில் காலத்துக்கு ஏற்றவாறு. ராம்பர். ஷார்ட்ஸ் போன்ற சிறுவர் உடைகளுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு. மயூரி அப்போதுதான் திரும்பி வந்தாள்.

கடைக்குள் செல்லப் படியில் கால் வைத்தபோது. கடை வாயிலுக்கு நேர் எதிராக ஒரு நீளக் கார் வந்து நின்றது. காரை நிறுத்திவிட்டு. டிரைவர் ஓடி வந்து காரின் பின் கதவைத் திறந்து விட்டார்.

தன் போக்கில் படியேறியபடியே திரும்பிப் பார்த்தால். காரிலிருந்து. அந்த கல்யாண வீட்டில் குறுக்கு வழியில் பரிசு கொடுக்கச் சென்ற இளைஞன் இறங்கினான்.

இவன் எங்கே. இங்கே வந்தான்?

இது. பெண்களின் உள்ளாடை. சின்னஞ் சிறார்களுக்குத் தேவையான உடைகள் மட்டும்தானே இந்தக் கடையில் இருக்கும்? இங்கே. இவன் என்ன வாங்க வந்திருப்பான்!

எந்தப் பெண்ணுக்கும் உள்ளாடை வாங்கிக் கொண்டு போய்க் கொடுக்கிறவன் போல. இவனைப் பார்த்தால் தெரியவில்லை

ஒரு வேளை. இவனுக்குத் திருமணமாகிக் குழந்தைகள் இருக்கிறார்களோ?

அந்தக் குழந்தைகளுக்காக. ஆடைகள் வாங்கிப் போக வந்தானா?

இல்லையே! திருமணம் செய்து கொள்ளச் சொல்லித்தானே. இவனுடைய தாயார் கேட்டார்கள்? ஒரு வேளை. யாராவது நண்பர் வீட்டுக் குழந்தைக்கு

யோசிக்கும்போதே. மேலே செல்லாமல் அவளது கால் தயங்கியது.

அதற்குள் நிமிர்நது பார்த்துவிட்ட அவனும் முறுவலித்தான்.

நடைபாதையைக் கடந்து வந்தபடியே. “என்ன இங்கே? “ என்று அவன் வினவிய அதே நேரத்தில். அவளது குரலும் அதே வார்த்தைகளை உதிர்க்க. தன்னையறியாமல். இருவர் முகங்களிலும் முறுவல் மலர்ந்தது.

மனதில் தோன்றிய கேள்வியை “இங்கே என்ன வாங்க... “ என்று அவள் தொடங்கும்போதே. அவனுடைய காரோட்டி பலமாக இருமும் சத்தம் கேட்டது.

வாயைப் பொத்தியிருந்த கையையும் மீறி வெளி வந்த சத்தம்.

சட்டெனக் கையிலிருந்த செல்லில் யாரையோ அழைத்து. மயூரி பேசினாள்.

கைகாட்டிக் காரோட்டியை அழைத்தான் அவன். பாக்கெட்டினுள் கைவிட்டு. பணத்தை எடுத்துக் காரோட்டியிடம் கொடுத்து. “ஏதாவது காஃப் டிராப் வாங்கிப் போட்டுக்கொள்.” என்றுவிட்டு. மயூரியை நோக்கி மேலே நடந்தான்.

அருகில் வந்ததும். “எங்கே போனாலும். முன்னே. பின்னே தகராறு வருகிறது. ஏதோ ஆசையாக வாங்க வந்திருப்பீர்கள். இன்று. பெண்களுக்கு முதலிடம். உள்ளே போகலாமே!” என்று முன்னே செல்லுமாறு புன்னகையோடு கை காட்டினான்.

அதற்குள். தோளில் அடையாள வில்லை மாட்டியிருந்த ஒரு பெண். கையில் “யூஸ் அன்ட் த்ரோ” தம்ளருடன் வெளியே வந்தாள்.

மயூரியின் கண்ணசைவில். காரோட்டியிடம் சென்று “வெந்நீர்.” என்றுரைத்து. டம்ளரைக் கொடுத்தாள்.

“எனக்கா?” என்று டிரைவர் வியப்புடன் கேட்க. “ஆமாம் சின்னக்கா ஃபோனில் சொன்னாங்களே. குடித்துவிட்டு. டம்ளரை அந்தக் குப்பைத் தொட்டியில் போட்டு விடுங்கள்.” என்று. சற்றுத் தள்ளியிருந்த தொட்டியையும் காட்டிவிட்டு உள்ளே போனாள் அந்தப் பெண்.

“ரொம்ப நன்றிம்மா.” என்ற காரோட்டியிடம் தலையாட்டிவிட்டு. மயூரி திரும்பினால். வசீகரன் முகத்தில் புன்னகை மறைந்திருந்தது.

முன்பு காட்டிய மரியாதையும் மறைய. “அந்தப் பெண் சின்னக்கா என்றாளே. இங்கே நீ யார்?” என்று. சிறு புருவச் சுருக்கத்துடன் விசாரித்தான்.

“இது எங்கள் கடைதான். உள்ளே வாருங்கள். நீங்கள் என்ன வாங்க வந்தீர்கள்?” என்று. திரும்பி நடந்து கடைக்குள் சென்றவாறே. அவனிடம் வினவினாள் அவள்.

“நான் எதையும் வாங்க வரவில்லை!”

மாறியிருந்த குரலில் சற்றுத் திகைத்து. “பிபின்னே?” என்று. மயூரி விசாரித்தாள்.

“கடை உரிமையாளரிடம் . சில கணக்கு வழக்குகள் பேச வந்தேன்.” என்றான் அவன். பழைய கறார்க் குரலிலேயே.

“கணக்கு?.......................................................................................நீநீங்கள் ...............................................................................................................”

“விருத்தி நிதி நிறுவனத்தின் புதிய முதலாளி. வசீகரன்.” என்று அவளது குழப்பத்தைத் தீர்த்து வைத்தான் அவன்.

தோற்றத்துக்குப் பொருத்தமாகவே பெயர் வைத்திருக்கிறார்கள் என்று அவளது எண்ணம் ஓடும்போதே. அவன் தொடர்ந்து பேசினான்.

““விருத்தி”யோடான. உங்கள் கடன் பிரச்சினைகளை ஒழுங்குபடுத்த வந்திருக்கிறேன்.” என்று. அந்த “ஒழுங்குபடுத்த”வில் ஓர் அழுத்தத்துடன்  கூறி. அவனிடம் எந்த விதமான இளக்கத்தையும் அவர்கள் எதிர்பார்க்க முடியாது என்பதையும். குறிப்பாக அறிவித்தான்!

அதாவது. கழுத்தில் கத்தி வைக்கும் உத்தேசத்தோடு வந்திருக்கிறான்.

ஒரு கணம். மயூரிக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது. இவன். வேறு யாராகவேனும் இருக்கக் கூடாதா என்று சற்று ஏக்கமாகக் கூட உணர்ந்தாள் எனலாம். அது. கடைக்காக மட்டும் அல்ல என்று தோன்ற. அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

எளிதாகப் போய்க் கொண்டிருந்த வாழ்க்கைப் படகைக் கவிழ்த்து விடுவானா?

சேச்சே. என்று தன்னை அறியாமல். தலையை உலுக்கி மனதைச் சமனப்படுத்திக் கொண்டாள்.

இவனால். அப்படி என்ன செய்துவிட முடியும்? அவர்களிடம்தான். “பிளான் பி.” தயாராக இருக்கிறதே! என்ன. குறிக்கோளை அடையக் கொஞ்சம் தாமதமாகலாம்.. அவ்வளவுதானே?

“கணக்குகளைச் சரிபார்க்கும் அலுவலர். கடையிலேயே இருக்கிறாரா? எல்லோரையும் சேர்த்து வைத்துப் பார்க்க முடிந்தால். என் நேரம் வீணாகாது. ஏற்பாடு பண்ணுகிறாயா?”

மயூரிக்கு இன்னும் கொஞ்சம் சுரணை வந்தது.

இவன் என்ன. அவர்கள் கடைக்குள் வந்து. அவளையே அதிகாரம் பண்ணுகிறான்? விட்டால். இஷ்டம் போல  விரட்டுவான் போல இருக்கிறதே!

சற்று நிமிர்ந்து. “எங்கள் கடையில் எதுவானாலும். இறுதி முடிவு எடுப்பது. என் அக்காதான். இப்போது பார்க்க முடியுமா என்று. அக்காவிடம் கேட்டுச் சொல்லுகிறேன். நீங்கள் வேண்டுமானால். அதுவரை உட்கார்ந்திருங்கள்.” என்று. ஓரமாகக் கிடந்த சில

இருக்கைகளைக் காட்டிவிட்டு. செல்லை எடுத்தாள் .

அவன் உட்காரவில்லை. “வந்திருப்பது யார் என்று சொல். உடனே பார்க்கச் சம்மதம் கிடைக்கும்.” என்று சற்று அலட்சியமாகக் கூறியவாறே. அந்தத் தளம் முழுவதும் பார்வையை ஓடவிட்டான்.

வைத்திருக்கும் சரக்கு. அதை அடுக்கியிருக்கும் விதம். வந்திருக்கும் வாடிக்கையாளர்கள். விற்பனைப் பெண்கள் நடந்துகொள்ளும் முறை... எல்லாவற்றையும். அவனது கூரிய பார்வை கணக்கிடுவது நன்றாகவே தெரிந்தது.

அவர்களும். பார்த்துப் பார்த்து அடுக்குவதுதான். யோசித்து யோசித்துச் செயல்படுத்துவதுதான். எனவே. எதிலும் குறை கூற எதுவும் இராது என்ற திடம் அவளுக்கு இருந்தது.

நல்லவேளையாக வியாபாரமும் நன்றாக நடக்கும் வேளையில் வந்திருக்கிறான் என்று மனதுள் பெருமைப்பட்டுக் கொண்டபடியே. மயூரி தமக்கையிடம். வந்திருப்பவன் பற்றிய விவரம் தெரிவித்தாள்.

ஏற்கனவே வீட்டில் இந்தப் பண விஷயம் பற்றி மூவருமாகப் பலமுறை கலந்து பேசி. என்ன நடந்தாலும். அடுத்த நடவடிக்கை பற்றியும் முடிவெடுத்து விட்டதாலோ என்னவோ. மதிவதனியின் குரலும் அமைதியாகவே இருந்தது.

“நாமே பார்த்துப் பேசலாம். மய்யூ. எல்லாக் கணக்கும் என்னிடமும் இருக்கின்றன. எதற்கும். அவரை நீயே கூட்டி வா.” என்றாள்.

இவன் ஒன்றும் நம்மை மட்டம் தட்டி விரட்ட முடியாது என்ற தைரியத்துடன். “அக்கா வரச் சொல்லுகிறாள்.” என்றாள்.

நான்தான் சொன்னேனே என்பது போலத் தோளைக் குலுக்கினான்

பயந்து நடுங்கிக்கொண்டு. உடனே வரச் சொன்னதாக எண்ணிவிட்டான் என்று மயூரிக்குப் புரிந்தது. நேருக்கு நேரே பேசும்போதுதானே. அது அப்படியல்ல.. அவரவருக்குப் புத்தி தைரியம் எல்லாம் இருக்கிறது என்று இவனுக்குப் புரியப் போகிறது!

பதிலுக்கு அவனைப் போலவே தோளைக் குலுக்குவது அநாகரீகம் போல அவளுக்குத் தோன்றியது. எனவே. சிறு தலைச் சிலுப்பலுடன் மட்டுமாக அவனை. அவர்களது அலுவல் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

உள்ளூர இந்த நம்பிக்கையோடுதான். வசீகரனோடு மயூரி அறைக்

கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றது.

ஆனால். மேஜை மீதிருந்த லாப்டாப்பில். விருத்தி கடன் கணக்கைத்தான். மதிவதனி பார்த்துக் கொண்டிருந்தாள் போலும். அரவம் உணர்ந்து எழுந்தவாறே. கணக்கிலிருந்து பார்வையை உயர்த்தியவளின் முகம் அப்படியே உறைந்து போயிற்று.

முகம் வெளுத்து. உடல் தொய்ந்து. அவள் மயக்கமுற்றுச் சாய்வதைக் கண்டு. “அக்கா!” என்று முன்னே பாய்ந்தாள் மயூரி.

நல்லவேளையாக. எழுந்து கொண்டிருந்தபோதே. மதிவதனி மயக்கமுறவும். அமர்ந்திருந்த அதே இருக்கையில். அதே நிலையிலேயே. அவளது உடல் தொய்ந்து விழுந்தது.

தலை மட்டும் முன்னே சரிந்து. மேஜை மீது மோதுகிற நிலையில். அருகில் வந்துவிட்ட மயூரி. தமக்கையின் தலை மோதுமுன் தாங்கிப் பிடித்தாள்.

ஆனால். மதிவதனியின் தலை பிடிப்பின்றித் துவளவும். அப்படியே மதியின் பெரிய நாற்காலியில். பின் புறமாகத் தலையைச் சாய்த்து வைத்துப் பிடித்தவள். மேலே என்ன செய்வது என்று புரியாமல் விழித்தாள்.

அதற்குள் தன் கையில் இருந்தவற்றை மேஜை மேல் வைத்துவிட்டு. அருகிலேயே மூடி வைத்திருந்த தண்ணீர் டம்ளரை எடுத்து. மதிவதனியின் முகத்தில் லேசாகத் தெளித்தான். வசீகரன்.

லேசான உணர்வு மயக்கம்தான் போலும்.

திடுக்கிட்டாற்போல மதிவதனி. உடனே கண்களைத் திறந்தாள்.

“அக்கா!” என்று. தமக்கையின் இருக்கையோடு ஒட்டி. அவளது தோளில் கைவைத்தபடி நின்று.. “மிஸ்டர் வசீகரன். அக்காவுக்கு உடம்பு சரியில்லை. நீங்கள் போய்விட்டு இன்னொரு ” என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே. “இல்லை. இருக்கட்டும். மய்யூ.” என்றது மதிவதனியின் பலவீனமான குரல்.

“இல்லைக்கா. இன்றைக்கு வேண்டாம். உனக்கு என்னவோ உடம்புக்கு நன்றாக இல்லை.” என்று தமக்கையைத் தடுக்க முயன்றாள் தங்கை.

“பரவாயில்லை. நான் பார்த்துக் கொள்ளுகிறேன். மயூரி.” என்றாள் மூத்தவள் பிடிவாதமாக. “நீங்கள் உட்காருங்கள். மிஸ்டர் வசீகரன் அதுதானே. பெயர்?” என்று அவனிடம் கேட்டாள்.

அவன் ஒப்புதலாகத் தலையை அசைத்து. தன் கார்டு ஒன்றை எடுத்து. மேஜை மேல் வைத்தான்.

“வசீகரன்.” என்று அவளது உதடுகள் அசைந்தன.

பெருமூச்சை அடக்கியவாறே. மேஜையில் இருந்த லாப்டாப்பைப் பார்த்துவிட்டு. “சிறுவர் ஆடைப் பிரிவில் கொஞ்சம் பார்க்க வேண்டும் போல இருக்கிறது. மயூரி. சிசி கேமிராவில். அங்கே கூட்டம் தெரிகிறது. நீ அதைக் கவனி. மிஸ்டர் வசீகரனோடு நான் பேசிக் கொள்கிறேன்.” என்றாள். தங்கையிடம்.

நீ வெளியே இரு என்று. அக்கா சொல்லாமல் சொல்லுகிறாள். ஏன்?

சற்று முன். முகம் வெளுத்து மயங்கிச் சரிகிற நிலைக்குப் போகவில்லை என்றால். மதிவதனி சொன்னதுமே. சற்றும் யோசிக்கவே இல்லாமல். சிறுவர் உடைப் பகுதிக்கு மயூரி ஓடிப் போயிருப்பாள்.

ஆனால்

தயக்கத்துடன் “அக்கா… “ என்றவளிடம் “போம்மா. சீக்கிரம் போ. மிஸ்டர் வசீகரனின் நேரத்தையும் நாம் வீணடிக்கக் கூடாது. பார்!” என்று பெரியவள் சொன்ன பிறகு. வேறு வழியில்லாமல். மயூரி வெளியே செல்ல வேண்டியதாயிற்று.

ஏனெனில். சகோதரிகளின் பேச்சைச் சட்டையே பண்ணாமல். வசீகரன் தனது லாப்டாப்பை எடுத்து வைத்து. அவர்களது கடைக்கணக்கை “ஓப்பன்” பண்ணியிருந்தான்.

அப்போதும். “தேவைப்பட்டால் கூப்பிடக்கா. உடனே வந்து விடுகிறேன்.” என்று கூறி விட்டே. மயூரி வெளியே சென்றாள் .

அறைக் கதவைத் திறந்து. வெளியே சென்று மூடும் நேரத்தில். “விருத்தியின் புதிய உரிமையாளர் வந்திருப்பதாக மயூரி சொன்னாள்.” என்றது. மதிவதனியின். இன்னமும் முழுப் பலம் பெற்றிராத மெல்லிய குரல்.

“ஆமாம். விருத்தி நஷ்டப்படுவதை. என்னால் அனுமதிக்க “

தொழில் விஷயம்தான் பேசுகிறார்கள். எதிர்பார்த்த பேச்சுதான். இதில். அக்கா அதிர்ந்து கலங்க என்ன இருக்கிறது?

இப்படித்தான் என்று கணித்து முடித்த பிறகு. அதிர்ச்சிக்கு இடம் ஏது?

அக்கா சொன்னாளே என்று. சிறுவர் ஆடைப் பிரிவுக்குப் போய்

எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்துவிட்டபோதும். அழைக்காமல் உள்ளே செல்வது அநாகரீகம் என்று. அலுவலறை வாயிலிலேயே தவம் கிடந்தாள் மயூரி.

அதிக நேரம் காத்திருக்க நேராமல். விரைவிலேயே கதவு திறந்து. வசீகரன் வெளியே வந்தான்.

அறையிலிருந்து வெளியே வரும்போது. மயூரியை அவன் பாராதிருக்க முடியாது. ஆனால். அவளை ஏறெடுத்தும் பாராமல். வேகமாக நடந்து. அவன் போய்விட்டான்.

பண விஷயம் எதிர்மறையாக முடிந்துவிட்டிருக்குமோ? உறுத்தல். கவலை  ஏற்பட்டபோதும். எதுவும் நிலைக்கவில்லை.

தமக்கை எப்படி இருக்கிறாளோ என்பதே பெரிதாகத் தோன்ற. மயூரி அலுவல் அறைக்கு விரைந்தாள்.

பரத் தியானமாய். வெற்றுப் பார்வையுடன். அவளுடைய சகோதரி அங்கே அசையாமல் நின்றிருந்தாள்.

கடவுளே! சோகமே உருவாக என்றால். இப்படித்தானா? ஏன் அப்படி?

# அத்தியாயம் - 4

மதிவதனியின் முகத்தில் இருந்த சோகம் மற்றெதையும் மறக்கச் செய்ய.  மயூரி தமக்கையிடம் ஓடிச் சென்றாள்.

அருகில் சென்று. “என்னக்கா. என்ன ஆயிற்று? அந்த ஆள் எதற்கும் ஒத்து வரவில்லையா? போகட்டுமே. நமக்குத்தான். அடுத்தத் திட்டம் இருக்கிறதே! சில ஆண்டுகள் கஷ்டப்பட்டாலும். நாம் சமாளித்துவிடலாம். கவலைப்படாதேக்கா.” என்று. பெரியவளைத் தேற்ற முயன்றாள்.

மெல்லத் தலையசைத்தாள் மூத்தவள். “பண விஷயம் பிரச்சினையில்லை.” என்றாள் சுருக்கமாக.

“பின்னே? பின்னே என்னக்கா? உடம்பு எதுவும் சரியில்லையா? என்ன பண்ணுகிறது?” என்று. தங்கை கவலைப்பட. மறுபடியும் மறுப்பாகத் தலையசைத்தாள் தமக்கை.

“அதெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால்...ஆனால். என் கையைச் சற்று நேரம் பிடித்துக்கொண்டு இரேன்.” என்றாள். காற்றாகிவிட்ட குரலில் மதிவதனி.

கையைப் பிடிப்பதா? அவ்வளவா கலங்கிவிட்டாள்?

அவசரமாகப் பெரியவளின் கையைப் பற்றிய மயூரி. அது சில்லிட்டிருக்கவும். அப்படியே மூத்தவளை அணைத்துக் கொண்டாள்.

பெரிய மூச்சுகள் தவிர. மதிவதனியிடம் அசைவே இல்லை. தங்கையின் அணைப்பில் அப்படியே நின்றாள். ஆனால். அவளது நெஞ்சு படபடவென்று துடிப்பதை. மயூரியால் உணர முடிந்தது.

மற்றவளின் மூச்சும். இதயத் துடிப்பும். மெல்ல சமனப்படுவதை உணர்ந்தவாறு நின்ற மயூரிக்கு. உள்ளூர ஒரு கலக்கம் தலை தூக்கியது.

பண விஷயம் பிரச்சினை இல்லை என்று அக்காவே சொல்லிவிட்டாள்.

ஆனால். இவ்வளவு தூரம் அக்காவைப் பாதித்திருப்பது. ஒருவேளை  அந்த
.................... என்னவோ. மேலே நினைக்கப் பிடிக்கவில்லை அவளுக்கு.

ஆறு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள்.  அப்பாவும் அம்மாவும் திடுமெனக் கிளம்பிப் போய். பாட்டி வீட்டிலிருந்து மதிவதனியை அழைத்து வந்தார்கள். அப்போதும். எழவே இயலாதவள் போல.

ரொம்பவும் சோர்ந்து கிடந்தவள்தான் மதிவதனி. கண்ணைத் திறப்பது கூடக் கடினம் போலத் துவண்டு கிடப்பாள். பாட்டி வீட்டில். சரியாகச் சாப்பாடு கூட கிடையாது போல. ஒல்லியாக இருந்தாள்.

அப்போது. அவளுக்குப் பதினெட்டு வயது. மயூரியை விட. மூன்று வயது அதிகம். பெற்றவர்கள் இருவரும். பறவைகள் அடை காப்பது போல அவள் கூடவே இருந்து. அவளை அவ்வளவு பாதுகாத்துப் பராமரித்தார்கள்.

அதுவரை. மதிவதனியை. மயூரி அதிகம் பார்த்தது கூடக் கிடையாது.

இரண்டு தடவை. அக்காவைப் பார்க்க என்று. அந்தப் பாட்டியின் வீட்டுக்கு அவளையும். பெற்றோர் அழைத்துப் போயிருக்கிறார்கள்.

ஆனால். பாட்டி ஏதாவது குற்றப் பத்திரிகை படித்துக்கொண்டே இருப்பாள். சில சமயம் நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறி அழுவாள். மதிவதனியும்  பாட்டி பின்னே மறைந்து நின்று வந்தவர்களை முறைத்துப் பார்ப்பாளே தவிர. அவர்களோடு வந்து. இருந்து பேச மாட்டாள்.

ஆனால். கடைசியாகக் திடுமெனக் கிளம்பிப் போனபோது. அக்கா.  அம்மா அப்பாவோடு கூடவே வந்துவிட்டாள். ஏதோ உடம்பு சரியில்லாதது போல. அவளைத் தூக்கிக்கொண்டு வருவது போலத்தான் கூட்டி வந்தார்கள்.

அப்போது. மயூரிக்குப் பதினைந்து வயது. பத்தாவது  பொதுத் தேர்வு எழுத வேண்டும். ஆனால். வீட்டில் அவளைக் கவனிப்பாரே கிடையாது.

தலை பின்னிவிடக் கூப்பிட்டால்கூட. “என்னம்மா. பதினைந்து வயதாகிறது. நீயே பின்னிக் கொள்ளக் கூடாதா? அம்மா அக்காவைப் பார்க்க வேண்டாமா?” என்று மென் குரலில் பகவதி. மகளைக் கடிந்து கொள்வாள்.

படிப்பும் அவளேதான் படித்துக் கொள்ள வேண்டும்.

மதிவதனியே கவனித்துவிட்டு. தங்கையின் படிப்பையும் கவனிக்கும்படி. பெற்றோரிடம் கூறியதுண்டு  “மயூரி பொதுத் தேர்வு எழுதப் போகிறவள். இதை விட்டால். ப்ளஸ்டு  “வில் விரும்பிய பாடம் எடுக்க முடியாது போகும். என்னைப் பார்த்து. முக்கியமான தருணத்தில் அவளைக் கைவிடாதீர்கள்.” என்பாள். மெல்லிய பலவீனமான குரலில்தான்!

ஆனால். அதற்கு முன்னராகவே  பகவதி மகளிடம் சொல்லிவிட்டாள். “மய்யூம்மா. இந்த ஆண்டுத் தேர்வுக்கு நீயாகத்தான் படித்தாக வேண்டும்.  அக்காவுக்கு உடம்பு சரியில்லைடா. அவளை ரொம்பக் கவனத்தோடு பராமரித்தால்தான். நல்லபடியாகப் பிழைத்து வருவாள். அதனால். பாடத்தை நீயாகவே பார்த்துக் கொள்கிறாயா. செல்லம்?”

அழகான அக்கா. நன்கு குணமாகி வரவேண்டாமா?

எப்போதுமே வகுப்பில் முதல் மாணவி மயூரி. அம்மா இவ்வளவு சொன்னதும். இன்னமும் பொறுப்பாக. முனைந்து படித்து. நல்ல மதிப்பெண் வாங்கித் தேர்ச்சி பெற்றாள்.

மதிவதனி கல்லூரியில் ஓர் ஆண்டு மட்டுமே படித்திருந்தாள்.

மேலே படிப்பாளோ என்று பார்த்தால். முடியாது என்றுவிட்டாள். படிக்கப் பிடிக்கவில்லை என்றவளைக். கட்டாயப்படுத்திப் படிக்க வைக்கப் பெற்றோருக்கு மனமில்லை. மகளின் உடல். மன நிலையில். அது இன்னொரு பின்னடைவைத் தந்துவிடுமோ என்று அஞ்சினார்கள்.

மதிவதனியை வீட்டிலே தனியே விட்டுப் போகவும் மனமில்லாமல். அவளைக் கையோடு கடைக்குக் கூட்டிச் சென்றார்கள். தொழிலுக்குள் அவளைப் புகுத்தி. அவளைத் தலை தூக்க வத்தார்கள். தொழிலில் ஈடுபட்ட பிறகு. பெரியவள் சோர்ந்திருந்து. மயூரி பார்த்தது இல்லை.

ஆனால். திடுமென. இப்போது ஏன் இந்தப் பலவீனம்?

ஆறு ஆண்டுகளுக்கு முன்பாக. மதிவதனியும். வசீகரனும் ஒன்றாகப் படித்திருப்பார்களோ? அப்போது
பல திரைப்படங்களில் வந்திருப்பதுபோல அவர்களிடையே

இருக்காது என்றும் மயூரிக்கு நிச்சயமாகவே இருந்தது.

பெரியவளும் சற்று சுதாரித்துக் கொண்டது போலத் தோன்றவும். அவளது சுழல் நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு. குளிர் நீர் கொணர்ந்து. அவளைக் குடிக்க வைத்தாள்.

எதிர் நாற்காலியில் அமர்ந்து. அவளுடைய தோழி வைசாலி வீட்டு வேலைக்காரப் பெண். அடிக்கடி வேலைக்கு மட்டம் போட்டுவிட்டு. என்னென்ன கற்பனைக் காரணங்கள் சொல்வாள் என்பது பற்றி. இலகுவாகப் பேசிக்கொண்டிருந்தாள்.

மதிவதனியும் கூடச் சேர்ந்து. லேசாகச் சிரிக்கவே தொடங்கினாள்.

அப்புறமும். வேறு சிலதைப் பற்றிச் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு. பேச்சுவாக்கில் கேட்பது போல. “அந்த வசீகரனை. உனக்கு முன்பே தெரியுமா. அக்கா?” என்று வினவினாள் தங்கை.

முகம் வாடியபோதும். “தெரியாது.” என்று தலையசைத்தாள் மதிவதனி.

சற்று அடைத்திருந்த மூச்சு நேரானது போல உணரவும் மயூரி. தன்னை நினைத்தே உள்ளூர வியப்படைந்தாள். எப்படி. இப்படி?

ஒரு திருமணத்தில் பார்க்க நேர்ந்தது. அவனால் நேர்ந்த ஒரு சிறு தவறுக்கு. அவனே ஒரு விதத்தில் பரிகாரம் செய்தான். அவ்வளவுதானே?

நல்லவனாகத் தோன்றியவன். நல்லவனாகவே இருக்கட்டும் என்ற எண்ணமாக இருக்குமா? ஆனால். அதுவும். இன்னமும் ஒன்றும் தெளிவாகி விடவில்லையே! அவனைப் பார்த்ததுமே. மதிவதனி உணர்விழக்கும் அளவு அதிர்ந்தது உண்மைதானே?

“பின்னே ஏன் அக்கா. அவரைப் பார்த்ததும் அப்படிக் கலங்கிப் போனாய்?” என்று தொடர்ந்து கேட்டாள் மயூரி.

“அது ”

மேஜைமேல் கோத்திருந்த விரல்களைப் பார்த்தபடி சற்று நேரம் மதிவதனி பேசாதிருந்தாள். உள்ளூரப் பெரிய யோசனை ஓடுவது நன்றாகத் தெரிந்தது. தங்கையிடம் சொல்லலாமா. கூடாதா என்று யோசிக்கிறாளா? அவளும் ஒன்றும். இப்போது சின்னக் குழந்தை இல்லையே! கூடச் சேர்ந்து. கடையையே நடத்தத்தானே செய்கிறாள்?

தமக்கை மறைக்க முயற்சிக்கவில்லை.. எந்த மாதிரிச் சொல்வது என்றுதான் யோசித்தாள் என்று பிறகு தெரிந்தது.

பொறுமையாகக் காத்திருந்த தங்கையை. ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்து பார்த்துவிட்டு. மதிவதனி சொன்னாள்.

“வசீகரனுக்கு. அவருடைய அண்ணன் சுகந்தனுடைய சாயல் அப்படியே இருக்கிறது.” என்றாள் ஒரு மரத்த குரலில்.

“அக்கா!” என்றாள் மயூரி திகைப்புடன். அந்த அண்ணனின் சாயலில் ஒருவனைப் பார்த்தாலே உணர்வு மயங்குவது என்றால். இருவரும் எந்த அளவு பழகியிருக்கக் கூடும்?

குழப்பமும் கலக்கமுமாகத் தமக்கையைப் பார்த்தாள் அவள்.

பழைய நினைவை அகற்றுவது போன்ற ஒரு தலையசைப்பபோடு. “சிசியை ஆன் பண்ணி. ஒரு தரம் கடை முழுபதையும் பார்வையிட்டுவிடு. மய்யூ. இந்த நம் பேச்சில் எதுவும் குறுக்கிடக் கூடாது என்று நினைக்கிறேன்.” என்றாள் மூத்தவள்.

அவன் சொன்னபடி பார்த்துவிட்டு. “எங்கும் பிரச்சினை இல்லைக்கா.” என்று சின்னவள் சொன்ன பிறகு. மதிவதனி பேச்சைத் தொடர்ந்தாள்.

“அப்போது நீ சின்னப் பெண். மயூரி. அத்தோடு. நான் கேட்டுக்கொண்டேன் என்பதற்காகவே. பெற்ற மகளான உன்னிடம்கூட. நம் அம்மா என் அவலத்தை இது வரையும் சொன்னதில்லை. ஆனால். உனக்குத் தெரிய வேண்டிய நாள் வந்துவிட்டது. அத்தோடு    அம்மா புதிய வேதனைகளுக்கு ஆளாகாமல் காக்கவும். இது அவசியம் ஆகிறது

“மய்யூ. பெற்ற மகள் என்றதாலேயே. அம்மா உனக்கும் எனக்கும் வேறுபாடு காட்டுவதாக அர்த்தமில்லை. சொல்லப் போனால். தவமிருந்து பெற்ற முதல் மகளாகத்தான். நம் அம்மா என்னை எப்போதும் நடத்தி வந்திருக்கிறார்கள். இந்த சுகத்தை. நான் இரண்டு வயதிலிருந்தே அனுபவித்திருக்கலாம். ஆனால். மாற்றாந்தாய் ரத்தக் காட்டேரி என்ற தவறான எண்ணத்தில் ஊறிப் போன பாட்டி. என் அம்மாவைப் பெற்றவர்கள். என்னைப் பிடிவாதமாகத் தன்னோடு அழைத்துப் போனதோடு. என் அழிவுக்கும் வழி வகுத்து விட்டார்கள். ... “

தமக்கையின் பேச்சில் குறுக்கிட்டு “அழிவானேன். அக்கா? நீதான் திரும்பி வந்துவிட்டாயே! இப்போது நன்றாகத்தானே இருக்கிறோம். “ என்றாள் தங்கை

புரியாத சின்னக் குழந்தையைப் பார்ப்பது போன்ற ஓர் இரங்கிய பார்வை. மூத்தவளின் முகத்தில் தோன்றி மறைந்தது.

“இல்லை” என்பது போலத் தலையசைத்துவிட்டு. அவள் தொடர்ந்தாள்.

“கவனமாகக் கேள். மயூரி. வீட்டில். அம்மா அறிய. நான் இதைப் பேச முடியாது. ம்கூகூம். இதுவரை நடந்ததில். அம்மாவுக்குத் தெரியாதது என்று. என் வாழ்வில் எதுவுமில்லை. ஆனால். அம்மா எனக்குச் செய்திருப்பதற்குச் சிறு நன்றி செய்வதாகத்தான். இனியும் அம்மாவுக்கு வருத்தம் நேராமல் தடுக்க முயற்சிக்கிறேன்.

“மய்யூ. என்னைப் பெற்ற தாயார். என் மிகச் சிறு வயதிலேயே. எனக்கு ஒன்றரை வயது ஆகும்போதே இறந்து போய்விட்டார்களாம். எனக்கு. அவர்கள் பற்றிய எந்த நினைவுமே இல்லை. இருப்பது சாத்தியமும் இல்லை. ஆனால். பெற்ற தாயைப் பற்றி நினைக்கக் கூட விடாமல் அப்பா என்னைக் கொடுமை செய்ததாகப் பாட்டி அடிக்கடி சொல்வார்கள். பக்கத்திலேயே இருந்து சொல்லச் சொல்ல. நானும் அதையே அப்போது நம்பினேன். அப்பாவின் மறுமணம். அதை உறுதி செய்ததாகப் பாட்டி சொன்னதையும் அப்படியே ஒத்துக் கொண்டேன்.

“ஆனால் என்ன நடந்தது தெரியுமா?” என்று கேட்டு. மற்ற விவரங்கள் அனைத்தையும். மதிவதனி வேகமாகக் கூறலானாள்.

ஒன்றரை வயதுக் குழந்தையை வைத்துக்கொண்டு. வேலைக்கும் போய் வர. மகேசுவரன் படாத பாடு பட்டிருக்கிறார். அப்போதெல்லாம். அவருடைய மாமியாரான தேனாண்டாள். பேத்தியை வளர்ப்பதில் எந்த உதவியும் செய்யவில்லை.

உதவிக்கு என்று வந்தால். சம்பளம் இல்லாத வேலைக்காரி ஆகி விடுவோமோ என்று அஞ்சியிருக்கலாம். ஆனால். தன் வரையில் எந்த நெருங்கிய உறவும் இல்லாத மகேசுவரன். வேறு வழியின்றியே மறுமணம் செய்யத் தீர்மானித்தார்.

“அதிலும். அப்பாவின் தனிச் சிறப்பைப் பார் மயூரி. இரண்டாம் திருமணத்துக்கு. அவர் புதுப் பூவாகத் தேடவில்லை. தன்னைப் போல ஒருத்தியைத்தான் விளம்பரம் போட்டு. கலந்து பேசிக் கல்யாணம் செய்துகொண்டார். சீர்திருத்தத் திருமணம்.” என்றாள் மதிவதனி பெருமிதமாக.

இது விவரம். மயூரிக்கும் தெரியும். வீட்டு ஹாலில் வைத்திருக்கும் திருமணப் படத்திலேயே. இந்த விவரம் எழுதியிருக்கும். அந்தத் திருமணத்தை நடத்தி வைத்தவர். அவளது பள்ளியின் மேலாளர். அவ்வப்போது. இது பற்றிப் பெருமையாகப் பேசவும் செய்வார். எனவே. அவளுக்கும் தந்தை பற்றிப் பெருமைதான்.

ஆனால். மதிவதனியுடைய தாய் வழிப் பாட்டி தேனாண்டாள்தான். ஊர்ப் பங்காளிகள் என்று பலரையும் அழைத்து வந்து. பேத்தியை எவளோ ஒரு கிராதகியிடம் கொடுமைப்பட விட முடியாது என்று கத்தி ரகளை செய்து. மதிவதனியைத் தன்னுடன் கோவைக்குக் கூட்டிப் போய் விட்டாள்.

மகளின் வளர்ச்சி. படிப்புக்காகக் கணிசமான ஒரு தொகையை. மகேசுவரன். மாமியாருக்கு அனுப்ப வேண்டியிருந்தது. அதை. அவர்

பெரிதாகக் கருதவில்லை. எப்படியோ. மகள் நன்றாக வளர்ந்தால் சரி என்பது. அவருக்கு. தன்னிடம் வளர்ந்தால் என்ன. தாய் வழிப் பாட்டி வீட்டில் வளர்ந்தால் என்ன என்று எண்ணினார்.

ஆனால். அவர் திட்டமிட்டபடி பகவதியிடம் வளர முடியாமல் போனது. மதிவதனிக்கு எவ்வளவு பெரிய பாதிப்பாகிப் போயிற்று என்பதை. அவர் அப்போது அறியவில்லை.

ஏன்? அப்போது யாருக்குமே. அது தெரிந்திருக்கவில்லை. தன் பேத்தி. சிற்றன்னையிடம் கொடுமைப் பட்டுவிடக் கூடாது என்று. பிரித்து அழைத்துப் போன. தேனாண்டாளும் கூட. அதில் சேர்த்திதான்.

தேனாண்டாளைப் பொறுத்த வரையில். வீட்டில் உட்கார்ந்து. மகளைப் பற்றியும். மகள் செத்து ஆறே மாதங்களில் புது மணம் செய்த மருமகனின் துரோகம் பற்றியும் புலம்புவதோடு. இறந்துவிட்ட மகளுக்கும். இருக்கிற பேத்திக்கும் செய்ய வேண்டிய கடமைகள் முடிந்துவிட்டதாக எண்ணம். இன்னொரு பெரிய பொறுப்பு. பேத்தியின் வயிற்றுக்கு எதையாவது போடுவது. அதற்கு ஒரு வேலைக்காரியை வைத்ததோடு. பேத்தியின் வளர்ச்சி பற்றிய கடமையும் முடிந்தது. மதிவதனியின் மன நிலை பற்றிய அக்கறை. கவலை எதுவுமே. அவளுக்கு இருக்கவில்லை.

அடுத்த ஓர் ஆண்டில் மருமகனுக்கு இன்னொரு பெண் பிறந்த தகவல். தேனாண்டாளுக்கு எரிகிற தீயில் ஊற்றிய எண்ணைதான். விழித்திருக்கும் நேரமெல்லாம் புலம்பல்தான். அதிலும். பேத்தியைக் கண்டுவிட்டால். கட்டிக்கொண்டு ஒப்பாரியே வைப்பாள். சிரிப்பே அறியாதவளாக மதிவதனி வளர்ந்தாள்.

வளர வளர. மதிவதனியின் மனதில் தன்னிரக்கம் பெருகியது. தாய் இல்லை. தந்தை வெறுத்துவிட்டார். சிற்றன்னை சூழ்ச்சிக்காரி. தானும் ஒரு பெண்ணைப் பெற்றுக் கொடுத்து. மூத்தாள் மகளைப் பற்றிய நினைவையே அப்பா மனதில் அழித்துவிட்டாள். எனவே. அவளுக்கென்று யாருமே கிடையாது!

இடையில் எதையெதையோ வாங்கிக்கொண்டு தந்தையும் சிற்றன்னையும் அவளைப் பார்க்க வந்ததுகூட. ஊராரை ஏய்ப்பதற்காகப் போடப்பட்ட நாடகமாகவே விளக்கப்பட்டு. நம்பவும் பட்டது.

அப்படி நடிக்கும் உறவினர் தனக்கு வேண்டியதில்லை என்று. மதிவதனியே முடிவு செய்தாள்.

பாட்டியிடமும் அவளுக்கு பற்ற வர மறுத்தது. எந்நேரமும். மதிவதனி யாருக்கும் வேண்டாதவள். தான் மட்டும் அவளைத் தூக்கி வரா விட்டால். சிற்றன்னைக்குக் குற்றேவல் புரிந்து கொண்டு கிடப்பாள் என்று திரும்பத் திரும்பச் சொல்லும் . சொல்லிச் சொல்லி மனதை நோகடிக்கும் ஒருவரிடமும். அன்பு எப்படி உருவாகும்?

அது மட்டுமல்ல. இந்தத் தள்ளாத வயதில் எனக்கு இவளது சுமை வேறு என்று பாட்டியின் புலம்பல் அவ்வப்போது. அவளை உயிரையே வெறுக்க வைக்கும்.

எனவே. முடிந்த அளவு அறைக்குள் தனியாகவே இருப்பாள்.

அப்போதும். டீவி சீரியல் அதிரும். ஆனாலும். பாட்டியின் புலம்பலுக்கு அது மேல் என்று முடிந்தவரை காதைப் பொத்திக்கொண்டு அப்படியே உட்கார்ந்திருப்பாள்.

பள்ளியிலும் அப்படித்தான். எல்லோரும். அப்பா அம்மா எனும்போது குன்றிக் குறுக நேரிடும் என்பதால். தோழி எனும் அளவுக்கு. மதிவதனி யாருடனும் பழகியதே கிடையாது.

ஓரளவு படிப்பில் ஆர்வம் இருந்ததால்... அதை விடவும். ஃபெயில் ஆனால் அவமானம் என்று உணர்ந்ததாலேயே. எந்த வகுப்பிலும் அவள் தங்கிப் போக நேரவில்லை. அவ்வளவே.

அந்த ஆண்டு அவள் கல்லூரியில் சேர்ந்திருந்தாள். என்ன பாடம். என்ன எடுத்தால் எதிர்காலத்துக்கு நல்லது என்று எதுவும். யாரிடமும் அவள் கலந்து ஆலோசிக்கவில்லை. அதற்கான ஆர்வம் இருக்கவில்லை. பாட்டிக்குப் படிப்பு பற்றி எதுவும் தெரியாது.

இந்திந்தத் துறையை எடுத்தால். இந்திந்த விதமாகப் பிரகாசிக்கலாம் என்று தந்தை அனுப்பிய விவரம் அன்றே ஒரு தீக்குச்சிக்கு இரையாயிற்று. “அப்படியே நைசாக உன்னைச் சென்னைக்குக் கூட்டிப்போய். அவன் பெண்டாட்டிக்கும் அவள் பெத்த பிள்ளைக்கும். வேலைக்காரி ஆக்கப் பார்க்கிறான்.” என்ற மதிப்புரையோடு.

கெட்டிக்கார மாணவி என்று சொல்ல முடியாதவளாக. நடுத்தரமாகப் படித்த மதிவதனிக்கு ஆலோசனை கூறும் ஆர்வம். அவளுடைய ஆசிரியப் பெருமக்களுக்கும். இருக்கவில்லை.

ஏதோ போட்டி இல்லாமல் இடம் கிடைத்த கோர்ஸ் ஒன்றில் மதிவதனி சேர்ந்தாள்.

தந்தைக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்றாலும். அவரது

கருத்தை யார் மதித்தார்கள்?

கல்லூரியில் சேர்ந்த பிறகுதான் பிரச்சினை தொடங்கியது.

கல்லூரி வாழ்வு பள்ளிக்கூடம் போன்றதாக இல்லை. பாதி நாள்தான் பாடம் நடந்தது. மீதி நேரம்?

வீட்டுக்குப் போய். பாட்டியின் புலம்பலைக் கேட்கப் பிடிக்காமல். வழியில் இருந்த பூங்கா ஒன்றில் போய். மதிவதனி உட்கார்ந்திருப்பாள். அங்கேயே இலக்கற்று அலைவாள். மனதில் தனிமையும் வெறுமையும். அலுப்பும் சலிப்புமே நிறைந்திருக்க. இது என்ன வாழ்க்கை என்று வெறுப்பாக இருக்கும்.

இந்தச் சமயத்தில்தான் ஒரு நாள். அவளைப் போலவே வாடிய முகத்துடன். அதே பூங்காவுக்கு வந்து அலைந்த  சுகந்தனை. மதிவதனி சந்தித்தாள்!

சுகந்தன்! வசீகரனுடைய அண்ணன் என்றாளே!

தங்கை கேளாது கேட்ட கேள்விக்கு. ஒப்புதலாகத் தலையாட்டவும். மயூரியின் பார்வையில் இன்னமும் கூர்மை கூடிற்று.

# அத்தியாயம் - 5

தன்னைப் போலவே யாருமற்ற ஒரு ஜீவன் என்று. முதல் பார்வையிலேயே. சுகந்தனிடம் ஒரு பரிவும் தோழமை உணர்ச்சியும். மதிவதனிக்கு உண்டாயின.

அவனுக்கும் அப்படித்தான் இருந்திருக்குமோ. அவனாக வந்து. அவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

“துணைக்கு யார் வந்திருக்கிறார்கள்?” என்பதுதான். அவன் முதலில் கேட்ட கேள்வியே.

அவள் தோளைக் குலுக்கவும். “காலம் கெட்டுக் கிடக்கிறது. பூங்காவுக்கெல்லாம் பெண்கள் தனியே வருவது. அவ்வளவு சரியில்லை. கவனமாக இரும்மா.” என்று அவன் எச்சரித்த வினாடியிலிருந்து. மதிவதனி அவனை முழுமையாக நம்பலானாள்.

ஆனால். காலம் கெட்டுப் போயிருப்பதன் மிகச் சரியான உதாரணமே அவன்தான் என்று. அப்போது அவளுக்குத் தெரியாது.

மேலே சொல்வது கடினமாக இருந்தது போல. கண் மூடி. மதிவதனி சற்று நேரம் பேசாமல் இருந்தபோது. உள்ளாடைப் பகுதியில் இருந்து அழைப்பு வந்தது.

ஏதோ திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வாடிக்கையாளர் கேட்கிறார்களாம். உள்ளாடை திருப்பி எடுத்துக் கொள்வது இல்லை என்றால். கத்துகிறார்களாம்.

பொதுவாகப் பிரச்சினைகளைக் கவனிப்பவள் பெரியவள்தான்.

ஆனால் இன்று. “நீயே போய்ப் பார். மயூரி. என்னால் இப்போது வேறு யாரிடமும் பேச இயலாது.” என்று மதிவதனி கலங்கிய குரலில் கூறிவிட மயூரி எழுந்து போனாள்.

ஓரிரு தினங்களுக்கு முன் வாங்கிப்போன பில் சகிதம். ஓர் இளம்பெண் நின்று கொண்டிருந்தாள்.

“உள்ளாடைகளைத் திரும்பப் பெறுவது இல்லை என்று. பில்லிலேயே எழுதியிருக்கிறோமே என்றால். காதில் வாங்கவே மாட்டேன் என்கிறார்கள். அக்கா. “ என்று வாடிக்கையாளர் பற்றிப் புகார் செய்தாள் விற்பனைப் பெண் சாந்தி.

“என்ன கடை நடத்துகிறீர்கள்? இதுதான் வாடிக்கையாளர்களை

நடத்துகிற முறையா?” என்று கத்தினாள் அந்தப் பெண்.

“அப்படியில்லை மேடம்.. உள்ளாடை எனும்போது. உடம்பில் நேரடியாகப் படுவது. ஒருவர் அணிந்து பார்த்ததை. இன்னொருவர் வாங்கவே மாட்டார்கள். அதனால்தான். இந்தச் சட்டம் வைத்திருக்கிறோம்.” என்று அமைதியாகச் சொன்னாள் மயூரி.

“அவ்வளவுதானே? நான்தான் இதை அணிந்து பார்க்கவே இல்லையே. திரும்ப எடுத்துக்கொண்டு. அந்த விலைக்கு வேறே கொடுங்கள். பாருங்கள். நான் பணத்தைக் கூடத் திருப்பிக் கேட்கவில்லை. அந்த நஷ்டம். பாவம். உங்களுக்கு எதற்காகத் தருவது? வேறேதான் வாங்கப் போகிறேன். இதோ பார் பொண்ணு. இதை உள்ளே வைத்துவிட்டு. உங்களிடம் உள்ள சாடின் உள் பாவாடைகளை எடுத்துக் காட்டு. அளவு நாற்பது சென்டிமீட்டர்.” என்று விஷயம் முடிந்துவிட்டது போல. கடைப் பெண்ணை ஏவினாள். துணியைத் திருப்ப வந்தவள்.

செய்வது அறியாமல். விற்பனை செய்கிறவள் மயூரியைப் பார்த்தாள்.

கண்ணாடித் தாளில் பழைய மாதிரியே மடித்து வைக்கப்பட்டிருந்தபோதும். சிறு வேறுபாடுகளை மயூரியின் கண்கள் கண்டுபிடித்தன.

ஆனால். வாடிக்கையாளரை நோகப் பேச முடியாது. ஆனால். இதை வேறு யாரிடமும் விற்கவும் முடியாது.

எனவே. “பொறு” என்பது போல. சேல்ஸ் பெண்ணிடம் கண்ணால் காட்டிவிட்டு. கண்ணாடிப் பையிலிருந்து உள்ளாடையை எடுத்து நேராக மடிப்பது போலப் பாவனையோடு. “ஆஹா! என்ன அருமையான “பர்ஃப்யூம்”! வாசனை பிய்த்துக்கொண்டு போகிறதே! “ என்றாள் மயூரி புன்னகையோடு. “உங்களிடம் இருந்தும் அதே வாசனைதான் வருகிறது. எப்படியோ இதன் மேல் கொட்டி விட்டது போல. ஆனால். அடுத்து வாங்க வருகிறவர்கள். உங்கள் விளக்கத்தை ஏற்பார்களா. மேடம்? நீங்களே சொல்லுங்கள். அநியாயமாக எங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்த மாட்டீர்கள் என்று நம்புகிறேன். “ என்றாள்.

இதற்கு மேல். திருப்பி எடுத்துக்கொள் என்று எப்படி வாதாடுவது?

அவள் எரிச்சலாக யோசிக்கும்போதே. “உங்கள் “பெர்ஃப்யூம்” அருமை. மேடம். பார்த்தீர்கள் அல்லவா. கடையை விரிவாக்கம் செய்துகொண்டு இருக்கிறோம். “பெர்ஃப்யூம். லிப்ஸ்டிக். நெயில்

பாலிஷ். டியோ என்று அலங்காரப் பொருட்களும் வைக்கப் போகிறோம். அப்போது நீங்கள்தான் எங்களுக்கு உரிய ஆலோசனை சொல்ல வேண்டும்!" என்று மயூரி குல்லாவும் போடவே. உச்சி குளிர்ந்து போனாள் அந்தப் பெண்மணி.

அவளது இளக்கம் புரிந்து. "சேல்சில் இருக்கிற எல்லாப் பெண்களுக்குமே. அளவெடுக்கவும். அதற்குச் சரியாக ஆடையைத் தரவும் தெரியும். மேடம். இனிமேல். அவர்களின் ஆலோசனைப்படி வாங்குங்கள். திருப்ப வேண்டிய பிரச்சினையே வராது. சாந்தி. இதை வேறு பையில் போட்டுக் கொடுத்துவிட்டு சீக்கிரமாக வா. அடுத்து "ஆர்டர்" அனுப்ப பட்டியல் போட வேண்டும்." என்று. சாந்திக்கு வேறு வேலை சொல்லவே. அதற்கு மேல் தகராறு செய்ய மனமின்றி. அந்தப் பெண் கிளம்பிப் போனாள்.

அவள் சென்றதும். "பெரியக்கா மாதிரியே பிரமாதமாகப் பேசினீர்கள். சின்னக்கா." என்று அங்கிருந்த பெண்கள் பாராட்டினர்.

லேசாக முறுவலித்துவிட்டு. "மற்ற ஆடைகள் மாதிரியல்ல. உள்ளாடைகள். அதனால். பில் போடுமுன் ஒரு முறைக்கு இரு முறையாக. மாற்றித் தர மாட்டோம் என்பதை மனதில் பதியும்படி அழுத்திச் சொல்லியே விற்பனை செய்யுங்கள். என்னதான் பில்லில் குறிப்பிட்டிருந்தாலும். சொல்லும்போதுதான் மனதில் பதியும்." என்றுவிட்டுத் தமக்கையிடம் போனாள் மயூரி.

உணர்ச்சிகளின் தாக்குதல்களில் இருந்து. சற்று மீண்டு விட்டது போல. மதிவதனியின் முகம் இப்போது சற்றுத் தெளிந்திருந்தது.

விட்டதைத் தொடங்கும்போது. குரலும் கூட. சற்று இயல்புக்குத் திரும்பியிருந்தது.

மேஜையில் எடுத்து வைத்திருந்த தண்ணீரை எடுத்து ஒரு மடக்குக் குடித்துவிட்டு. பெரியவள் சொன்னாள்.

"என் வாழ்வின் இந்தப் பகுதியை. உன்னிடம் சொல்ல எனக்கு அவமானமாக இருக்கிறது. மய்யூ. என்னைப் பற்றி என்ன நினைப்பாயோ என்று கவலையாகவும் இருக்கிறது. ஆனால். நடந்தது முழுதும் தெரிந்தால்தான். என் கவலையின் காரணமும் உனக்குப் புரியும். மேலே என்ன செய்வது.. நடப்பதை எப்படி எதிர்கொள்வது என்று யோசிக்கவும் முடியும். " என்று கூறி. மறுபடியும் தொடங்கினாள்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு. மதிவதனிக்குப் பதினெட்டு வயது. உறவு நட்பு என்ற எந்தத் தொடர்பும் இல்லாததாலோ என்னவோ.

உலகம் பற்றி. எதுவுமே அறியாதவளாக இருந்தாள். அதனாலேயே. அருகில் நெருங்கிப் பேசிய சுகந்தனைப் பற்றி எதுவும் அறியாமலே. முழுமையாக மனதைப் பறிகொடுக்கவும் செய்தாள்.

இருவரும் தினமும் சந்தித்தார்கள். பெரும்பாலும். அதே பூங்காவில்தான். சிரித்துச் சிரித்துப் பேசுவார்கள். "சும்மா செடி. பூ பறவை எல்லாமே இருவருக்குமே மகிழ்ச்சியைத் தந்தன. தேன் சிட்டுகள் குஞ்சுகளுக்கு இரை ஊட்டுவதை. ஒருநாள் அரை மணி நேரம் பார்த்து ரசித்தோம்." என்று மதிவதனி கூறியபோது. மயூரிக்குப் பரிதாபமாக இருந்தது.

இது போலச் சாதாரண விஷயங்களைப் பார்த்து மகிழக் கூட. அக்காவுக்குத் துணை தேவைப்பட்டிருக்கிறதே!

அவளைப் போலவே. அவனுக்கும் ஏதோ பிரச்சினை போலும் என்று அவ்வப்போது மதிக்குத் தோன்றும். ஏனெனில். இருவருக்குமே. சிரிக்கத் தொடங்கினால். நிறுத்த வராது.

மெல்ல. பொது விஷயங்களில் இருந்து. அவரவரைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

அதுவும். அவர்களது விருப்பு. வெறுப்புகள் பற்றிதான். அதிலும். இருவருக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன.

சில சமயங்களில். அவன் முகம் வாடி. உட்கார்ந்திருப்பான். உடனே போக வேண்டியிருப்பதாகச் சொல்லுவான். அவளுக்கும் கஷ்டமாக இருக்கும்.

அப்படி ஒரு நாளில்தான். இருவருமாக ஒரு சனி ஞாயிறு ஊட்டிக்குப் போய் வரலமோ என்று சுகந்தன் கேட்டான்.

"அக்கா!" என்றாள் மயூரி திகைப்புற்று!

அக்கா போயிருப்பாளா? எப்படிப் போனாள்? கடவுளே!

தங்கையின் திகைப்பைக் கண்டதும். மதிவதனியின் முகத்தில் கசந்த முறுவல் ஒன்று படர்ந்து மறைந்தது. "பார். அம்மாவின் வளர்ப்பு! இந்தப் பேச்சே அதிர்ச்சியாக இருக்கிறது. ஆனால். அங்கே எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. வகுப்புப் பெண்களோடு போவதாகச் சொல்லிவிட்டுப் போகலாமே.. சுகனோடு இரண்டு நாள் முழுதாகத் தடையற்றுப் பேசி மகிழலாமே என்றுதான் தோன்றியது. ஊகூம்.. ரொம்பக் கவலைப்படாதே மயூரி. தவறான எண்ணங்களும் தோன்றவில்லை. தடையற்ற சிரிப்பும் பேச்சுமாக நாளைக் கழிக்கலாமே என்ற ஆசைதான். "உன்னைப் பாராமல் இருக்க முடியவில்லை" என்று

அடிக்கடி சொல்லும் சுகந்தன். இருவரும் சேர்ந்திருப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி
காதல். கல்யாணம் என்று பேசுவானோ என்ற ஆசையும்தான். பாட்டியிடம் பொய் சொல்லிவிட்டு. ஊட்டிக்குப் போய்விட்டேன். முதல் நாள் முழுதும். சந்தோஷமாகச் சுற்றினோம்! கார்டனில் பூ விதங்களைப் பார்க்கவே. அவ்வளவு ஆனந்தமாக இருந்தது. கட்டவிழ்த்த கன்றுகள் என்பார்களே! அது போலச் சுற்றிக்கொண்டே இருந்தோம். இருட்டத் தொடங்கித் திரும்பிய பிறகும். லாபியில் உட்கார்ந்து வெகு நேரம் பெசிவிட்டு. அவரவர் அறையில் முடங்கினோம். ....................................................................................

“அவரவர் அறையில்தான். புரிகிறதில்லையா? தப்பாக. முறையற்ற எதையும் இருவருமே நாடவில்லை. ...அந்த ஒன்றுதான் சுகந்தனைப் பற்றி நல்லதாக இருந்தது. ஆனால். மறு நாளைக்கு அது போலத் திட்டம் வைத்தும் இருந்திருக்கலாம் இல்லாமலும்”

தமக்கை குழம்பித் தவிப்பது. மயூரிக்குப் புரிந்தது. அந்த சுகந்தனை நல்லவனாக நினைக்க...நல்லவவன் என்று நம்பவே இன்னமும் ஆசைப்படுகிறாளா? அப்படி இல்லை என்று காட்டுவது போல. என்ன நடந்திருக்கும்? அக்கா அவசரப்பட்டு எதையும் தப்பாக நினைத்து. ஏதாவது பண்ணிவிட்டாளா?

“அப்புறம் என்னக்கா நடந்தது?”

“என்னவா?” ஒருதரம் கண்மூடித் திறந்துவிட்டு. மூத்தவள் தொடர்ந்தாள். “வேறென்ன? மறுநாளும் அதேபோலச் சுற்றினோம். அதற்கு அடுத்த நாள் காலையிலேயே கிளம்புவதாக இருந்ததால். ஹோட்டலுக்குத் திரும்பி வரவே. எங்கள் இருவருக்கும் குறைந்தது. எனக்கு மனமில்லைம்மா. ஆனால்

“ஒரு வழியாக அன்று திரும்பி வரும்போது
அங்கே ஹோட்டல் வரவேற்பில். ஒரு பெண் எங்களுக்காகக் காத்திருந்தாள்! அவள். சுகந்தனுடைய மனைவி!”

“ஐயோ அக்கா!” என்று மயூரி அலறிவிட்டாள். இது ரொம்பப் பெரிய அதிர்ச்சி! அக்கா எப்படித் தாங்கினாள்?

வேதனையும் வெறுப்புமான ஒரு கையசைவுடன். “இதை விட. எத்தனை மடங்கு நான் அதிர்ந்திருப்பேன். பார்! மணமான ஒரு மனிதர்! கள்ளமில்லாக் காதல் என்று அவரோடு ஊர் விட்டு வந்திருக்கிறேன்! பொது இடத்தில். மனைவி என்று ஒருத்தி வந்து நிற்கிறாள். எனனையும் சுகந்தனையும் சேர்த்துத் தரக் குறைவாகப் பேசி...சீச்சீ. என்னென்ன சொல்லிவிட்டாள். காசுக்காக இரண்டு நாள் உடம்பை விற்க வந்த ”

என்று கசப்புடன் கூறி வந்தவளின் பேச்சு நின்று. உதட்டின் மேல் பற்கள் பதிந்த இடத்தில் ரத்தம் கசிந்தது.

மேஜையைச் சுற்றிக்கொண்டு. பாய்ந்தோடி வந்து. பெரியவளை அணைத்துக் கொண்டாள் மயூரி. தமக்கையின் வாயைப் பொத்தி. "அக்கா. வேண்டாம்க்கா. விட்டுவிடு. மேலே ஒன்றும் சொல்ல வேண்டாம்க்கா. போதும். இதற்கு மேல் என்ன பண்ண வேண்டும் என்று மட்டும் சொல்லு. அது போதும். " என்று. மதிவதனியின் துயரப் பேச்சைத் தடுக்க முயன்றாள்.

சற்று நேரம். தங்கையின் மேல் சாய்ந்திருந்த மூத்தவள். வாயிலிருந்து மெல்ல மற்றவளின் கையை அகற்றிவிட்டுச் சொன்னாள். "இனிச் சொல்வதற்குப் பெரிதாக ஒன்றும் இல்லை. மய்யூம்மா. அங்கே ஹோட்டலில் ரொம்ப அசிங்கமாகிவிட்டது. அந்தப் பெண். இன்னும் யார்யாரையோ கூட்டி வந்திருந்தாள். பெரிய ஆட்கள்! எல்லோருமாக. சுகந்தனை அழைத்துப் போனார்கள். ஹோட்டலில்... என்னை அங்கே தங்கக் கூடாது என்றுவிட்டார்கள். ஆனால். அங்கே வைத்து என்னமும் செய்து கொள்வேனோ என்று அஞ்சி. வீட்டில் கொண்டு விட ஆள் அனுப்பினார்கள். வீடு வந்து சேர்ந்தேன். ஆனால். கூட வந்த ஆள் மூலம் விவரம் வெளியாகிவிட்டது. பாட்டி பேசிய பேச்சு. ஏச்சு! ஏமாந்தது மட்டுமில்லாமல். அவமானமும். வேதனையும் தாங்க முடியாமல். பாட்டியின் தூக்க மாத்திரை பாட்டிலேயே காலி பண்ணிவிட்டேன். "

"என்னக்கா நீ..." என்றாள் தங்கை கண்ணீர்க் குரலில்.

"கவலைப்படாதே. பிழைத்துவிட்டேன். அதுதான். குத்துக்கல் மாதிரி. உன் முன்னேயே உட்கார்ந்து இருக்கிறேனே! பாட்டிக்கு மாத்திரை எடுக்க வந்த வேலைக்காரி மூலம். சீக்கிரமே கண்டுபிடித்துவிட. என்னைச் சாவிலிருந்து காப்பாற்றி விட்டார்கள். இத்தனையிலும் விளைந்த ஒரு பெரிய நன்மை என்னவென்றால். அதற்கு மேல் என் பொறுப்பை ஏற்க முடியாது என்று. பாட்டி முடிவு செய்ததுதான். அப்பாவையும். அம்மாவையும் வரவழைத்து. கூட்டிப் போகச் சொல்லிவிட்டார்கள்.

"சும்மாவே அனுப்பியிருக்கலாம். ஆனால். அப்பாவை வருத்த ஒரு வாய்ப்புக் கிடைத்தால். பாட்டி விடுவார்களா? நடந்தது எல்லாவற்றையும் சொல்லி. தகப்பன் புத்தி என்று. அப்பாவை ஒரு குத்துக் குத்தி அனுப்பி வைத்தார்கள். இரண்டாவது மணம் செய்ததால். அப்பா பெண் பித்தனாம். சுகந்தன் போன்றவர்களுக்குப் பாட்டியின்

அகராதியில் என்ன பெயரோ?

“இங்கே வந்தபின். சித்தி எனக்குத் தந்த திடம் எவ்வளவு தெரியுமா? முதலாவதாக. நான் உலக மகாப் பாவம் எதையும் செய்துவிடவில்லை என்று புரிய வைத்தார்கள். இந்த வீட்டின் உரிமை உள்ள மூத்த மகள் என்று உணர வைத்தார்கள்.

“அப்போது நீ பத்து படித்துக் கொண்டிருந்தாய். நம் கல்வித் திட்டத்தில். அது ஒரு முக்கியமாக படி. உன்னைப் பார்க்கும்படி சொன்னால் கூட. வருஷம் பூராவும் படிக்காததையா. இப்போது படித்துவிடப் போகிறாள்? படித்தவரை எழுதட்டும்.. அது போதும் என்பார்கள் சித்தி.

“ஆனால். நடந்தது தெரிந்ததில். அப்பா ரொம்பவும் மனம் உடைந்து போனார். மயூரி. சித்தி எதையும் பெரிதாகக் காட்டிக்கொள்ளவில்லை. என்னைத் தேற்றுவதில்தான் அவர்களது முழுக் கவனமும் இருந்தது. ஏன் தெரியுமா. மயூ? அவர்களது திருமணத்தின் காரணமாக அப்பா சொன்னதை வைத்து. என்னைத் தன் மூத்த மகளாகவே. மனதில் நினைத்துவிட்டார்களாம். பாட்டி வந்து உரிமை காட்டிக் கூட்டிச் சென்றபோதும். தானே பார்த்துக் கொள்வதாக சொல்லிப் பார்த்திருக்கிறார்கள். ஆனால். பாட்டி அதை நம்பாமல் நக்கல் பண்ணியிருக்கிறார்கள். சரி. எங்கே வளர்ந்தால் என்ன . அன்போடு வளர்க்கப் படவேண்டும் அவ்வளவுதானே என்று அப்பாவும் என்னைப் பாட்டியோடு அனுப்பி விட்டார்கள். அப்போது சித்தியைப் பற்றி. அப்பாவுக்குமே முழுதாகத் தெரியாதில்லையா? என்னதான் வாக்குக் கொடுத்தாலும். மகள் மாற்றாந்தாயிடம் வளர்வதை விட. அம்மாவைப் பெற்ற பாட்டியிடம் வளர்வது மேல் என்றும் உள்ளூர நினைத்தார்களாம்.

“அப்போதெல்லாம் எனக்குச் சரியாகத் தூக்கமே வராது. ஒருவர் மாற்றி ஒருவர் என் அறையிலேயே படுத்து. என்னைக் காவல் காப்பார்கள். ஒருநாள் ஏதோ சத்தத்தில். என் அரைகுறைத் தூக்கம் கலைந்து விழித்தேன். சித்தி சத்தமில்லாமல் எழுந்து போவது தெரிந்தது. எனக்குமே. அப்போது யாரிடமும் நம்பிக்கை இல்லாத நிலை. அவர்களுக்கும் வேண்டாத சுமை நான் என்பதாகத்தான் நினைத்திருந்தேன். என்னைப் பற்றி. என்னை என்ன செய்வது என்று பேசப் போகிறார்கள் என்று எண்ணி. நானும் சத்தமில்லாமலே சித்தியைப் பின்தொடர்ந்து போனேன். போய்... ஒட்டுதான் கேட்டேன். அடக்க மாட்டாமல் அப்பாதான் வாயைப் பொத்திப் பொத்தி அழுதுகொண்டிருந்தார். சித்தியைப் பார்த்ததும். தான் முன்பு

நினைத்ததை எல்லாம் சொல்லி. தப்புப் பண்ணிவிட்டேனே. பகவதி.. இனிமேல். இவள் கதி என்ன... என்று எப்படித் தவித்தார்கள். தெரியுமா?

“சித்தி நினைத்திருந்தால். அப்போது என்னைக் கரும் புள்ளியாகக் கருதிக் கழற்றிவிட்டிருக்கலாம். யாரும் குற்றம் சொல்ல முடியாது. அப்பா கூட. ஆனால் சித்தி அப்படிச் செய்யாமல். எனக்கு அம்மா ஆனார்கள். ... ஆமாம் மய்யூ. அப்பாவிடம். அம்மா என்ன சொன்னார்கள் என்று கேள். புரியும்.

“முதலில். இது என்ன கேள்வி என்று அப்பாவைச் சற்றுக் கடிந்துகொண்டார்கள். பிறகு. பாருங்கள். மதிக்கு என்ன வயதாகிவிட்டது? பதினெட்டு வயதுப் பச்சை மண். தீ சுடும் என்று தெரியாமல். நம் பெண் ஒரு காயம் பட்டு வந்திருக்கிறாள். முதலில் ஆறுதல் சொல்லி. அதைக் குணப்படுத்துவோம். ஆதரவில்லாத தனிமை உணர்ச்சிதான் அவளது நோய். எப்போதும். பெற்றோராக நாம் அவள் பின்னே இருக்கிறோம் என்ற மருந்தை முதலில் அவளுக்குத் தருவோம். இன்னும் வளர்கிற காலமே மதிக்கு எவ்வளவோ இருக்கிறது. அவள் நல்லபடியாக வளர்ந்து. பெரிதாகச் சாதிப்பாள் பாருங்கள் என்று. அப்பாவுக்கு மட்டுமில்லாமல். மறைந்திருந்து கேட்ட எனக்குமே தென்பூட்டினார்கள்.

“பெற்றோராக என்றால் என்ன அர்த்தம். மயூரி? தாயும் தகப்பனுமாக! அன்றிலிருந்து. சித்தியை அம்மா என்று அழைக்கத் தொடங்கினேன். அப்பா கூட. அவ்வப்போது வியந்து பார்ப்பார்கள். ஆனால். அந்த அழைப்பையும். அம்மா இயல்பு போலவே ஏற்றுக் கொண்டார்கள்.

“அம்மாவுடைய மகள் அல்லவா? நீயும் என்னைச் சகோதரியாகவே ஏற்றுக் கொண்டாய் “

“அம்மா எப்போதுமே உன்னை மறக்க விட்டதில்லை. அக்கா. அவ்வப்போது. உன் பேச்செடுத்துப் பேசுவார்கள். தனியாக இருக்கும் பாட்டிக்குத் துணையாக. நீ அங்கே வளர்வதாகவே சொல்வார்கள். “ என்றாள் மயூரி.

மற்றவள் தொடர்ந்நதாள்.

“அம்மாவின் அன்பில். நானும் விரைந்து தேறினேன். எனக்கென்று ஓர் இடம் இருக்கிறது என்பதே ஒரு டானிக் மாதிரி. உடம்புக்கும் சேர்த்து வலுவைத் தந்தது! தாய். தந்தை. தங்கை என்று அன்பான குடும்பத்தின் ஓர் அங்கம் என்கிற திடம்! எனக்குப் படிப்பில் ஆர்வம் இல்லை என்பதை விட. கல்லூரியில் என் பழைய கதை கிளறப்படுமோ

என்பதைலேயே. எனக்கு மேலே படிக்கப் பிடிக்கவில்லை. என் விருப்பத்தை மதித்து. எனக்குக் கடையில் பொறுப்புக் கொடுத்தார்கள். ஒரு விற்பனையிலேயே எனக்கு உற்சாகம் கூடிற்று. இன்னும் செய்யும் ஆர்வம் வந்தது. அதே கவனமாக. எப்படி அடுக்க வேண்டும்.. யார் யாருக்கு என்னென்ன மாதிரி ஆடைகள் நன்றாயிருக்கும்

பணியாளர்களிடம் எப்படிப் பேச வேண்டும். வாடிக்கையாளர்களை எப்படி நடத்த வேண்டும்

நிறையக் கற்றுக்கொண்டேன். தோன்றாத் துணையாகக் கூடவே இருந்து. அம்மா கற்றுக் கொடுத்தார்கள். இப்படிச் செய். செய்யாதே என்று காதுக்குள்ளே ஓதிக்கொண்டே இருக்க மாட்டார்கள். ஆனால். தனியாக இருந்து. கலந்து பேசும்போது. இப்படிச் செய்திருந்தால். இன்னமும் நன்றாக இருந்திருக்குமோ என்று நானே யோசிக்கும்படி பேசுவார்கள். அம்மா எது செய்தாலும் என் நன்மைக்கே என்று வேறு தெளிந்துவிட்டதா? நானும் அம்மா பேச்சை அப்படியே பிடித்துக்கொண்டேன்.

“நான் மனதால் வளர்ந்த விதம். அப்பாவுக்கும் திருப்தியே. திருமணத்துக்கு நான் அடியோடு மறுத்தது. அவருக்கு வருத்தம்தான். ஆனாலும். கடை வளர்ச்சிக்காக. அம்மா உதவியோடு நான் போட்ட திட்டங்கள் பற்றி அப்பாவுக்கும் மகிழ்ச்சியே. கடைசி நேரத்தில். அப்பாவிடம் திட்ட அளவில் சொன்னதற்கே மிகவும் சந்தோஷப்பட்டார். அவரது நினைவுக்காகவே அதைச் செயல்படுத்தி விட வேண்டும் என்று முயற்சித்தால்...

“இந்தக் குடும்பத்திடம் நமக்குக் கடன் கொடுத்த நிதி நிறுவனம் போனது. நம் துரதிர்ஷ்டம் என்று ரொம்பவும் தோன்றுகிறது. மயூரி.” என்று மதிவதனி வருத்தத்துடன் கூறியதைக் கனத்த மனதோடு மயூரியும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

# அத்தியாயம் - 6

வசீகரன் யார் என்கிற விவரத்தைப் பகவதியிடம் சொல்ல. அக்கா தங்கை இருவருக்குமே விருப்பமில்லை.

ஒன்று. பழைய கதையெல்லாம் நினைவு வந்து. அன்னையும் வருத்தப்படுவாள். மனச் சுமையைப் பகிர்ந்துகொள்ள அப்பாவும் இல்லாத நிலையில். அது கூடாது என்று உறுதியாக எண்ணினர்.

அதுவும். அந்தப் பழைய கதை காரணமாகவே. அனேகமாக சுகந்தன் கடன் தரப் போவதில்லை.. "விருத்தி"யோடு தொடர்பு இருக்கப் போவதும் இல்லை எனும்போது எதற்காகச் சொல்லுவது மூத்தவளோடு ஒத்து நினைக்கும்போதே. மயூரிக்குள் முரண்டியது.

"அப்படி விட முடியுமாக்கா? கதிரேசன் சார் கொடுத்த கடனை "விருத்தி"க்கு நாம் திருப்பித்தானே ஆக வேண்டும்? அதுவரை. இந்தத் தொடர்பை வெட்ட முடி

தொடர்பு இருந்துதானே தீரும்?" என்று. தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

"அது சரிதான். ஆனால். சும்மாச் சும்மா அந்தக் குடும்பம் உள்ளே வந்து நிற்க முடியாது அல்லவா? மாதாமாதம் இன்ன மாதிரி திருப்பித் தருகிறோம் என்று செக் புக்கில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டால். அப்புறம் பாங்க் வரைதானே வசீகரனால் வர முடியும்? பணத்தை ஒழுங்காகக் கட்டிவிட்டால். அம்மா பக்கம் அந்தக் குடும்பம் நெருங்காமல் பார்த்துக் கொள்ளலாம். மய்யூ." என்றாள் மதிவதனி.

உன் பக்கமும்தான் என்று உள்ளூர எண்ணினாள் மயூரி.

தம்பி வசீகரனைப் பார்த்தே மயக்கம் போட்டு விழுகிறவள். பண வசூலுக்காக அந்தச் சுகந்தனே வந்தால் என்ன ஆவாள்?

கண நேரக் கற்பனையில். சின்னவளின் மனம் பரபரத்ததுக் கலங்கியது.

அப்படி வந்தானென்றால்? வருவதற்கு வாய்ப்பு உண்டுதானே? கடவுளே! இந்தக் கடன் தொகையை. வசீகரனாகத் தந்தால்கூட. வேண்டாம் என்று மறுக்க வேண்டும் போலத் தெரிகிறதே!

தங்கையின் முகத்தைப் பார்த்துவிட்டு. "என்ன மயூரி? என்ன அவ்வளவு வேண்டாத யோசனை? " என்று விவரம் கேட்டாள் மதிவதனி.

ஒளிவு மறைவின்றி அத்தனையும் கொட்டிய தமக்கையிடம் மயூரியும் மறைக்கவில்லை.

ஆனால். அது போல நிகழ்வதற்கு வாய்ப்பில்லை என்றாள் மூத்தவள்.

“இந்த நிதி நிறுவனம் கை மாறுவது பற்றிக் கதிரேசன் சார் அம்மாவிடம் தெரிவித்தபோது. இது வசீகரனின் சொந்த முயற்சி மட்டுமே என்றுதான் கூறினார். பெரிய குடும்பங்களில் செய்வார்கள். தெரியுமல்லவா? ஒருவர் தொழில் தொடங்கும்போது. முதலீட்டைப் பொதுவிலிருந்து செய்வார்கள். அதனால். லாபத்தில் எல்லோருக்கும் பங்கு இருக்கும். ஆனால். நிர்வாகப் பொறுப்பு. தொழிலைத் தொடங்கி நடத்துகிறவர்கள் கையில்தான் இருக்கும். அது போல. ஒரு பெரிய தொழிலதிபருடைய சின்னப் பையன் “விருத்தி”யை எடுத்திருப்பதாகச் சொன்னார். அத்தோடு... அத்தோடு...” என்று ஒரு மூச்சை எடுத்துவிட்டு. “அந்த வீட்டு மூத்த மகன் பல ஆண்டுகளுக்கு முன்னராகவே ஏதோ குடும்பப் பிரச்சினையில் வெளிநாடு சென்று. அங்கேயே செட்டிலாகி விட்டதால இங்கே வருவதே இல்லை.. சின்னப் பையன்தான் எல்லாம் என்று சொன்னார். அப்போது. அதை முக்கியமாக நினைக்கவில்லை. ஆனால். யார். என்ன பிரச்சினை என்று புரிகிறதில்லையா? எனவே. நீ எண்ணுகிற விபத்து நேர. நிச்சயமாக வழியில்லை. “ என்று. சிறு ஏளனமும் கசப்புமாகக் கூறி முடித்தாள்.

அந்த வகையில் நிம்மதிதான். இன்னமும் அந்த மூத்த மகனைப் பற்றிப் பேசவே தடுமாறி மூச்செடுக்க வேண்டிய நிலையில் இருக்கும் அக்காவை நினைக்கையில். இரண்டு மடங்கு நிம்மதிதான். ஆனால்

பெண்களுக்கான உடைகள் வைக்காமலேயே. கடன் பணத்தைத் திருப்புவது சாத்தியப் படுமா என்ற சந்தேகம்தான். இப்போது இருவரையுமே குடைந்தது.

“ரொம்பவே கஷ்டம் ” என்றாள் மதிவதனி. “பொதுவாகப் புழக்கத்தில் இருக்கும் வட்டியைக் கொடுக்க நம்மால் நிச்சயமாக முடியாது. அதுவும். பெண்கள் ஆடைப் பகுதிக்காகச் செய்திருக்கும் வேலைக்கான செலவு வேறு. முழுக்க வருமானமற்ற நஷ்டக் கணக்காகிவிடும். .கவுன்டர்களுக்காகச் செய்திருக்கும் மர வேலைகள். வாங்கி வைத்திருக்கும். “மான்னக்குயின்”கள். உடை அணிந்து பார்க்கும் சிற்றறை. அலங்காரப் பொருட்கள் எவ்வளவு! புதிய இடம் மட்டும் என்றால் கவலையில்லை. நாம் கொடுத்த முன்பணத்தையே இன்னொருவரிடம் வாங்கிக்கொண்டு. திருப்பிக் கொடுத்துவிடலாம்.

ஆனால் அதுவுமே. இது போல இன்னோர் இடம் கிடைப்பது எவ்வளவு அரிது! அதனால்தான். நம்மால் முடிந்த அளவு வட்டி அதிகம் தருவதாக ஒரு யோசனையும் வசீகரனிடம் எழுதிக் கொடுத்திருக்கிறேன். “

இது போல. அதே கட்டிடத்தில். ஒட்டினாற்போல இடம் கிடைப்பது அரிதுதான். இதை விட்டால். வேறு கிடைக்காது என்றுமே சொல்லலாம். அதனால்தான். அந்த இடம் கிடைத்தபோது. எல்லோரும் அவ்வளவு சந்தோஷப்பட்டார்கள். இப்போது. கைக்கெட்டியது. வாய்க்கு எட்டாத மாதிரி ஆகிவிட்டது!

சுமார் ஆறு ஆண்டுகளாகக் கடையைக் கவனித்து அதிலேயே ஊறிப் போனதாலோ என்னவோ. இந்த வளர்ச்சி சம்பந்தமான எல்லாவற்றையும் அடியோடு விட்டுவிடவும். மதிவதனிக்கு மனம் வரவில்லை.

அதிலும். தந்தையின் இழப்பால் அவள் மறுபடியும் ஓய்ந்து விடக் கூடாது என்று  எண்ணி. “தொழிலை அப்பா இன்னொரு பிள்ளை என்று தொழிலை நினைப்பார். .அதை முன்னேற்றுவதுதான் அப்பாவுக்குச் செய்யும் கடமை என்று சொல்லி. மூத்தவள் மனதைப் பகவதி அதில் திருப்பி விட்டதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

பகவதிக்குமே. இந்தக் கடை ஒரு சேய் மாதிரிதானே? மகேசுவரன் இந்தக் கடையைத் தொடங்கவே. அவள்தானே. காரணம்?

அவர் மறைந்த பிறகு. ஆறு நாட்கள் கடையில் கடுமையாக உழைத்தாலும். ஏழாவது நாள் ஓய்வாக உட்கார்ந்திருப்பதில்லை. வீட்டில் இருந்தால் தந்தை நினைவு அதிகம் வருகிறது என்று மூவருமாக எங்கேனும் போய்ச் சுற்றிவிட்டு வருவார்கள்.

அப்படிச் சுற்றும்போதும். ரெடிமேடு உடைக் கடைகளில் காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கும் எதையாவது காட்டி. “இது போல நம் கடையிலும் வைத்தால் எப்படி விற்பனை பிய்த்துக்கொண்டு போகும்?” என்று பகவதி கற்பனையைத் தூண்டி விட்டுக்கொண்டே இருப்பாள். அப்படிச் செய்ய வேண்டும் என்கிற ஆவலையும்.

அதுவும் மனதில் படிந்து. திட்டம் போட்டு. விரிவாக்கம் செய்கிற அளவுக்கு மதிவதனியையும் ஊக்கியிருந்தது. வெளியே சொல்லாவிட்டாலும். இதுதான் இனி வாழ்க்கை என்கிற எண்ணம். உள்ளூர அவளுக்கு இருந்ததும் ஒரு காரணம்.

பகவதிக்குமே. கடை வளர்ச்சி பற்றிய கற்பனைகளே. கணவரின் இழப்பைத் தாங்கும் சக்தியைக் கொடுத்தன என்பது. மக்களுக்கும்

தெரியும். .

இப்போது. கிட்டத்தட்ட இலக்கை எட்டிவிட்ட நிலை. இப்போது போய். பழைய நிலைக்கே இறங்க வேண்டும் என்றால். மதியின் மனம். அதற்கும் முரண்டியது.

எனவே. சுகந்தனுடைய குடும்பம் எனும்போது அஞ்சுவதும். அந்தக் கடன் கிடைக்காவிட்டால் தொழிலில் நேரக் கூடிய பெரும் பின்னடைவை நினைத்துக் கலங்குவதுமாக அவள் மனம் அலைபாய்ந்துகொண்டே இருந்தது.

ஆனால். சின்னவளைப் பொறுத்தவரை. இழப்பு பற்றி முன்னே இருந்த வருத்தம் இப்போது இல்லை.

அவளது சின்ன வயதில் தமிழ்ப் பாடத்தில் ஒரு பாடலைத் தமிழாசிரியை அழகாகக் கற்றுக் கொடுத்தார்கள். “கொம்புளதற்கு ஐந்து முழம்.. குதிரைக்குப் பத்து முழம். வெம்பு கரிக்கு ஆயிரமே.. வம்புசெறி தீங்கினர் தம் கண்ணில் படாத தூரத்தே நீங்குவதே நலம்” என்பது அந்தப் பாடல்.

மதம் கொண்ட யானையிடமிருந்து. சுமார் ஐநூ மீட்டர் தூரத்தில் இருந்தாலே பிழைத்துக் கொள்ளலாம் என்று கூறும் பாடலாசிரியர். கெட்ட மனிதர்களின் கண் படும் தூரத்தில் இருப்பது கூட நல்லதல்ல என்கிறார்.

சுகந்தன் குடும்பம். “வம்பு செறி தீங்கினர்” இனத்தைச் சேர்ந்ததே என்பதில். அவளுக்கு ஐயமில்லை. அவர்களை விட்டு ஒரேயடியாக ஓட முடியாத நிலையே. என்றாலும். அத்தோடு போகட்டும்.. என்ன கஷ்டப்பட நேர்ந்தாலும். அதற்கு மேல் அங்கிருந்து. எதுவும் வேண்டாமே என்று மயூரி நினைத்தாள்.

அத்தோடு. அக்காவும் தங்கையும் கடின உழைப்புக்கு அஞ்சுகிறவர்கள் அல்லவே. உண்மையான உழைப்பு. பயனின்றிப் போவதும் கிடையாது என்று நம்புகிறவள். அவள்!

அவளுக்கு இருந்த ஒரே ஒரு வருத்தம். கொஞ்சம் நல்லவனாகத் தோன்றிய வசீகரன் அந்தப் பொல்லாத குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருப்பது. அந்த ரத்தம்தானே. அவனுள்ளும் ஓடும்? அவனும் அதே குட்டையில் ஊறிய மட்டைதானே?

துஷ்டரைக் கண்டால் தூர விலகு! வாய்ப்புக் கிடைக்கும்போது. விலகி விட வேண்டாமா?

அது பற்றிப் பேச அவள் வாயெடுத்தபோது. திடுமென அறைக்

கதவு தட்டப்படவும். சகோதரிகள் இருவருமே. ஒரு கணம் விதிர்விதிர்த்துப் போயினர்.

சுவரில் மாட்டியிருந்த பழைய கால "ஆன்டிக்" கடிகாரத்தைப் பார்த்துவிட்டு. "அக்கா. மணி ஒன்றாகிவிட்டதே! அம்மாவோ?" என்றாள். சிறு கலக்கத்துடன் தங்கை.

மகள்களுக்கு மதிய உணவை எடுத்துக்கொண்டு. பகவதியே சில சமயம் வருவது உண்டு.

அவசரமாகக் கண். கன்னத்தைத் தொட்டுப் பார்த்தாள் மதிவதனி.

கண்ணீர் பகவதிக்குப் பிடிக்காத ஒன்று. அப்போதைக்குத் தட்டிக் கொடுத்தாலும். ஆறுதல் வார்த்தைகளைத் தொடர்ந்து. சுள்ளென்று ஒரு சூடும் பட வேண்டியிருக்கும்.

தமக்கையின் செயலைக் கவனித்துவிட்டு. "ஈரம் ஒன்றும் இல்லைக்கா. எதற்கும் முகத்தைக் கழுவிவிட்டு வருகிறாயா?" என்றவாறே எழுந்து சென்று. மயூரி கதவைத் திறந்தாள்.

கடை சேல்ஸ் பெண் ஒருத்தி. சாப்பாட்டுக் கூடையுடன் நின்றாள்.

"உங்கள் சாப்பாடுக்கா. அம்மா அனுப்பியிருக்கிறார்கள். இப்போதுதான் வந்தது. " என்ற அவளது வார்த்தைகளில். அக்கா தங்கை இருவருமே ஓரளவு நிம்மதியாக மூச்சு விட்டனர்.

பழைய கதை பேசுவதும். அவர்களுடைய அன்னைக்குப் பிடிக்காத விஷயமே! அதுவும். இந்தக் கதை பகவதிக்குத் தெரியக் கூடாது என்று. பிள்ளைகளே முடிவு செய்திருந்தனர். எப்படியோ. அம்மாவிடம் மாட்டிக்கொள்ளாதது நிம்மதியே!

ஆனால். கீழே பணி புரிகிறவளிடம் அதைக் காட்டிக் கொள்ளாமல். "பகல் உணவுக்கு "ஷட்டரை" இறக்கி விட்டீர்கள் அல்லவா? சீக்கிரம் போய்ச் சாப்பிடு. அன்பு. ஒரு மணி நேரத்தில் மீண்டும் கடை திறக்க வேண்டுமே." என்று அவளை அனுப்பிவிட்டு. மயூரி மறுபடியும் கதவைச் சாத்தினாள்.

ஆனால். உணவருந்தும் எண்ணம் ஒருவருக்கும் வரவில்லை.

இது விஷயமாகத் தாய் அறியாமல் பேச. இன்னும் சில இருந்தன.

எனவே. மயூரி தன் கருத்தைச் சொன்னாள். துஷ்டர் என்று தெரிந்தபின் தூ...ர விலக வேண்டியதுதானே?

"ஆனால். அது விவரம் அம்மாவுக்குத் தெரியாதே!" என்றாள் மதிவதனி. "பார் மயூரி. வரவுக்கும் செலவுக்கும் இழுத்துப் பிடித்துக் கட்டி

வரும் அளவுக்கு வட்டி கொடுக்க நேர்ந்தாலும். இந்தக் கடனை விட்டுவிடாமல் பெற வேண்டும் என்பது. அம்மாவின் விருப்பம். இந்தக் கடையின் வளர்ச்சியை. அப்பாவின் நினைவாகப் பார்க்கிறார்கள் என்பது. உனக்கும் தெரியும். அவர்களிடம் போய். எல்லாம் பகல் கனவாகப் போய்விட்டதாக எப்படிச் சொல்லுவது? “ என்று. இன்னொரு கவலைப்பட்டாள்.

“என்னக்கா. நீ! இப்படியும் பேசுகிறாய். அப்படியும் சொல்கிறாயே. அம்மாவுக்குத் தெரிய வேண்டாம் என்பதற்காக. அவர்கள் தரும் கடன் கூட வேண்டாம் என்று முதலில் சொன்னாய். இப்போது. காலைக் கையைப் பிடித்தாவது. கடனை வாங்க வேண்டும் என்பது போலக் கூறுகிறாயே! “ என்று. பெரியவளின் பேச்சிலிருந்த முரணைச் சுட்டிக் காட்டினாள் தங்கை.

“உண்மைதான்.” என்று பெருமூச்செறிந்துவிட்டு. “நிலைமை அப்படித்தானே மய்யூ. இருக்கிறது? அம்மாவை மட்டுமே நினைத்தாலும். இரண்டில் எது மேல் என்று. என்னால் முடிவெடுக்க முடியவில்லை. இவ்வளவு தூரம் வந்துவிட்டு. என் சிறுவயதுத் தப்பாலேயே முன்னிலும் கீழே இறங்குவது என்றால் உண்மையைச் சொல்வது என்றால் எனக்கும் மனதுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதுடி! “என்றவளின் குரல் கரகரத்துக் கண்களில் நீரும் கோத்து வழியலாயிற்று.

கடந்த சில ஆண்டுகளாக. பொறுப்பாகக் கடையை நடத்துகிற. கம்பீரமான அக்கா. இப்படிக் கலங்குகிறாளே!

மயூரி சட்டென ஒரு முடிவுக்கு வந்தாள். “அக்கா. இந்த வசீகரனை நான் ஒரு கல்யாண வீட்டில் பார்த்திருக்கிறேன். அது பற்றி. உன்னிடம் கூட. அப்போதே சொல்லியிருக்கிறேன். மனிதருக்கு. உள்ளூர ஒரு … கொஞ்சமே என்றாலும். ஒரு நல்ல புத்தியும் இருக்கிறதுக்கா. அவரிடம். நீ பேச வேண்டாம். ரொம்ப உணர்ச்சி வசப் படுகிறாய். அதனால். நான் பேசிப் பார்க்கிறேன். கடனைப் பெறவே. முழு முயற்சி செய்வோம். கடனைத் திருப்புவது பற்றி. வசீகரனுக்குக் கொடுத்த விவரங்களை. எனக்கும் அப்படியே தந்துவிடு. மற்றதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். “என்றாள் தீர்மானமான குரலில்.

கண்ணீருக்கிடையே மதிவதனி கவலையோடு பார்க்கவும். “பயப்படாதேக்கா. தடாபுடா என்றெல்லாம் பேச மாட்டேன். ஆனால். “விருத்தி”யில் ஏற்கனவே வாங்கிய கடன் தொகையை நல்லபடியாக வசூல் பண்ணும் எண்ணம் அவர்களுக்கும் இருக்கும் அல்லவா? அதை

அடிப்படையாக வைத்துக் கேட்கலாம் என்று இருக்கிறேன். அனேகமாக. சாதகமான பதிலே  கிடைக்கும். பார்.” என்றாள் நம்பிக்கையோடு.

அந்த அளவில். மதிவதனியும் திருப்தியடைய வேண்டியிருந்தது.

“செய்மா. ஆனால் எதற்கும் கோபப் பட்டுவிடாதே... “ என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே. மேஜையில் இருந்த “லாண்ட் லைன் “ ஒலியெழுப்பியது.

ரிசீவரை எடுத்து. “என்னம்மா?” என்று கேட்டாள் அவள்.

தந்தை வாங்கி வைத்திருந்த அந்தத் தொலைபேசியை. அந்த ஒரு காரணத்துக்காகவே பயன்படுத்துவதே. பெரும்பாலும் அவர்களுடைய தாயார்தான்.

“சாப்பிட்டீர்களா?” என்ற கேள்வியில் திடுக்குற்று நிமிர்ந்து. “இஇதோ சாப்பிடப் போகிறோம்மா. எஎல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டே இருந்தோம். அதற்குள் நீங்கள் ஃபோன் பண்ணிவிட்டீர்கள்.” என்றாள் மதிவதனி. நயந்த குரலில்.

“நன்றாக எடுத்து வைத்தீர்கள். நேரத்துக்குச் சாப்பிடத்தானே. நான் ஒருத்தி. இங்கே பறந்து பறந்து. பிடித்தது பார்த்துச் செய்து அனுப்புகிறேன். வேலை வேலை என்று. அப்பா அல்சரை இழுத்துக் கொண்டது தெரியும் அல்லவா? இப்படி ஏதாவது பண்ணுவீர்களோ என்று. நினைவு படுத்தத்தான் ஃபோன் செய்தேன். என்ன வேலை என்றாலும். உணவை முடித்துக்கொண்டு அப்புறமாகப் பாருங்கள். “ என்றாள் தாயார். சற்று கண்டிப்பான குரலில்.

பகவதிக்கு ஆத்திரமூட்டும் இன்னொன்று. நேரத்துக்குச் சாப்பிடாமல் இருப்பது.

இன்னொரு தரம். அன்னை கூப்பிட்டுக் கேட்குமுன் சாப்பிட்டு விட வேண்டும் என்று சகோதரிகள் உணவுப் பாத்திரங்களைத் திறந்தனர்.

தொடர்ந்த இரண்டு நாட்கள். வசீகரனாகத் தொடர்பு கொள்ளுவான் என்று காத்திருந்துவிட்டு. மூன்றாவது நாள். மயூரியே அவனைச் சந்திக்கச் சென்றாள்.

அவர்களது தரப்பிலிருந்து கொடுத்திருந்த மூன்று யோசனைகளின் சாதக பாதகங்கள் பற்றி. “விருத்தி”யின் புதிய நிர்வாகம் அலசி ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு ஒரு வாரம் அவகாசம் கொடுத்து. அதன் பின் மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்பது மதிவதனியின் அபிப்பிராயம்.

ஆனால். இரண்டு நாட்களுக்கு மேல் பொறுமையாக இருக்க முடியாமல். இன்ன விஷயம் என்று அக்காவிடம் சொல்லாமலே. டெயிலரிங் ஹவுசுக்குப் போகிற சாக்கில். மயூரி “விருத்தி” அலுவலகத்துக்குக் கிளம்பிவிட்டாள்.

“விருத்தி” அலுவலகம். மயூரிக்கு ஓரளவு அறிமுகம் ஆனதே. படிப்பு முடிந்து. அவளும் கடை வேலைகளில் பங்கேற்கத் தொடங்கிய பிறகு. ஒருதரம். கதிரேசனிடம் ஒரு செக் வாங்கிப் போக வந்திருக்கிறாள். ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்ததால். கதிரேசனே அவளை அழைத்துப் போய். குளிர் பானம் அருந்த வைத்து. செக்கைக் கையில் கொடுத்து அனுப்பி வைத்தார்.

அவருடைய உறவினள் போல. இளவரசி உபசாரம் அப்போது கிடைத்தது.

இப்போது அதை எதிர்பார்க்க முடியாது. அத்தோடு. முன் அனுமதி எதுவும் இல்லாமலும் வந்திருக்கிறாள்!

அலுவலகம் முன்னை விட. ஏதோ ஒரு விதத்தில் “பளிச்”சென்று தெரிவதை உணர்ந்தபடி. வரவேற்பில் தன் கார்டைக் கொடுத்தாள் மயூரி.

முன்னிருந்த டெலிஃபோன் கருவியை எடுத்துப் பேசிவிட்டு. “சற்று நேரம் உட்கார்ந்திருங்கள் மேடம் தகவல் சொல்லுவார்கள். “ என்று சொல்லி. அடுத்து வரிசையாகப் போடப் பட்டிருந்த நாற்காலிகளைக் காட்டினாள் அந்தப் பெண்.

தகவல்தான். சந்திக்கலாம் என்று சொல்லவில்லை!

குஷன் வைத்த வசதியான நாற்காலிகளே. ஆயினும். ஏனோ குன்றலாக உணர்ந்து. மயூரி தயங்கி நிற்கும்போதே. ஒரு புறமாக இருந்த “லிஃப்ட்” கதவு திறந்து. ஒரு பெரியவரோடு. வசீகரன் வெளிப்பட்டான்.

பலரும் எழுந்து மரியாதை செலுத்த. அதை ஒரு தலையசைவால் ஏற்றவாறே. பெரியவர் வாயிலை நோக்கிச் சென்றார்.

கூடவே சென்ற வசீகரன். அவர் ஏறிய கார் கிளம்பியதும் உள்ளே வந்தான். இப்போதும். அவளைப் பார்த்தும் பாராதது போலவே. “லிஃப்ட்”டில் ஏறிப் போய்விட்டான். அவன்.

அந்த நாற்காலிகளுள் ஒன்றில் அமர்ந்திருந்த ஒருவர் உள்ளே அழைக்கப்படவும். மயூரிக்கு எரிச்சல் வந்தது. தன்னை முதலில் கூப்பிடவில்லையே என்பதற்காக அல்ல தாமதமாகப் போனால். மதிவதனி தேடுவாளே என்கிற கவலையால். அக்காவிடம் என்ன

காரணம் சொல்லுவது?

இதை மறைக்க முடியாதுதான். மறைப்பதும் கூடாது. ஆனால். வசீகரனோடு பேச்சைத் தொடங்கிவிட்டால். கலக்கத்தில் இருக்கும் மதிவதனியால். அதைத் தள்ளிப் போட முடியாது.

நமக்குக் காரியம் ஆக வேண்டுமானால். நாம்தான் காத்திருக்க வேண்டும் என்பது. சரிதான். ஆனால். அவளுக்குத்தான் நேரம் வசதிப்படவில்லை. என்றாலும். பொறுமையை இழுத்துப்பிடித்துக்கொண்டு. பிடிவாதமாக மூன்று முறை மனதுக்குள் மயூரி நிதானமாக நூ எண்ணி முடிக்கையில். உள்ளிருந்து. அவளுக்கு அழைப்பு வந்தது.

அவனிடம் என்னென்ன சொல்ல வேண்டும் என்று உருப் போட்டபடி சென்றால். அப்போது எதையும் பேசுவதற்கில்லை என்றான் வசீகரன்.

“பார். உன் தமக்கை தந்த கணக்குகளை நான் இன்னமும் முழுமையாகப் பரிசீலித்து முடிக்கவில்லை. உன்னை அப்படியே திருப்பி அனுப்பினால் தவறாகத் தோன்றும் என்றுதான். வரச் சொன்னேன். நாளை மாலை சந்திப்போம். எங்கே என்று. எஸ்எம்எஸ் அனுப்புகிறேன்.” என்று விட்டு. பக்கவாட்டில் இருந்த போர்டின் பக்கமாகக் கையை நீட்டினான்.

வரவேற்புக்கான பட்டனை அழுத்தி அடுத்தவரை வரச் சொல்லப் போகிறான்.

மறுநாள் அவளுக்கு வசதிப்படுமா என்று கேட்கக் கூடத் தோன்றவில்லையே! அப்படிப்பட்ட மரியாதை அவளுக்கு அவசியமில்லை என்று எண்ணினான் போலும்!

“மெய்யாகவேதான் பார்த்து முடிக்கவில்லையா? அல்லது சும்மா இழுத்தடிக்கும் எண்ணமா?”

கை தயங்க. “ஏன்? அதிலென்ன சந்தேகம்? “ என்று கேட்டான் அவன்.

வாயை விட்டிருக்கக் கூடாது. அதுவும். அவன் கை உயர்ந்திருக்கும்போது. இப்போது என்னவென்று பதில் சொல்வது? “வெவெறும் மூன்று வகைக் கணக்கு. இரண்டு நாட்களில் முடியவில்லை என்கிறீர்களே!”

“உனக்கு. வெறும் மூன்று வகைக் கணக்குதான். ஆனால். உங்களது போல எனக்கு எத்தனை? வெறுமனே. உங்களோடு மட்டும்

தொழில் பண்ணிக் கொண்டிருந்தால். எங்கள் நிறுவனம் எப்படிப் பிழைக்கும்? “

பிழைக்காதுதான். பதில் சொல்ல முடியாமல் அவள் தயங்க. அவனே பேசினான்.

“இன்னொன்று நினைவிருக்கட்டும். தொழில் வேறு. வாழ்க்கை வேறு. இரண்டையும் சேர்த்துப் போட்டு உழப்பிக் கொண்டிருந்தால். ஒன்றும் உருப்படாது!” என்றவன். அத்தோடு பேச்சு முடிந்தது என்பது போல. விரல் முனையில் இருந்த பட்டனைத் தட்டி.

“ “சுரமயா” ரியல் எஸ்டேட் பார்ட்டியை வரச் சொல்லு் என்றான் பிசிரற்ற குரலில்.

வேறு பேச்சின்றி எழுந்து வெளியே சென்றாள் மயூரி.

இரண்டு விஷயங்கள் அவளுக்குத் தெளிவாயின.

ஒன்று. ஆறு ஆண்டுகளுக்கு முன் நடந்தவை. இவனுக்கு மிக நன்றாகவே தெரியும். அதில் கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் தீர்ந்துவிட்டது.

அடுத்து. அவனது வாய் வார்த்தையை நம்புவது என்றால். இந்தக் கடன் விஷயம். அக்காவின் பிரச்சினையால் பாதிக்கப் படப்போவது இல்லை. என்கிறான்.

அதை நம்பலாமா. கூடாதா?

# அத்தியாயம் - 7

வசீகரனை நம்புவது பற்றி. மயூரியின் மனம் குழம்பிக்கொண்டேதான் இருந்தது.

ஆனால். பொறுத்திருந்து பார்ப்பது தவிர. அவள் செய்யக் கூடியது எதுவுமில்லை!

மறுநாள். வசீகரன் அவளை வரச் சொன்ன இடம். ஒரு திறந்தவெளி காஃபி ஷாப். பெரிய மரங்கள் அடர்ந்திருக்கும் பகுதி. அது. பறவை எச்சம் விழுந்து விடாமல் இருப்பதற்காக. அங்கங்கே பெரிய வண்ணக் குடைகளின் கீழே  மேஜைகள் அமைக்கப் பட்டிருக்கும். அவற்றின் கீழே அமர்ந்து. எதையாவது கொறித்தபடி. தொழில். படிப்பு சம்பந்தமாகப் பலர் பேசிக் கொண்டிருப்பதை. நட்பு வட்டாரங்களோடு போன போது. மயூரியே பார்த்திருக்கிறாள். ஃபலூடா ரொம்பச் சுவையாக இருக்கும் என்று. தோழிகள் போவார்கள்.

அங்கே அவளை வரச் சொன்னது பற்றிக் குறை சொல்வதற்கு இல்லை. ஆனால். சற்று ஒதுக்குப்புறமான மேஜை ஒன்றை. அவன் முன்பதிவு செய்திருந்ததுதான். மயூரிக்கு ஒரு மாதிரி இருந்தது  இப்படி ஓரப் பகுதிகளில் அமர்கிறவர்களைத் தோழிகள் கிண்டலடித்துப் பேசுவார்கள். வீட்டுக்குத் தெரியாமல் ஓடப் போகிறவர்கள். அது. இது என்பார்கள்!

வசீகரன் வந்ததும். இடம் மாற்றி அமரக் கேட்கலாமா என்று யோசித்துவிட்டு. அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

உன்னையும் என்னையும் பற்றித் தப்பாகப் பேசுவார்கள் என்று செய்தொழில் பற்றிப் பேச வருகிறவனிடம் எப்படிச் சொல்வது? அதிலும். அவனது கை உயர்ந்திருக்கும் இப்போது?

சொன்ன நேரத்துக்கு வசீகரன் வந்து சேர்ந்தான்.

வந்ததுமே. லாப்டாப்பை எடுத்துக் கடை விரித்துவிட்டான்.

அதற்குள் ஆர்டர் எடுக்க வரும் சர்வரைக் கவனித்துவிட்டு. “எனக்கு எதுவும் வேண்டாம்.” என்றாள் அவள்.

அருகில் வந்து கேட்ட சர்வரிடம். கொறிக்க. குடிக்க இரண்டு செட் என்று அவன் ஏதோ கொண்டு வரச் சொல்லவும். அவளுக்கு எரிச்சல் வந்தது.

“நான்தான் எதுவும் வேண்டாம் என்றேனே.” என்றாள் மனதை

மறைக்காத குரலில்.

“இந்த இடத்தில் உட்கார்ந்து வேலை செய்வதற்கு வாடகையா. கொடுக்கிறோம்? அவர்களது வருமானத்தைக் கெடுப்பானேன்?” என்றான் அந்த நியாயவாதி.

பதில் சொல்ல மாட்டாமல். தன் லாப்டாப்பை எடுத்தாள் மயூரி.

நல்லவேளையாகக் குத்திக் காட்டாமல். வந்த வேலையைப் பார்த்தான். வசீகரன். “மதிவதனியின் திட்டங்கள் மூன்றில் ஒன்று. இன்றிருக்கிற அதே நிலையில். கடன் விவகாரத்தைத் தொடர்வது. அது முடியாத காரியம். இன்றைய பண வீக்கத்துக்குப் பாதி கூடக் கட்டி வராத விதத்தில். நிதி நிறுவனத்தை நடத்த முடியாது. அடுத்தது. இன்னும் சில ஆண்டுகளுக்கு. வெறும் வட்டி மட்டும் கட்டுவதாகவும். பெண்கள் உடைப் பிரிவில் லாபம் வரத் தொடங்கியதும். அசலோடு சேர்த்துக் கட்டுவதாகவும் குறித்திருக்கிறது.

இந்த வட்டி வீதமும் மிகக் குறைவே. அத்தோடு. லாபம் வராவிட்டால் என்பது பற்றி எதுவுமில்லை “

குறுக்கிட்டு. “கட்டாயம் லாபம் வரும். வசீகரன். நாங்கள் மூவரும் சேர்ந்து. பலமுறை கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டோம். எப்படியும் லாபம்தான் வரும். “ என்றாள் மயூரி.

“நீங்கள் போட்ட கணக்கில் உங்களுக்கு லாபம் வராதா?”

குப்பென்று முகம் சிவந்தது. மயூரிக்கு. “அப்படியானால். பொய்க் கணக்குத் தருகிறோம் என்கிறீர்களா?” என்று. ஆத்திரத்துடன் கிரீச்சிட்டாள்.

“ஷ்! தொழில் பேச்சுகள் பேசி உனக்கு அனுபவம் இல்லை என்று தோன்றுகிறது. இப்படி உணர்ச்சி வசப்படுகிறாயே! உங்களுக்கு லாபம் வருவதானால். பொய்க்கணக்காக இருப்பானேன்? நஷ்டப்பட்டு விடாமல். கூடவே லாபமும் வருகிற விகிதத்துக்குத்தானே . வட்டி வீதமும் போட்டிருப்பீர்கள்? அதைச் சொன்னால். ஆத்திரப்படுகிறாய்? “ என்று நிறுத்தினான் வசீகரன்.

அவள் மன்னிப்புக் கேட்பதற்கான இடைவெளி.

வேறு வழியில்லை. தரையைப் பார்த்தபடி. “சாரி.” என்றாள் அவள் முணுமுணுப்பாக.

அவன் தொடர்ந்தான். “ஆனால். இதன்படி நடந்தால். எங்களுக்கு நஷ்டமாகி விடும் ”

“இல்லையே. புழக்கத்தில் இருக்கும் அளவு இல்லாவிட்டாலும். உங்களுக்கும் ... “ என்றவளை. இப்போது அவன் இடைமறித்தான்.

“இல்லை கட்டுபடியாகாது. ஒரு பெரிய கட்டிடத்தில். இந்தக் கணக்கு வழக்குகளைக் கையாள்வதற்காகப் பலருக்குச் சம்பளம் கொடுத்துத் தொழில் நடத்துவதற்கு. இந்த வட்டி போதாது. “ என்றான் அவன் தீர்மானமாக.

“ஏன்? எங்கள் ஒரு கடைக்காக மட்டும்தானா. இத்தனையும் நீங்கள் வைத்திருக்கிறீர்கள்?” என்று அவன் ஒரு தரம் கூறியதையே திருப்பிப் படித்து அவனை மடக்கினாள் அவள்.

கூடவே. “இதிலும். சிறு துளி கிடைக்கிறதுதானே? மற்றதோடு சேர்ந்து. சமனாகி விடாதா?” என்று சமாளிக்கவும் முயன்றாள்.

ஆனால். “எல்லோருமே இப்படிக் கேட்டால். என்னம்மா செய்வது?” என்று அவன் கேட்டபோது. அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

“எனவே. வட்டி விகிதத்தை ஏற்றினால்தான். எங்களுக்குக் கட்டுபடியாகும். எவ்வளவு என்று கணக்கிட்டு எழுதி வைத்திருக்கிறேன்.” என்று. லாப்டாப் உறையின் பக்கப் பையிலிருந்து ஒரு கவரை எடுத்தான்.

உரக்கப் பேசியவாறு வந்த ஒரு கும்பலினால் கவனம் கலைந்து பார்த்த மயூரி. சட்டென இருக்கையை இழுத்துப் போட்டு திரும்பி அமர்ந்தாள்.

“என்ன?”

“தெரிந்தவர்கள்.”

“அதற்கென்ன?”

“தப்பா...க. வந்து கிண்டலாகப் பேசுவார்கள்.” என்றாள் அவள்.

“என்னது?!” என்று அதிசயப்பட்டான் அவன். “இரவு நேரம் கூட இல்லை! பட்டப் பகலில். ஒரு திறந்த வெளி காஃபி ஷாப்பில். இரண்டு பேர் தொழில் விவகாரம் பேசுவதையே தப்பாக எண்ணுவார்களா? ஆச்சரியமாக இருக்கிறதே!”

தொழில் வேறு. வாழ்க்கை வேறு என்றவன். மறைமுகமாக மதிவதனியைக் குத்திக் காட்டுகிறான். நேரடியாகக் கேட்டால். பொதுவாகச் சொன்னதைத் தப்பாக எடுப்பானேன்.. குற்றமுள்ள மனமா என்று கேட்கத் தயங்க  மாட்டான் என்று மயூரிக்குத் தோன்றியது.

ஒருவேளை பொதுவாகவே சொல்லியும் இருக்கலாம் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொள்ள முயன்றாள் அவள்.

எப்படியும். அவசரப்பட்டுப் பேசி. எதையும் கெடுத்துக்கொள்ளக் கூடாது.

அழுந்த மூடியிருந்த உதடுகளைப் பார்த்துவிட்டு. “இன்னொன்று கேட்க வேண்டுமே. நீங்கள் இருவரும் இளம் பெண்கள். திருமணம் எப்போது?” என்று கேட்டு. அவளைத் திகைக்க வைத்தான் வசீகரன்.

திகைத்தாலும். திருப்பிக் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பு என்று கருதி. “தொழில் வேறு வாழ்க்கை வேறு.. இரண்டையும் குழப்பக் கூடாது என்றீர்களே. திருமணம் எங்கள் சொந்த வாழ்வுதானா. இல்லையா?” என்று அவனிடம் சந்தேகம் கேட்டாள் மயூரி.

அவன் அலட்டிக் கொள்ளவே இல்லை. “பொதுவாக அப்படித்தான். ஆனால். லட்சக் கணக்கில் பணத்தைக் கொடுத்த பிறகு. நீங்கள் இருவரும் திருமணம் செய்துகொண்டு போய்விட்டால். கடைப் பொறுப்பு யார் பார்ப்பார்கள்? என் பணமல்லவா. நஷ்டப்படும்?”

சொந்த விஷயத்தில் மூக்கை நுழைப்பது மட்டுமின்றி. அதை நியாயப்படுத்தவும் செய்கிறானே!

“கடையை நடத்துவதில் மூன்று பெண்கள் ஈடுபட்டிருக்கிறோம். அக்கா உதவிக்கு வருமுன். அப்பாவுக்கு உதவியாக. அம்மாதான் பெருமளவு பார்த்தார்கள். இந்த விரிவாக்கத் திட்டத்திலும். கணிசமான பங்கு அவர்களுடையதே. அதனால். கடை நடப்பதில் ஒருபோதும் சுணக்கம் நேராது.”

“ஆனாலும். மூன்று பேர் செய்வதை. ஒரே ஒருவர். அதிலும் மூத்த தலைமுறை எப்படிச் செய்ய முடியும்?” என்று விடாமல் வினவினான் வசீகரன்.

பொறுமையிழந்து. “சார். நாங்கள் பயங்கரமாகச் சூடு பட்ட பூனைகள். அதனால். எங்கள் வீட்டில். திருமணம் என்கிற பேச்சுக்கே இடம் கிடையாது. அதனால். கடையை விட்டுப் போகவே மாட்டோம். உங்கள் பணம் நஷ்டப்படவும் வாய்ப்பே கிடையாது. போதுமா?” என்று எரிச்சலுடன் கேட்டாள் மயூரி.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு. “நீ தந்த விவரத்தின் பின் பாதியே எனக்குத் தாராளமாகப் போதும். என் பணம் பாதுகாப்பாக இருக்கும் என்கிற உத்திரவாதம் மட்டுமே. எனக்குத் தேவையானது. அதற்கு மேல். நீ தந்த அதிகப்படி விவரம். அந்தச் சூடு பட்ட பூனை

பற்றிய விளக்கத்தை. என்னவென்று கூட நான் கேட்பதாகவே இல்லை.” என்றான். சற்றே ஏளனம் கலந்த குரலில் அவன்.

அதாவது நம்ப மாட்டானாம்! போகட்டுமே.

அப்படியே நீ கேட்டாலும். அதை விளக்குவதற்காகத்தான் நான் காத்துக் கொண்டு இருக்கிறேனாக்கும் என்று அவனை விடவும் எகத்தாளமாக எண்ணிய மயூரிக்குச் சட்டெனத் தொண்டை இறுகிப் போயிற்று.

எதையும் விளக்க முடியாதே!

என்னதான் மதிவதனி கள்ளமற்றவள் என்றாலும். இவன் அண்ணனை நம்பி. ஊட்டி வரை அவனோடு தனியாக சென்றதை. எப்படி நியாயப்படுத்துவது? பனை மரத்தடியில் நின்று பால் குடித்ததாகக் கூறுவது போலத்தானே? என்ன சொன்னாலும். இவன் எப்படி நம்புவான்? அந்த அண்ணன் வேறு. அவனுக்கு வசதியாக. அவர்கள்

வீட்டில் என்ன மாதிரி நாடகம் போட்டானோ?

மயூரி பேச முடியாமல் அமர்ந்திருக்க. தன்னிடமிருந்த கவரை. வசீகரன் அவளிடம் நீட்டினான். “இதில் இன்னும் சில யோசனைகள் குறித்து வைத்திருக்கிறேன். உன் அம்மா. அக்காவிடம் நன்கு கலந்து ஆலோசித்துவிட்டு. நாளைக்குப் பதில் கொடு. சந்திக்க வேண்டிய இடம். ஹோட்டல் “சமேலி”யின் லாபி. மாலை நாலு மணி.” என்று. எட்டிப் பார்க்கவும். சர்வர் பில்லோடு ஓடி வந்தான்.

ஹோட்டலுக்கெல்லாம் என்று எழுந்த வார்த்தைகள். மயூரியின் தொண்டைக்குள்ளேயே அடங்கின.

மறுத்துப் பேசினால். லாபிக்குத்தானே வரச் சொன்னேன்? அறைக்கா கூப்பிட்டேன் என்று கேட்கப் போகிறான். மதிவதனியைக் குத்துவது போல. மறைமுகமாக. ஏதோ கூறுவான். எதற்கு வம்பு?

அவளும் எழுந்து. லாப்டாப்பை எடுத்துக் கிளம்பும்வரை. வசீகரனும் அங்கேயே காத்திருக்கவும். அவனோடு சேர்ந்தே மயூரியும் கிளம்ப நேர்ந்தது.

“போவது கடைக்கு என்றால். காரிலேயே...” என்றவனிடம். ஓரளவு இப்படி நேருமோ என்று எதிர்பார்த்து. ஸ்கூட்டியில் வந்த தன் கெட்டிக்காரத்தனத்தை உள்ளூர மெச்சியபடி. “வேண்டாம். சார். நான் ஸ்கூட்டியில் வந்தேன்.” என்று. மறுத்தாள் அவள்.

பார்க்கிங் பகுதியை நெருங்கும்போது. அவர்களைக் கண்டுவிட்டு. வசீகரனுடைய காரோட்டி. அவனது லாப்டாப்பை வாங்க விரைந்து வந்தார்.

கூட அவளையும் கண்டதும். வாயெல்லாம் பல்லாக. “வணக்கம்மா.” என்றார்.

முறுவலித்து. “இருமல் குணமாகிவிட்டது போல. குரல் தெளிவாக இருக்கிறதே.” என்று அவளும் மகிழ்ச்சி காட்டிவிட்டு. வசீகரனிடம் விடை பெற்றுக் கிளம்பினாள்.

கார் கிளம்பி. சாலைப் போக்குவரத்தில் கலந்ததும். “ரொம்ப நல்லகுணம் தம்பி. இருமியதைப் பார்த்ததும். இப்படி வென்னீர் யார் கொடுப்பார்கள். மகராசி. நன்றாக இருக்கட்டும்.” என்றார் காரோட்டி.

டிரைவரைக் கூட எப்படி வளைக்கிறார்கள் என்று வசீகரன் நினைத்தான். ஒரு குடும்பத்தைக் கலைக்கும் பாவத்தைச் செய்வதுவிட்டு. இதெல்லாம் என்ன சோளப்பொரி என்று ஆத்திரத்துடன் நினைக்கும்போதே. கல்யாண வீட்டில் அந்தக் குழந்தையைக் காப்பாற்ற. மயூரி வெளியே ஓடியது. அவனுக்கு ஞாபகம் வந்தது.

அதுவும் அப்படி ஒரு சோளப்பொரிதானோ? அல்லது எல்லாம் விரைவில் தெரிந்து விடும் என்று கடுப்புடன் யோசித்தவாறே. ஃபைலைத் திருப்பினான் அவன்.

சமேலி உயர்தரம் என்று பெயர் வாங்கிய ஹோட்டலே என்றபோதும். அடுத்து அங்கே செல்வது பற்றி மயூரி வீட்டில் எதுவும் சொல்லவில்லை.

சூடு பட்டது ஒரு புறம் இருக்க. சூடு போட்ட குடும்பம் என்பதும் இருக்கிறதே.

விருத்தி அலுவலகம் சென்றே. வசீகரனை அவள் சந்தித்துப் பேசி வருவதாகவே. தாயும் தமக்கையும் நினைப்பது தெரிந்தும். அப்படியே நினைக்கட்டும் என்று மயூரி விட்டுவிட்டாள். அவர்களுக்கு. அந்த நிம்மதியேனும் இருக்கட்டுமே!

ஆனால். மயூரியைப் பொறுத்த வரையில். வசீகரன் கடன்பணம் தருவான் என்கிற நம்பிக்கை. முதலில் இருந்தே ஓர் அறுபது சதம் கூடக் கிடையாது.

அதிலும். அவனது மறைமுகக் குத்தல்களால் அந்த சதவீதம். இன்னமும் குறைந்துக் கொண்டேதான் போயிற்று.

ஆனாலும். ஒருவேளை. மிகவும் அபூர்வமாக ஒருவேளை. அவனது "தொழில் வேறு. வாழ்க்கை வேறு" தத்துவம் மெய்யாக இருந்து பணம் கிடைக்கக் கூடுமோ என்ற ஓர் அற்ப ஆசையும். இந்தப் பணம் கிடைக்காவிட்டால். கடை எவ்வளவு பின்னடைவைச் சந்திக்க நேரும் என்ற கவலையுமே. அவளை இந்த முயற்சியில் தொடர்ந்து ஈடுபட வைத்தன எனலாம்.

தன்னால். இந்த முயற்சி கெட்டுவிடக் கூடாது என்ற பிடிவாதத்துடனேயே. மறுநாள் ஹோட்டல் "சமேலி"க்குள் அவள் காலடி எடுத்து வைத்தாள்!

இங்கேயும் வசீகரன் குறிப்பிட்ட நேரத்திற்கே வந்து சேர்ந்தான்.

வாயில்புறமிருந்து வராமல். பக்கவாட்டில் இருந்து அவன் வந்தது போலத் தோன்றியபோதும். அது பற்றிய கேள்வியில் நேரத்தை வீணாக்க. மயூரி விரும்பவில்லை.

ஏனெனில். வசீகரனின் புதிய யோனைகளில் ஒன்றிரண்டு ஓரளவு அவர்களுக்கு ஒத்து வரும் போலத் தோன்றினாலும். அவனது வட்டி விகிதம் மிகவும் அதிகமாக இருந்தது. அவனுக்கே அந்த வட்டி கொடுத்தால். அந்தப் பணத்தில் வாங்கும் துணிமணிகளின் விற்பனை விலையை. நிறையக் கூட்டினால்தான் லாபம் காண முடியும்.

ஆனால். அவர்களது கடையில் விலை அதிகம் என்று பெயர் வந்துவிட்டால். அப்புறம். அங்கே வாங்குவதற்கு யார் வருவார்கள்?

இது பற்றி எடுத்துச் சொல்லி. வட்டி விகிதத்தைக் குறைப்பது. அன்று அவளது முக்கியப் பொறுப்பாக இருந்தது.

ஆனால். முன்தினம் போலத் தனி மேஜையாக ஒதுங்கி இருந்து பேச முடியாததால். குறுக்கீடுகள் அதிகம் இருந்து தொல்லை செய்தன. குறுக்கும் நெடுக்குமாக வந்து போனவர்கள் போதாது என்று. மயூரியின் தோழியர் கூட்டத்தில் ஒருத்தியே. ஓர் இளைஞனுடன் அங்கே வந்து நின்றாள்.

அந்த இளைஞனோடு அவள் சுற்றுவது. எல்லோரும் அறிந்ததே.

மயூரியைக் கண்டதும் அருகில் வந்து. "ஏ...ய் மயூரி. நீ பெரிய ஆள்ப்பா! சொல்லவே இல்லையே! நேற்று. காஃபி ஷாப்புக்கும். இவரோடு வந்தாய்தானே? பாரு தீனா. நாம் எவ்வளவு வெளிப்படையாகப் பழகுகிறோம். இவள் எப்படி ஒளித்து மறைத்து வைக்கிறாள் பார் இவளைப் போய் நல்லவள் அப்பாவி என்றாயே!" என்று. யாரும் குறுக்கிடவே இடம் கொடாமல் மடமடவென்று

பொரிந்து கொட்டினாள்.

அந்தத் தீனா. அவளிடம் என்ன சொன்னானோ? மயூரியை அவனிடம் குறைத்துக் காட்டுவதுதான் அவளது குறிக்கோளாக இருந்தது.

முகக் கன்றலை அடக்க முயன்றபடி. "நீ நினைப்பது போல இல்லை. அஞ்சலி. மிஸ்டர் வசீகரன் எங்கள் கடையின் "ஃபைனான்சியர்". கடை விரிவாக்கம் பற்றித்தான் பேசிக் கொண்டு இருக்கிறோம்." என்றாள் மயூரி. முடிந்தவரை அமைதியாக.

"இம்...இம்... நீ சொன்னால் ஒத்துக் கொள்கிறோம்ப்பா." என்று அஞ்சலி தலையை ஆட்டிய விதத்தில். நேர் எதிர்றைக் கருத்து. தெளிவாகத் தெரிந்தது.

தலையைக் கொஞ்சம் பின்னுக்குச் சாய்த்துத் தோள் விரிய சற்று அலட்சியமாகப் பார்த்தான் வசீகரன். "ஹலோ " என்று அஞ்சலியை அழைத்து. "கொஞ்சம் கண்ணைத் திறந்து பார்த்தால் எங்கள் முன்னே இருக்கும் கணக்குகளும் கண்ணில் படும். உங்கள் தோழியோ விரோதியோ இவள் விஷயம் எப்படியோ? எனக்கு நேரம் பொன்னானது. இடத்தைக் காலி செய்தீர்கள் என்றால். வேலையைத் தொடர. எனக்கு வசதியாக இருக்கும்." என்றான் குரலில் சிறு அழுத்தத்துடன்.

கடுமை என்று சொல்ல முடியாது. ஆனால். கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறைதான். அஞ்சலிக்கு முகம் கறுத்துவிட்டது. நல்லவேளையாகத் தீனா. "சாரி சார்." என்று அவளைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டான்.

தோழிகளிடையே. இவள் என்னென்ன மாதிரிக் கதை பரப்பப் போகிறாளோ என்று வருத்தத்துடன் யோசித்த மயூரியிடம். "இங்கே ஒரே இடைஞ்சலாக இருக்கிறதே! ரூம் இருக்கிறது. குறுக்கீடு இல்லாதிருக்க. அறைக்குள் போய் விடலாமா?" என்று கேட்டு அதிர வைத்தான் வசீகரன்.

திகைப்பு கோபமாக மாறி. கண்களில் கனல் எழ அவள் உறுத்து விழிக்கவும். "என்ன? பார்க்கப் பயமாகத்தான் இருக்கிறது. ஆனால். "கான்ஃபரன்ஸ்" அறைக்குள் போய்ப் பேசுவதற்கு. எதற்கு இந்தக் காளிகாதேவி அவதாரம்?" என்று ஏளனமாகக் கேட்டான் வசீகரன்.

"இரண்டே பேருக்காகக் "கான்ஃபரன்ஸ்" அறையா?" என்று அதே ஏளனத்துடன் திருப்பினாள் மயூரி.

“இரண்டே பேருக்காகவா? அதெப்படி?” என்று புரியாதவனைப் போலக் கேட்டான் அவன். உடனேயே புரிந்துவிட்டாற்போல “ஓ!” என்று நெற்றியைத் தட்டி. “புரிகிறது. மறுபடியும். உங்கள் ஒரு கடைக்காக மட்டும். நான் நிதி நிறுவனம் நடத்துவதாக எண்ணிவிட்டாய்! அப்படி அல்ல. பெண்ணே! இன்னும் ஒரு மணி நேரத்தில். கட்டுமான நிறுவனங்களோடு. எனக்கு ஒரு சந்திப்பு இருக்கிறது. அதற்காக பதிவு செய்யப்பட்ட அறை மதியத்திலிருந்தே அது நம் கணக்குதான். அங்கிருந்து. இடையூறு இல்லாமல் பேசலாமே என்று எண்ணினேன். ஆனால். உன்னிஷ்டம்! விருப்பம் இல்லாதவளைக் கட்டாயப்படுத்தித் தரதரவென்று இழுத்துப் போகமுடியாது. உன் விருப்பம் சொன்னால். அதன்படி செய்வோம்.” என்றான் அவன். அதே சிறு ஏளனத்துடன்.

இதற்கு மேல் எப்படி மறுப்பது?

ஆனால். என் அண்ணன் ஒன்றும். உன் சகோதரியை வலுக்கட்டாயமாக இழுத்துப் போகவில்லை.. விரும்பியே போனாள் என்று ...வழக்கம் போலவே மறைமுகமாகக் கூறுகிறானோ என்றும் தோன்றி மனம் வலித்தது.

வேண்டாதவர்களிடம் கை தாழ்ந்து நிற்க நேர்ந்தால். இது போன்ற குத்துகளையும் சகித்துத்தான் தீர வேண்டும் போல என்று எண்ணியபடி அவள் எழுந்தாள்!

அடுத்த பதினைந்து நிமிஷங்கள். வசீகரனின் யோசனைகளைப் பற்றி. வீட்டின் மூன்று பெண்களுமாக அலசி ஆராய்ந்து எடுத்த முடிவுகள் பற்றிய விவாதத்தில் கழிந்தன.

எப்படி. கடை வாபகரமாக நடந்தால்தான். அவனது பணத்தைத் திருப்பித் தர முடியும்.. அப்படி லாபகரமாக நடப்பதற்கு. “விருத்தி” வட்டி வீதத்தைக் குறைப்பது எவ்வளவு அவசியம் என்பதை. மயூரி தெளிவுபட எடுத்துரைத்தாள்.

குறுக்கிடாமல் கேட்டுவிட்டு. “அதாவது. வட்டி விகிதத்தைக் குறைப்பதோடு. கடனையும் தந்தால்தான். உங்கள் கடை பிழைக்கும்! அப்படித்தானே?” என்று வசீகரன் ஐயம் விசாரித்தான்.

ஏதோ எச்சரிக்க. “கிட்டத்தட்ட அப்படித்தான்.” என்றாள் மயூரி.

“ரைட் இது “ஆஃப் த ரிக்கார்ட்” என்பார்களே. அது போல. அதிகார பூர்வம் அல்லாத கேள்வி. சொல்லு மயூரி. இந்தப் பணம் தரமாட்டேன் என்றால். அப்போது. நீ நீக்குப் போக்காக நடப்பாயோ?”

என்று அவளையே பார்த்தபடி கேட்டான் அவன்.

ஒரு கணம் உடம்பில் தீப்பிழம்பு தாக்கிய மாதிரி. மயூரி உணர்ந்தாள். ஆனால். ஏற்கனவே. மனதில் ஓர் எச்சரிக்கையும் இருந்ததால். காலைக் குனிந்து பார்த்துவிட்டு. “அதிகாரபூர்வம் அல்லாத கேள்விக்குப் பதிலும் அப்படியேதான் வரலாமில்லையா. சார்? இன்று நான் அணிந்திருக்கும் காலணியில். நிறைய நாடாக்கள் இருக்கின்றன. சட்டெனக் கழற்றுவது கடினம். நாளைக்கு இலகுவாகக் கழற்றக் கூடிய காலணி ஒன்றை அணிந்து வரும்போது இந்தக் கேள்வியைக் கேட்டால். உரிய பதில் உடனே கிடைக்கும். சார்.” என்று பதவிசு போலப் பதில் சொல்ல அவளால் முடிந்தது.

“என்னது? செருப்பால் அடிப்பாயா? பரவாயில்லையே! “ என்று சிரித்தாலும் உடனேயே மாறி. “போகட்டும். தகவலுக்கு நன்றி. இனி. அதிகாரபூர்வமாகவே பேசலாம். உண்மையில். உங்களது மாற்றங்கள் எதுவும். என்னால் ஒத்துக்கொள்ளக் கூடியதாக இல்லை. மயூரி.” என்றான் அவன். தெளிவாக.

இரண்டு நாட்களாக இழுத்தடித்துவிட்டு. இல்லை என்கிறான்!

மயூரியின் உள்ளிருந்த அறுபது சதவீதத்தில் மிச்சம் மீதி ஒட்டியிருந்த நம்பிக்கையும் முழுதாக அழிந்து போயிற்று. திரும்பிப் போய். ஆவலோடு காத்திருக்கும் தாய். தமக்கையிடம். இதை எப்படிச் சொல்லுவது?

# அத்தியாயம் - 8

தாயிடமும் தமக்கையிடமும் இதை எப்படிச் சொல்லுவது என்ற தவிப்பை விடவும். இப்போது இவனிடம். அந்தத் தவிப்பைக் காட்டாதிருப்பது முக்கியம் என்று மயூரிக்குத் தோன்றியது.

எனவே. கஷ்டப்பட்டு முகத்தை இயல்பாகவே வைத்துக்கொண்டு. “அதனால் பபரவாயில்லை. வசீகரன். எங்களிடம் மாற்றுத் திட்டமும் இருக்கிறது. இதை மட்டுமே நம்பிக்கொண்டு இருக்கவில்லை. என்ன. கொஞ்சம் தாமதம்
நாளாகும். பரவாயில்லை. எளப்படியோ நாங்களே சமாளித்துக் கொள்ளுவோம். ஒரு...ஒரு சில ஆண்டுகளே ஆகக் கூடும். ஆனால் நாங்கள் நிமிர்கிறோமா. இல்லையா என்று நீங்களே பார்க்கத்தான் போகிறீர்கள்!” என்று சவால் விடுவது போலக் கூறியவாறே. தன் லாப்டாப் நோட்பாட் எல்லாவற்றையும் எடுத்து உள்ளே வைக்கலானாள்.

இனியும். இங்கே எதற்காக இருப்பது? கை தடுமாறி விழுந்த பால்பென்னைக் குனிந்து எடுக்கையில். “ஆனால். அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறதே.” என்ற வசீகரனின் குரல் அவளைத் திடுக்கிட வைத்தது.

அதில் என்ன சிக்கல்? உழைக்கத் தயங்காத மூன்று பெண்கள். முழு மூச்சுடன் பாடுபட்டு. நிலையை உயர்த்தப் போகிறார்கள். இதில் சிக்கல் என்ன வர முடியும்? சும்மா மிரட்டிக் கலங்கடிக்கப் பார்க்கிறான் !

பேனாவை எடுத்து உள்ளே வைத்துவிட்டு. அவனை வெட்டுவது போலப் பார்த்து. “என்ன சிக்கல்?” என்று மிடுக்காகக் கேட்டாள் அவள்.

“உங்கள் கடையை ஈடாக வைத்துத்தானே. கதிரேசன் சாரிடம். அதாவது “விருத்தி”யிடம் முதல் கடன் தொகையையே பெற்றிருக்கிறீர்கள்? கொடுத்த பணத்தை “விருத்தி” உடனே திருப்பிக் கேட்டால்? இருக்கும் அந்தக் கடையும் போய். நிலைமை மிகவும் மோசமாகிவிடாது?” என்று. சிறு முறுவலுடன் இலகுவாகக் கேட்டான் வசீகரன்.

இவனுக்கு வேடிக்கையாக இருக்கிறதா?

வசீகரனாம்! யார் பெயர் வைத்தார்களோ என்று ஆத்திரமாக வந்தது. மயூரிக்கு. பெண்கள் என்றால். ஒன்றும் தெரியாத முட்டாள்கள் என்று எண்ணினான் போல!

கோபம் தந்த துணிச்சலுடன். “என்ன பழைய காலப் பண்ணையார்

மாடல் மிரட்டலா? அதற்குப் பயப்பட. இங்கே படிப்பறிவு இல்லாமல பாமரப் பெண்கள் யாருமில்லை. சார். கடனைக் கட்ட முடியாததற்காக ஒரு தொழிலை அழிப்பது. அவ்வளவு எளிதல்ல. சட்டம் இருக்கிறது. பார்த்துக் கொள்வோம்." என்றவள். அதற்கு மேல் நில்லாமல் மடமடவென்று அங்கிருந்து வெளியேறிப் போய்விட்டாள்.

அவன் கூப்பிடுவது போலக் கேட்டும். அவள் வினாடி கூடத் தயங்கவில்லை. இதற்கு மேல். அவனோடு பேச என்ன இருக்கிறது?

கடைக்குத் திரும்பிச் செல்ல. மயூரிக்கு மனமில்லை. அங்கே. நல்ல பதிலை எதிர்பார்த்துக்கொண்டு. மதிவதனி காத்திருப்பாளே! மதிய ஓய்வு முடிந்து. அம்மா கூட வந்திருக்கலாம். ஆவலாகக் காத்துக் கிடப்பவர்களிடம். என்னவென்று சொல்லுவாள்!

ஸ்கூட்டியை எடுத்துக்கொண்டு. நேரே கடற்கரைச் சென்றாள்.

நல்லவேளையாகக் கடற்காற்று வீசத் தொடங்கியிருந்தது.

தன்னையறியாமல் உடம்பு தளரத் தொடங்கியபோதும். உள்ளக் கொதிப்பு குறைய மறுத்தது.

நீக்குப் போக்காக நடப்பதாமா? அதற்கு வழியில்லை என்றதும். பணம் இல்லை என்றுவிட்டான்! அண்ணனுக்குத் தம்பி. கொஞ்சமும் குறைவில்லை என்று தெள்ளத் தெளிவாகக் காட்டியிருக்கிறான்!

என்னமோ இவனிடம் ஒரு நல்லபுத்தி இருப்பதாக. மதிவதனியிடம் வேறு கூறிய. அவளது முட்டாள்த்தனத்தைதான் நொந்து கொள்ள வேண்டும்! இல்லாவிட்டால். அக்காவேனும் எதையும் எதிர்பாராமலே இருந்திருப்பாள்! சே! சுத்த மடத்தனம்!

தன்னைத் தானே நொந்துகொள்ள. மயூரிக்கு பல நாட்கள்கூடப் போதாதுதான். ஆனால். இருட்டிவிட்டால். அவளைக் காணாமல். அதற்கு வேறு பெரியவர்கள் வருந்துவார்களே என்ற ஒரே காரணத்துக்காகவே. மாலை வெளிச்சம் மங்கத் தொடங்கியதும். மயூரி அங்கிருந்து கிளம்பி. கடைக்குச் சென்றாள்.

சோர்வுடன் கடைக்குள் காலடி எடுத்து வைக்கும்போதே. ஏதோ ஒரு வேறுபாட்டை. மயூரி கண்டு பிடித்தாள் கடையில் இருந்த அத்தனை பேர் முகங்களும். பளிச்சென்று மலர்ந்திருந்தன.

எப்போதுமே. கடை நேரத்தில். எல்லோர் முகங்களும் புன்னகையோடுதான் இருந்தாக வேண்டும். மதிவதனி கொண்டு வந்த சட்டம். "நாமே அழுது வடிந்தால். வாங்க வருகிறவர்களுக்கு எப்படி இருக்கும்" என்பாள். அதனால். இந்த விதியை அனைவரும்

கட்டாயமாகப் பின்பற்றியாக வேண்டும். ஆனால். இன்று எல்லோர் முகங்களிலும். அதிகப்படியாக ஒரு பல்ப் எரிவது போல. ஒரு தோற்றம் தெரிந்தது!

மயூரியைக் கண்டதும். அன்பு ஓடி வந்தாள். “சின்னக்கா. இப்போதுதான் அக்கா வந்து உங்களைத் தேடிவிட்டுப் போனாங்க. ஆஃபீஸ் அறையிலே அம்மா கூட இருக்கிறாங்க. நீ வந்ததுமே. அங்கே வரச் சொன்னாங்கக்கா.” என்று தகவல் சொன்னவளின் கையில். பாதி உண்ட பார் சாக்கலேட் இருந்தது.

சின்னவளின் பார்வையைக் கண்டதும். வெட்கமாகச் சிரித்து. “அக்கா தான் கொடுத்தாங்க!” என்றாள் சந்தோஷத்துடன்.

சாக்கலேட் கொடுத்து சந்தோஷம் கொண்டாடும் அளவுக்கு என்ன நடந்திருக்கும்? ஏதேனும் பெரிய அளவு விற்பனையா? ஆனால். அவள் கொண்டு வந்திருக்கும் செய்தியில். எல்லாம் காற்றுப் போன பலூனாக. ஒன்றுமில்லாமல் போய்விடப் போகிறதே!

கடைப் பெண்களிடம் பேருக்கு முறுவலித்துவிட்டு. மயூரி ஒரு புறமாக இருந்த அலுவல் அறைக் கதவைத் திறந்தாள்.

உள்ளே நின்று பேசிக் கொண்டிருந்த தாய் தமக்கை முகங்களிலும். அதே வெளிச்சம்!

தங்கையைத் திரும்பிப் பார்த்ததும். “வாவாவா! முதலில் உனக்குத்தான் இனிப்புக் கொடுத்திருக்க வேண்டும்! சாதித்துவிட்டாயே. மய்யூக்குட்டி! “ என்று மகிழ்ச்சியோடு கூறி. அவளது கையைப் பற்றிக் குலுக்கிய மதிவதனி. அப்படியே அவளை அணைத்துக் கொண்டாள்.

மயூரி புரியாமல் விழிக்கும்போதே. ஒரு சாக்கலேட் துண்டை விண்டு அவள் வாயில் போட்டுவிட்டு. “பார் நம் திட்டத்துக்கு வசீகரன் ஒத்துக்கொண்டுவிட்டார். கிட்டத்தட்ட எல்லாவற்றுக்குமே வேலை முடிய முடியப் பணம் தருவாராம். கொள்முதலில் மட்டும் பில்லுக்குத்தான் செக் கொடுப்பாராம். பில் இல்லாத வியாபாரம் கிடையாது என்பதால். நமக்கு அதில் பிரச்சினை இல்லை! ஒப்பந்தம் இரண்டு காப்பி. கையொப்பம் போட்டே அனுப்பியிருக்கிறார். ஒன்று அவருக்கு. அடுத்தது நமக்கு. நாம் மூவரும் கையெழுத்துப் போட்டு. ஒன்றை வசீகரனிடம் நேரிலேயே கொடுத்து நன்றி கூறிவிட்டால் வேலை முடிந்தது. நாளைக்கு. அதையும் நீயே செய்துவிடு. மயூரிம்மா.” என்று வேகமாகச் சொல்லி முடித்தாள்.

“அப்பாடி! விஷயம் எல்லாம் சொல்லி முடித்தாயிற்றுதானே? இனியேனும் கொஞ்சம் ஒழுங்காக மூச்சு எடுத்துவிட்டு. அப்புறமாகப் பேசுகிறாயா? இன்னும் எவ்வளவு நேரம் மூச்சு விடாமலே பேசப் போகிறாயோ என்று பயந்துவிட்டேன்.” என்று பகவதி கேலியாகக் கூறவும். “போங்கம்மா! “ என்று ஓடிப் போய். அவள் மீது சலுகையாகச் சாய்ந்து நின்று சிரித்தாள் பெண்.

“ஏதோ ஒரு வழியாக. விஷயம் நல்லபடியாக முடிந்து. பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு. உன் முகத்திலும் மலர்ச்சி வந்ததே! அதுதான். எனக்குப் பெரிதாகத் தெரிகிறது. என்ன மய்யூ ” என்று முறுவலோடு சின்ன மகளைப் பார்த்த பகவதி. சற்றுத் திகைத்தாள். “என்னடா? ஏன் முகமெல்லாம் வறண்டு கிடக்கிறது? கூந்தல் காய்ந்து பறக்க அசந்து தெரிகிறாயே! அந்த வசீகரனோடு ரொம்பவும் வாதாட வேண்டியிருந்ததா? ஏதாவது குடிக்கிறாயா? காஃபி இருந்ததே.” என்று பகவதி சொல்லும்போதே ஓடிப் போய். காஃபியைக் கப்பில் ஊற்றி. “குடிம்மா.”என்று தங்கையிடம் நீட்டினாள் மதிவதனி.

“அதுதானே! துள்ளிக் குதிக்கிறவள் சும்மா இருக்கிறாளே என்று நினைத்தேன். .” என்று கவலையோடு தங்கையைப் பார்த்தாள்.

வசீகரன் ஏதும் மனம் வருந்தப் பேசினானோ என்று பெரியவள் கவலைப்படுவது மயூரிக்குப் புரிந்தது. தாயார் முன் அதைக் கேட்கவும் முடியாதே.

எனவே. “ஐயோ. நீங்கள் நினைக்கிற மாதிரியெல்லாம் ஒன்றுமில்லை. பேச்சு வார்த்தை முடித்த பிறகு. வரும் வழியில் என் சினேகிதிகள் சிலரைப் பார்த்தேன். தட்ட முடியாமல். அவர்களோடு பீச்சுக்குப் போனேன்! எல்லோரும் ஒரே ஆட்டம்! அங்கேயே முடியெல்லாம் பறக்கத் தொடங்கிவிட்டது. திடீரென்றுதான். நல்ல விஷயத்தை உங்களிடம் சொல்லாமல். இங்கே ஆடிக் கொண்டிருக்கிறோமே என்று நினைவு வந்து. பிடிவாதமாகக் கிளம்பி வேகமாக வந்தால். வழியில் பயங்கரப் போக்குவரத்து நெரிசல். எவ்வளவு நெரிசல் தெரியுமா? நின்று நின்று. அப்படியே விறுவிறுத்துப் போயிற்று. நல்லவேளை. அக்கா தந்தக் காஃபி குடித்ததால். மறுபடி நன்றாகிவிட்டது. .. “ என்று. வசீகரனிடம் இருந்து பேச்சையும். மதிவதனியின் மனதையும் திருப்பியபோதும். அவளது மனம் மட்டும். அவனைப் பற்றிய யோசனையிலேயே உழன்றது.

அவளிடம் முடியாது என்றவன். இப்போது எதற்குச் சம்மதித்தான் என்று மனம் உளம்பியது. ஏதோ காரணம் இல்லாமல். அவன் இந்த

மாற்று முடிவு எடுத்திருக்க மாட்டான்.

அந்தக் காரணம் என்னவாக இருக்கக் கூடும் என்பது பற்றிக்கூட. மயூரிக்கு ஓர் ஊகம் இருந்தது. அதனாலேயே. அவனிடம். அது பற்றி நேரிலேயே . கறாராகப் பேசிவிட. அவள் முடிவு செய்தாள்!

ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு விட்டதால். இனி அதில் மாற்றம் செய்ய முடியாது என்பதால். தைரியமாகவே பேசலாம்!

மறுநாள் வசீகரனைச் சந்திக்க அவனது அலுவலகத்திற்கே. மயூரி இறுக்கத்துடன் சென்றால். அவளுக்கு மாறுபட்ட மனநிலையில் அவன் இருந்தான். .

“என்ன சந்தோஷம்தானா?” என்று புன்னகையோடு கேட்டான்.

ஐயத்துடன் நோக்கி. “ஏன் இந்த மாற்றம் என்று. காரணம் தெரிந்தால். சந்தோஷப்படலாம்.” என்றாள் மயூரி.

“ஏனா?” என்று கேட்டுவிட்டு. முன்னே வந்து குனிந்து. அவளது காலணிகளைப் பார்த்தான் வசீகரன். “அப்பா! நல்ல வேளையாக. நேற்று அணிந்து வந்த அதே காலணிகள்தான். தைரியமாகச் சொல்லலாம். இப்படி ஓர் அழகான பெண். ஏமாற்றத்தை விழுங்கிக்கொண்டு. திடமாக இருப்பது போலப் பேசி சமாளித்தபோது. இங்கே. நெஞ்சிலே என்னமோ பண்ணிவிட்டது. அதனால்தான் மாற்றம்!” என்று முறுவலித்தான் .

அவளை. அவன் கண்டுபிடித்து விட்டது. மயூரிக்குக் குன்றலாக இருந்தது. ஆனால். அதற்காக இவன் முடிவை மாற்றினான் என்றால். அதை ஒத்துக் கொள்ளவும். அவள் தயாரில்லை.

“இந்தக் கதையை நம்புவதற்கு நான் முட்டாளில்லை. ஆனால் வசீகரன். ஒன்று நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கடனுக்கான வட்டிப் பணம் கிடைப்பது. உங்களுக்கும் பிசினஸ்தான். சற்றுக் குறைவாக என்றாலும். லாபம்தான். ஏதோ உதவி செய்கிற மாதிரி நினைத்துக்கொண்டு. தொடர்ந்து தரக்குறைவாகப் பேசினால். நான் சும்மா இருப்பேன் என்று எண்ண வேண்டாம்.” என்றாள் எச்சரிப்பது போல.

“தரக்குறைவு? தரமுள்ள யாரை எப்போது குறைவாகப் பேசினேன்?” என்று புரியாதவனைப் போலக் கேட்டான் அவன்.

“சும்மா நடிக்காதீர்கள். சார்! இந்த இரண்டு நாட்களில். எத்தனை முறை என் அக்காவை மட்டம் தட்டிப் பேசினீர்கள் என்று எனக்கும் தெரியும்.. உங்களுக்கும் தெரியும். ஆனால். இனி அது கூடாது. அதிலும்.

அக்காவுக்குக் கேட்கும் படி. கூடவே கூடாது!" என்றாள் மயூரி. கண்டிப்பான குரலில்.

"கேட்டால்? உன் அக்காவின் அனிச்சம் பூ இதயம். என் இரண்டு வார்த்தைகளில். நொந்து நூலாகி விடுமாக்கும்? ஐயோ பாவம்!" என்றான் அவன் சற்று இளக்காரமாகவே!

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள் மயூரி. அப்படியானால். இவனது குறிக்கோள் அதுவேதானா? சும்மாவே தொட்டால்சுருங்கியான மதிவதனி. இனி என்ன ஆவாள்?

"அப்படியானால். அதற்காகத்தான். மெய்யாகவே என் அக்காவை வார்த்தைகளால் குத்திக் குதறுவதற்காகத்தான் இந்தக் கடனைக் கொடுக்கிறீர்களா? ஐயோ! நான் அஞ்சியது சரியாகிப் போயிற்றே!" என்றாள். தன்னை மீறிய தவிப்புடன்.

புருவங்களில் சிறு சுருக்கத்துடன். தன் அகன்ற மேஜை மீது லேசாகச் சாய்ந்து நின்று. அவளைப் பார்த்து. "கவனி. மயூரி." என்றான். வசீகரன்.

பேச்சு நின்று. சிறு வெறுப்புடன் நோக்கினாள் அவள்.

"யெஸ். நான் சொல்வதைக் கொஞ்சம் கவனத்தோடு. நீ கேட்க வேண்டும். ஏனெனில். இதை நான் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டேன். இப்போது நீ என்ன நினைத்தாலும் இந்தக் கடனை. நான் உங்கள் நிறுவனத்துக்குக் கொடுத்திருப்பது. ஓரளவு உதவும் மனப்பான்மையோடுதான். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தொடங்கி. சிறுகச் சிறுக வளர்ந்து கடை இருக்கும் இடத்தையே வாங்கியிருக்கிறீர்கள். அந்தத் தெருவில். கடை இடம் வாங்குவது. சாதாரண விஷயமில்லை. அப்படிக் கட்டிக் காத்து வளர்த்த ஒரு தொழில் நசித்துப் போய்விடக் கூடாது.. கூடவே. கடை நடத்துகிறவர்கள் பண விஷயத்தில் நம்பகமானவர்கள் என்று கதிரேசன் சார் எடுத்துச் சொன்னதன் விளைவாகத்தான். தொடர்ந்து கடன் கொடுப்பது பற்றி. மறுபடி நான் யோசித்ததே! தொழில் வேறு.. வாழ்க்கை வேறு என்ற கொள்கையும் எனக்கு இருந்ததால்தான். தொடர்ந்து இந்தக் கடனுதவி பற்றி. நான் சிந்தித்ததும்.

"ஆனால். எங்கள் குடும்பத்தில் நேர்ந்த சில பல நிகழ்ச்சிகளால். இன்றையப் பெண்கள் பற்றி. எனக்குச் சில பொதுவான கருத்துகள் உண்டு. மோசமான என்றும் சொல்லலாம். பேச்சுவாக்கில் நான் அவைகளைச் சொல்லும்போது. உன் உறவுகளைக் குறிப்பிட்டுச் சொல்வதாக நீ எடுத்துக் கொண்டால். தப்பு என்னுடையது அல்ல.

புரிகிறதா?

“புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இனி. அனாவசியப் பேச்சுகளை விடுத்து. நம் இருவரின் தொழில் விஷயமாகப் பேசலாமா?” என்று கேட்டான் வசீகரன்.

“ஒன்றே ஒன்று மட்டும் சொல்லலாமா?” என்று சற்றுக் கம்மிய குரலில். மயூரி கேட்டாள்.

ஒப்புதலாக அவன் தலையசைக்க. அவள் சொன்னாள். “இப்போது...நீங்கள் யார் என்று எங்கள் அம்மாவுக்குத் தெரியாது. நாங்கள் சொல்லவில்லை. அப்பாவும் இல்லாத நிலையில்... வேண்டாம். அது எங்களது பிரச்சினை. ஆனால். அம்மா முன்னிலையில். வாய் தவறிக்கூட. எதையும் விட்டுவிட வேண்டாம் என்று... என்று கேட்டுக் கொள்கிறேன்.”

சற்றுத் தயங்கி அவள் முடிக்கையில். “பணிவன்புடன்” என்று ஓர் ஒற்றை வார்த்தை அவனிடமிருந்து வரவும். சற்றுத் திகைத்து. கேள்வியாய் அவனை ஏறிட்டாள்.

“பெரிதாக ஒன்றுமில்லை. ஒரு கோரிக்கை வைக்கும்போது. “பணிவன்புடன்” கேட்டுக் கொள்வதாக முடிப்பார்கள். ஆனால். தொழில். ஒப்பந்தம் என்று வந்துவிட்டால். இரு தரப்பும் சமம்தானே? எதற்கு ஒருவர் மட்டும் பணிவு காட்டுவது என்று. அதை விட்டுவிட்டாய். போல. அதுவும் சரிதான். “ என்று அவன் முடிக்கவும். மயூரியின் முகம் லேசாகக் கன்றிச் சிவந்தது.

அந்த மாதிரித் தணிந்து கேட்கக் கூடாது என்பதுதான் அவளுக்கும். ஆனால். கண் கொத்திப் பாம்பு போல. எல்லாவற்றையும் கண்டு கொள்கிறானே என்று இருந்தது.

ஆனால் பதில் சொல்லத் தேவையின்றி. உடனேயே அவன் தொழில் தொடர்பாகப் பேசத் தொடங்கவும். நல்லதாயிற்று என்று. அவளும் அதில் கவனத்தைச் செலுத்தினாள்.

எல்லாமே. கிட்டத்தட்ட சகோதரிகள் அலசி ஆராய்ந்ததுதான்.

விரிவாக்க வேலைகள் நடக்க நடக்கப் பார்த்துக்கொண்டு பணம் தருவதாக வசீகரன் சொன்னதுதான் மயூரிக்குக் கொஞ்சம் பிடிக்கவில்லை.

சொன்னால் ஒத்துக் கொள்ளும் அளவு நம்பிக்கை வேண்டாமா என்பதற்காக அல்ல. பணம் என்று வரும்போது. அதுவும் அவனது பணத்தைக் கொடுக்கும்போது. அதற்குரிய வேலை நடந்திருப்பதை

உறுதி செய்து கொள்வதில் தப்பே கிடையாது என்பதுதான். அவளுக்கும்.

ஆனால். அப்படி உறுதி செய்ய யார் வருவார்கள்?

வசீகரனே வருவானோ என்பதுதான் அவளது கவலை.

அவனே வருவதைத் தப்பு சொல்லவும் முடியாது.

“உடையவன் பார்க்காவிட்டால் ஒரு முழம் கட்டை” என்று. ஒரு பழமொழியே இருப்பதாகக் கூறி. எதையும் நேரில் கவனிக்க வேண்டும் என்று. அவர்களுடைய தாய் பகவதியே. மகள்களை அப்படிச் செய்ய வைத்திருக்கிறாள்.

ஆனால். அப்படி வசீகரன் அடிக்கடி வந்தால். அதை மதிவதனி எந்த அளவுக்குத் தாங்குவாள்? வெறும் சாயலைப் பார்த்தே மயங்கி விழுகிற மதிவதனி!

தொழில் வேறு. வாழ்க்கை வேறு என்கிறவனிடம். இது பற்றி வாயைத் திறக்கவே முடியாது. அக்காவைத்தான் தயார்ப்படுத்தியாக வேண்டும். முடிந்த வரை. துணையாகக் கூடவே இருக்கவும் வேண்டும்.

அடுத்து. பணத்தைத் திருப்பிக் கொடுப்பது பற்றிப் பேசினார்கள்.

வசீகரன் நியாயமாகத்தான் நடந்துகொண்டான். அல்லது. அதிகத்துக்கு ஆசைப் பட்டு. உள்ளதையும் விட்டுவிடக் கூடாது என்றும் எண்ணியிருக்கலாம்.

இப்போது “விருத்தி”யில் வாங்கியுள்ள தொகையை. பழைய அதே வட்டியில். ஆனால். அசலில் ஒரு சிறு தொகையும் சேர்த்துச் செலுத்தச் சொன்னான்.

இதிலும் குறைப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஒருவாறு. அவர்களது கடனும் குறையத்தானே செய்யும்?

வாராவாரம் அந்தச் செக்குகளையும். “விருத்தி”யிலிருந்தே வந்து வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்வதாகச் சொன்னான்.

“வீணாக அலைவானேன்? உள்ளூர் என்றால். கட்டணம் குறைவு என்பதால். கூரியரில் அனுப்பி விடுகிறோமே.” என்று மயூரி சொன்னதை. அவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

வேறு ஏதாவது விஷயம் கலந்து பேச வேண்டி இருந்தால். அதையும் சேர்த்துப் பார்த்து விடலாம். மற்ற இடங்களுக்கும் போய் வசூலுக்காக அலுவலர்கள் சுற்றிக்கொண்டே இருப்பார்கள் என்பதால். அவர்களுக்காகத் தனியாக வர நேராது என்று வசீகரன் கூறவும். அதற்கு

மேல். மயூரி மறுத்துப் பேசவில்லை.

செக்குளைக் காசு கொடுத்தே அனுப்புகிறேன்.. என் கடைக்கு மட்டும் உன் ஆள் வரவேண்டாம் என்று. எப்படிச் சொல்வது? எதையோ மறைக்க முயற்சிப்பது போல அல்லவா. தோன்றும்?

அத்தோடு. அலுவலர்கள் வருவது பற்றி. அவளுக்கும் ஒன்றுமில்லைதானே?

“இன்னும் ஒரு விவரம்.  இந்தச் செக்குகளை. வாரத்தின் எந்த நாளில் வந்து வாங்கிக் கொள்வது?” என்று கேட்டான் அவன்.  .

“எங்கள் டீலர்களுக்கு . சனிக்கிழமைதான் பணப் பட்டுவாடா செய்வது வழக்கம். நீங்களும். அதே நாளிலேயே வந்து... அதாவது. நிறுவனத்து அலுவலரை அனுப்பி வாங்கிக் கொள்ளுங்கள்.” என்று அவசரமாகத் திருத்திச் சொன்னாள் மயூரி.

குரங்கை நினைக்காமல் மருந்து குடிக்கிற கதை. இதுதான் போல என்று அவள் தன்னையே நொந்துகொண்டபோது.  “நானும் எங்கள் நிறுவனத்துடைய ஊழியன்தான்மா. வெறும் எம்டி!” என்று சாதுவாக உரைத்துக் கண்ணால் சிரித்தான் வசீகரன்.

திகைத்துப் பார்க்கும்போதுதான். இவனுக்கு வசீகரன் என்ற பெயர் வைத்த காரணம். அவளுக்குப் புரிந்தது!

கடைக்கு வந்துவிடாமல். மயூரி தன்னைத் தவிர்க்க முயற்சிப்பதன் காரணம். வசீகரனுக்குப் புரியாமல் இல்லை. புரிந்ததாலேயே. அவனுக்கு உள்ளூரக் கோபமும் உண்டாயிற்று.

இவள் தமக்கை அப்படி என்ன. அதி கோமளவல்லி? அவனைப் பார்த்தாலே. பழைய காதலன் நினைவில். “ஹா” என்று விழுந்து விடுவதற்கு? இத்தனைக்கும். அண்ணனும் தம்பியும் ஒரே அச்சு என்று சொல்லவும் முடியாது. உடன் பிறந்தவர்கள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு. ஓரளவு சாயலில் ஒற்றுமை. அவ்வளவே!

அப்போது கோவையில்  சுகந்தனை மயக்கியது போலவே. இங்கே தங்கையை ஏமாற்றிக்கொண்டு இருக்கிறாள். இந்த மயக்கு மோகினியின் சுயரூபம் புரிகிறபோதுதான். மயூரிக்கு. அவளது சொந்த வாழ்வு பற்றிய எண்ணமே வரும்!

என்னையா தடுக்க நினைக்கிறாய் என்ற வீம்புடன். அந்த சனிக்கிழமை வசூலுக்கு. வசீகரனே சென்றான்.

அதுவும். காலையில் கடை திறக்கும் நேரத்துக்கே சென்றான்.

அதுவும். வேண்டும் என்றேதான்.

சனிக்கிழமை என்றால் சனிக்கிழமைதானே? காலையிலேயே வருகிறவன். உடனே செக்கை பாங்க்கில் கட்டினால். செக் செல்லுபடி ஆவதற்கு. முன் தினமே பணத்தை  பாங்க்கில் தயாராகக் கட்டியும் வைத்திருக்க வேண்டும்!

கேட்டால் சொல்ல. அவனிடம் இப்படியொரு பதிலும் தயாராக இருந்தது. நிதி நிறுவனம். கதிரேசனிடம் இருந்து. கைமாறிவிட்டது என்று. அந்தக் குடும்பத்துக்கு முழுதாகப் புரிய வைக்க வேண்டும்.

அவனைப் பார்த்ததும் சல்யூட் அடித்த செக்யூரிடி ஏதோ சொல்ல முயன்றதை அலட்சியப்படுத்தி. வசீகரன் கடையினுள் சென்றான். என்ன. இன்னமும் விற்பனை தொடங்கவில்லை என்பான்! அவன் ஒன்றும். அந்த மாதிரி வாடிக்கையாளன் அல்லவே!

தன்னைப் பார்த்ததும். அதிலும் அன்று ஏதேனும் விற்றுப் பணமும் சேர்ந்திராத நிலையில். இரு பெண்களின். முக்கியமாக மயூரியின் முகம் எப்படி மாறும் என்பதைக் கற்பனையில் கண்டு ரசித்தபடியே கடைக்குள் சென்றால். அங்கே. அவன் சற்றும் எதிர்பாராத காட்சி ஒன்று. வசீகரனை எதிர்கொண்டது!

# அத்தியாயம் - 9

அந்தக் காலை நேரத்தில். முந்தைய நாள் விற்பனை முடிவில் மடிக்காமல் விடுபட்டிருக்கும் துணிகளை மடிப்பதும். கண்ணைக் கவரும் வண்ணம் அடுக்குவதுமாக. எல்லோரும் ஏதேனும் பணியில் ஈடுபட்டிருப்பார்கள்.. ஓரிருவர் கொட்டாவியை அடக்கியபடி வேலையைத் தொடங்குவார்கள்

இப்படிப்பட்ட காட்சியைத்தான். வசீகரன் எதிர்பார்த்திருந்தான்.

ஆனால். இரண்டு மூன்று பெண்கள் கவுன்டர் மேல் ஏறி நிற்க. ஒருவரை ஒருவர் ஒட்டி நின்று சஞ்சலத்தோடு விழிக்க. அவனது கண்ணில் பட்ட தோற்றம். மிகவும் விசித்திரமாக இருந்தது.

அவனைப் பார்த்ததும். பெண்கள் அடைந்த நிம்மதி வெளிப்படையாகத் தெரிந்தது.

முகத்தில் கலவரம் அப்படியே இருந்தாலும். குரலில் தடுமாற்றம் கூட லேசாக இருந்தாலும். “வாவாருங்கள் மிஸ்டர் வசீகரன்.” என்று மதிவதனி மெய்யாகவே வரவேற்க. அவளை ஒட்டி நின்ற மயூரியும். ஆவலாகவே தலையசைத்தாள். அவன் எண்ணி வந்ததற்கு நேர் விரோதம்!

ஏன்?கடையினுள்ளே. பாம்பு  கீம்பு ஏதேனும் நுழைந்துவிட்டதா? ஆனால். இந்த இடத்துக்குள் பாம்பு. எப்படி வரும்?

அருகில் நெருங்கி. “என்ன விஷயம்?” என்று. வசீகரன் வினவினான்.

கலக்கத்துடன் இரு கைகள் நீளவும். பாம்பேதான். எப்படி அடிப்பது என்று வேகமாக யோசித்தவாறு. காட்டிய திசையில்  பார்த்தவனுக்குச் சிரிப்பை அடக்குவது கடினமாயிற்று.

சகோதரிகள் காட்டிய இடத்தில். பொறிக்குள் மாட்டியிருந்த சிறு எலி ஒன்று  சாதுவாக விழித்துக் கொண்டிருந்தது. பாம்புக்குப் பதில் எலி!

சிரிப்பை அடக்கிக்கொண்டு. “எலிதான் பொறிக்குள் மாட்டிவிட்டதே! என்ன பிரச்சினை?” என்று கேட்டான் அவன்.

அந்த விவரமும் சொல்லப்பட்டது.

துணிக்கடை என்பதால். அவ்வப்போது எலிக்குப் பொறி வைப்பது பழக்கம். எலி மாட்டியது என்றால். செக்யூரிடி வந்து. அதை

எடுத்துப்போய்க் கொன்று. தூக்கிப் போட்டு விடுவார்.

"செய்ய வேண்டியதுதானே? வாயிலில் செக்யூரிடியைப் பார்த்தேனே."

மாலை போட்டிருப்பதால் எலியைக் கொல்ல முடியாது என்று செக்யூரிடி திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். ஏதாவது குப்பைத் தொட்டியில் திறந்து விட்டுவிடச் சொல்லலாம் என்றாலும். குளித்து. பூஜை பண்ணி சுத்தபத்தமாக இருப்பதால். இதையெல்லாம் தொடக் கூட. அவருக்கு மனமில்லை. கடைப் பெண்களோ  கிட்டே வரவே பயப்படுகிறார்கள்.

மயூரி துணிந்து போய் எலிப் பொறியைத் தூக்கினாள். எலி கீச் கீசென்று கத்திக்கொண்டு. கூண்டுக்குள்ளேயே இங்குமங்கும் ஓடவும். அவளும் மிரண்டுபோய் அங்கேயே எலிப்பொறியைப் போட்டுவிட்டு. அக்காவிடம் ஓடி வந்துவிட்டாள்.

நடந்த கதை இதுதான்.

"மகா வீர தீர சாகசக் கதைதான். ஆனால். புலியை அடிக்கிற பலத்தை வைத்துக்கொண்டு  இந்த எலியிடம் என் வலிமையைக் காட்ட வேண்டியிருக்கிறதே!"

அவனது பேச்சின் பொருள் புரிந்து. "வசீகரன்!" என்று விழி மலர நோக்கினாள். மயூரி. அவள் மேலே ஏதோ சொல்ல முற்படுமுன். "ப்ளீஸ். வேண்டாம். இதற்குப் போய் நன்றி சொல்லி. என்னை வெட்கப்பட வைக்காதே!" என்றபடி. இரு விரல்களால் எலிப்பொறியைத் தூக்கிக்கொண்டு. வசீகரன் வேகமாக வெளியே சென்றான் .

அவ்வளவு பெரிய காரில் வந்தவன். எலிப்பொறியைத் தூக்கிக்கொண்டு வருவதைச் சகியாமல். "சார். சார். என்னசார் நீங்கள் போய்
 அத்தைக் கீழே வையுங்கள் சார்!" என்ற செக்யூரிடி. அங்கே நிறுத்தப்படுகிற கார்களைத் துடைத்துக் காசு வாங்குகிற பையன் ஒருவனைக் கூப்பிட்டு. எலிப்பொறியை எடுத்துப் போகச் சொன்னார்.

"நீங்க  போங்க சார்  அந்தப் பையனையே. எலிப் பொறியை உள்ளாரக் கொண்டாந்து. வைக்கச் சொல்றேன்." என்று வசீகரனை அனுப்பி வைத்தார்.

வெறும் கையுடன் உள்ளே வந்த வசீகரன் விவரம் சொல்ல. "அடடா! இந்த ஐடியா. நமக்கு முன்பே வரவில்லையே என்று இரு சகோதரியரும் அங்கலாய்த்தனர்.

அதற்குள் வெற்றுப் பொறியைக் கொணர்ந்த சிறுவனிடம் ஓர்

ஐந்து ரூபாயைக் கொடுத்து. “தாங்க்ஸ்பா!” என்று அனுப்பிவிட்டு. இரு பெண்களும். வசீகரனுக்கும் நன்றி சொல்லினர்.

“பிரச்சினையைத் தீர்த்து வைத்தற்காக மட்டும் அல்ல. இனி. இது போலப் பிரச்சினை வந்தால். அதைத் தீர்ப்பதற்கான வழியைக் காட்டியதற்காகவும். “ என்றாள் மதிவதனி. மெல்லிய குரலில்.

“ஐடியா செக்யூரிடியுடையது. அதனால். நன்றியை. அவருக்குத்தான் சொல்ல வேண்டும். “என்று வசீகரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே. மயூரி கல்லாவைத் திறந்து. அதிலிருந்து ஒரு கவரை எடுத்து வந்தாள்.

“உங்களுக்கான செக் சார்.” என்று கூறி. வசீகரனிடம் கொடுத்தாள்.

“ஷ் மயூரி. மிஸ்டர் வசீகரனை உட்காரச் சொல்லு. ஏதாவது பானம் வாங்கி...என்ன குடிக்கிறீர்கள். சார்?” என்று மதிவதனி கேட்டாள்.

குற்றம் சொல்ல முடியாத குரல். தெளிவான பேச்சு.

ஆனால்

சட்டெனப் பார்வையைத் திருப்பினால். கண்ணில் ஒரு கூர்மையுடன். மயூரியும். அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்தப் பார்வைக்குப் பதிலாக. என் அக்காவிடம் குற்றம் தேடிக் கொண்டிருக்கிறாயா என்று அவள் வாய்விட்டே கேட்டிருக்கலாம் என்று. அவனுக்குத் தோன்றியது.

கவரிலிருந்து செக்கை எடுத்து சரி பார்த்துவிட்டு. “போகிற வழியிலேயே. செக்கை எங்கள் பாங்க்கில் கட்டி விடலாமில்லையா?” என்று. வெறும் பேச்சுக்காகக் கேட்பது போல. வசீகரன் வினவினான்.

ஒரு மின்வெட்டுப பார்வையின் பின். “ஓ! தாராளமாக! இந்தச் செக்குக்கான பணத்தை. நேற்றே பாங்கில் கட்டி விட்டோமே!” என்று. ரொம்பவும் சாதாரணமாக. இதைப் போய்க் கேட்கிறாயே என்பது போன்ற குரலில் பதில் வந்தது.

“ஆமாம் சார். பணத்தைக் கட்டிவிட்டால். யாரும் காலையிலேயே வந்தாலும். பிரச்சினையாகாது என்று மயூரி முன் யோசனையோடு கட்டச் சொன்னது. நல்லதாயிற்று. .சாரி சார்! ...இல்லை. சாந்தி. நீலத்தை வைலட் பக்கத்தில் வைக்கக் கூடாது

“ என்று அவனுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்த மதிவதனி. சில வண்ணத் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த பெண்ணுக்கு உத்திரவிட்டவாறு. அங்கே சென்றாள்.

“உள்ளுணர்வா?” என்று தணிந்த குரலில் கேட்டான் வசீகரன்.

“சிலர் புத்தி பற்றித் தெரிந்ததால் செய்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை!” என்றாள் மயூரி.

“பாம்பின் கால். பாம்பறியும் என்பது போலவா?”

““வருமுன் காப்போன் மீன்” போல என்றும் வைத்துக் கொள்ளலாம். எதுவாக இருந்தாலும். உங்கள் பணத்தைத் தராமல் சாக்குப் போக்குச் சொல்லமாட்டோம் என்ற நிம்மதியோடு நீங்கள் போகலாம்.” என்றாள் அவள்.

“அப்படியானால் போகச் சொல்லுகிறாய்?”

“செக் வாங்க வந்தீர்கள் வந்த வேலை முடிந்துவிட்டதால்... “

“எலியைத் தூக்கிப் போவது  வந்த வேலையோடு சேர்த்தியா?”

“ஓகோ! அந்த வீர தீரப் பராக்கிரமச் செயலுக்கு நன்றி சார்!”

“என்ன கிண்டலா? அடுத்த எலி மாட்டும் வரை. அப்படித்தான் இருக்கும்! உன் வீரம்தான் வரும்போது பார்த்தேனே!” என்று நகைத்தான்
அவன்.

அசடு வழியத் தானும் சேர்ந்து நகைத்துவிட்டு. “மெய்யாகவே. அதற்கு நன்றிதான். வசீகரன். செய்வது அறியாமல். நாங்கள் எல்லோருமே மிரண்டுதான் போயிருந்தோம்! அத்தோடு   இன்னும் சில நன்மைகளும் நேர்ந்திருக்கின்றன. ...ஊகூம். அவை என்னவென்று நான் சொல்லப் போவது இல்லை. ஆனால். அவைகளுக்கும் சேர்ந்து நன்றி.” என்று புன்னகையுடனேயே கூறினாள் மயூரி.

“ஆனால். என்னால் விளைந்த நன்மைகள் பற்றி. என்னிடம் சொல்ல மாட்டாய்?”  என்று வினவியவன். அவளது கண்களில் கவனத்தைக் கண்டதும். “ஓகே. நீ சொல்ல வேண்டாம். ஆனால். என்னால் கண்டுபிடிக்க முடியாது என்றா நினைக்கிறாய்?” என்று இலகுவாகவே கேட்டான்.

இறுக்கம் தளர்ந்து. “தாராளமாகக் கண்டுபிடித்துக் கொள்ளுங்கள். இப்போது கிளம்புகிறீர்களா?” என்றாள் அவள்.

“தமிழ்நாட்டு விருந்தோம்பலின் மொத்த உருவமே நீதான். விரட்டுவதிலேயே இருக்கிறாயே.” என்று  குறைப்பட்டான் வசீகரன்.

ஆனால். அவனுக்கே சற்று ஆச்சரியம்தான். இங்கே நின்று அரட்டையடிக்கும் எண்ணத்தோடு அவன் வரவில்லை. ஆனால்.

மிரட்டும் எண்ணமே வரவில்லையே.

அவளும் வியப்புடனே நோக்கிவிட்டு. “சார். நம்முடையது. தொழில் முறைத் தொடர்பு. இதில். விருந்தோம்பல் எங்கே வந்தது? அத்தோடு. உங்களை. நான் விரட்டவும் இல்லை. இந்த எலியினால். எங்களுக்கு நிறைய நேரம் வீணாகிவிட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில். வாடிக்கையாளர்கள் வரத் தொடங்கி விடுவார்கள். அதற்குள். இந்த இடத்தைச் சுத்தப்படுத்தி. அடுக்கி முடிக்க வேண்டும். உஉங்களுக்கும் ஆயிரம் வேலை இருக்குமே என்று நினைத்துதான்... .வந்து...கிளம்பச் சொன்னேன். “ என்றாள் அவள்.

“தொழில் முறை வாடிக்கையாளர் என்றாலும். என் நன்மையை இவ்வளவு யோசித்துச் சொல்லும்போது. அதைத் தட்டுவது கூடாதில்லையா? ஓகே. கிளம்புகிறேன்.”

சிரித்த முகத்துடனேயே வசீகரன் விடை பெற்றுச் சென்றுவிட. மயூரிக்குத்தான் சற்று நேரம் ஒரே திகைப்பாக இருந்தது.

ஒருவருக்குப் பெயர் வைத்தால். அதற்குப் பொருத்தமாக இருந்துதான் தீர வேண்டும் என்று. அப்படி என்னதான் கட்டாயமோ?

“ஒன்று அதே வண்ணத்தில் அடர்த்தி குறைந்துகொண்டே வருகிற மாதிரி அடுக்கலாம். அல்லது. நேர் மாறு பட்ட நிறங்களை மாற்றி மாற்றி வைக்கலாம். இரண்டும் ஒவ்வொரு விதத்தில் நன்றாக இருக்கும். மாடியில் முன் புறம் முழுவதும் “ஷோ கேஸ்”தானே. வைக்கப் போகிறோம். இப்படி வைத்தால். வெகு தூரத்துக்குக் கவர்ச்சியாகத் தெரியும். “ என்றவாறே. தமக்கையின் குரல் படியிறங்கி வரவும். மயூரி சுதாரித்து. அன்றையப் பட்டுவாடாக் கணக்கை எடுத்துப் பார்க்கத் தொடங்கினாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே. மதிவதனி தங்கையின் அருகே வந்து பேச்சுக் கொடுத்தாள். “மிஸ்டர் வசீகரன் இப்போதுதான் கிளம்புகிறார் போல? மேலே இருந்து பார்க்கும்போது தெரிந்தது. நாம் அஞ்சியது போல  ஆள். அப்படி மோசமாக இல்லைதானே. மயூரி? வேறே ஏதேனும் கேட்டாரா?” என்று விசாரித்தாள்.

“ஊகூம். இல்லையே!” என்றுவிட்டவளுக்கு. வசீகரன் அவ்வளவு நேரம் அங்கே நின்றது ஏன் என்ற காரணம் சொல்ல வேண்டும் என்பது நினைவு வந்தது. ஒன்றுமே சொல்லாவிட்டால். அக்காவின் அமைதி கலைந்து போகும்.

“வேறு எதுவும் கேட்கவில்லைக்கா. எலி அடிக்கடி வருமானால்.

அதற்குப் பொந்து வைக்கிற மாதிரி ஏதேனும் இடம் இருக்கிறதா என்று தேடிப் பார்த்து. அடைத்து விடுங்கள் என்று. இந்த எலி பிரச்சினைதான் ஏதோ பேசினார். அவர் சொன்னது சரிதானேக்கா? எலி இங்கே கடையில் குடியேறிவிட்டால். நிறையத் துணிகளைக் கடித்து வீணாக்கி விடும்.. ஒரு துணி போனாலும். நமக்கு நஷ்டம்தானே?" என்று கடையின் லாப நஷ்டம் பற்றி. மயூரி பேச்சைத் திருப்பி விட்டாள்.

அவளது உத்தி பலித்து. மதிவதனியின் கவனமும் கடையின் பக்கம் திரும்பியது. கடை. அவளது இரண்டாவது உயிர் ஆயிற்றே!

காசோலை வாங்குவதற்காக வசீகரனே வந்தான்.

பெரும்பாலும். காலை அல்லது மாலையின் முற் பொழுதில். வாடிக்கையாளர் அதிகம் வராத நேரத்திலேயே வந்தான். அப்போதும். எல்லோரும் வேறு வேலையில் ஈடுபட்டிருந்தால். செக்கை வாங்கிக்கொண்டு. நில்லாமல் கிளம்பிப் போனான். மற்றபடி என்றால். விளக்கம் தர மயூரியை அழைத்துக்கொண்டு. மாடியில் நடக்கும் வேலையைப் போய்ப் பார்த்தான். கடைக்குள்ளேயும் பார்வை சுழலும்.

சும்மா. காலாற இலகுவாக நடப்பது போலத் தோன்றினாலும். அவனது கண்கள். அனைத்தையும் கணக்கெடுப்பதை. மயூரியால் கண்டுகொள்ள முடிந்தது.

வீட்டில் வேலை இல்லாதபோதும். கூட்ட நேரங்களிலும் கடைக்கு வந்து. கல்லாவில் அமர்ந்து உதவி செய்யும் பகவதி கூட. "அந்தப் பையன் கண்களில் கம்யூட்டர் இருப்பது போலத் தோன்றுகிறது. கதிரேசன் அண்ணன். நல்ல பார்ட்டியிடம்தான். தொழிலைக் கொடுத்திருக்கிறார்." என்று பாராட்டிக் கூறினாள்.

அன்றைய எலிச் சம்பவத்தின் காரணமாக. மதிவதனிக்கும் வசீகரனிடம் சாதாரணமாக
கலகலப்பாக என்று இல்லாவிட்டாலும். எந்தவிதப் பயம். படபடப்பும் இல்லாமல். பேசிப் பழக முடிந்தது. எதிர்பார்த்திராத பெரிய நன்மை அது.

ஆனால். மயூரியால் மட்டும் ஏனோ இலகுவாக இருக்க முடியவில்லை.

மதிவதனியோடு அவனைத் தனியாகப் பேச விடப் பயம். எந்த நேரம். என்ன சொல்லி அவளை நோகடித்து விடுவானோ என்ற கலக்கம் .

அவன் வேண்டுமென்று சொல்லாதிருக்கலாம். ஆனால். வசீகரனின் இயல்பான பேச்சையே. மூத்தவளால் தாங்க முடியாது

போகலாமே! அவளது. நொந்த மனம் ஆயிற்றே!

எனவே. வசீகரன் கடைக்கு வந்தால். அவனைக் கவனிப்பது. அவளது பொறுப்பாயிற்று.

அவனோடு பேசும்போது நன்றாகவே இருந்தபோதும். அப்போதைக்குக் குளிர்ந்திருக்கும் எரிமலையின் மீது அமர்ந்திருக்கும் உணர்வுதான் அவளுக்கு.

சொல்லப்போனால். அவள் சந்தோஷமாகத்தான் இருக்க வேண்டும். கிடைக்குமா என்று கலங்கிய கடன் உதவி. அவர்கள் விரும்பிய வட்டி விகிதத்திலேயே கிடைத்தது. அவள் அஞ்சியது போல. மதிவதனியிடம் மோசமான மாற்றம் எதுவும் இல்லை. தாயின் நிம்மதியும் அப்படியே இருந்தது.

ஆனாலும். இதெல்லாம் ஒரு காற்றில் விழுந்துவிடும் சீட்டுக்கட்டு மாளிகை போல அழிந்து விடப் போகிறது என்ற அச்சத்தை. மயூரியால் உதறித் தள்ள முடியவில்லை.

மற்ற எதையும் போலத் தாயிடமோ. தமக்கையிடமோ இதைச் சொல்லிச் சுமையிறக்கவும். அவளால் முடியவில்லை!

இன்னதென்று இனம் காணக்கூட முடியாத அந்தச் சுமை. அவளுள் அப்படியே இருந்து போயிற்று.

வசீகரனுக்கும். அந்தக் குடும்பத்தைப் பற்றி. இன்னமும் முழுதாக எந்த விதத் தெளிவும் கிடைக்கவில்லை.

வெளிப் பார்வைக்கு எல்லாம் நல்ல விதமாகவே தோன்றியபோதும். அவன் அறிந்தது. வேறு ஆயிற்றே! அது நிரூபிக்கப்பட்ட உண்மையும் கூட!

கடையை நடத்தும் மூன்று பெண்களில். மயூரியை மட்டுமே. அவனால் நல்லவள் என்று ஒத்துக்கொள்ள முடிந்தது. ஆனால். அவளது “அக்காப்பாசம்”. அவளது மிகப் பெரிய குறை என்றும் எண்ணினான் அவன்.

இந்நிலையில். ஒரு சனிக்கிழமையன்று. வேறு பல வேலைகளின் காரணமாக. மதியம் திரும்பித்தான். மயூரியின் அந்தக் குடும்பத்தின் “உங்களுக்காக” கடைக்குச் செக் வாங்குவதற்கு. அவனால் செல்ல முடிந்தது.

சீக்கிரமாகச் செக்கை வாங்கிக்கொண்டு. உடனே கிளம்பி விட வேண்டும் என்று திட்டமிட்டவாறே கடைக்குள் சென்றால். அலுவல்

அறையிலிருந்து. தாயார் பகவதியின் குரல். வெளியே வரை. உரக்கக் கேட்டது.

எதற்கோ யாரையோ திட்டிக் கொண்டிருந்தாள் அவள்.

வெளியே இருந்து கண்ணை உருட்டிக் கொண்டிருந்த விற்பனைப் பெண்கள். வசீகரனைக் கண்டதும். ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர்.

நாலு வாரங்களாகச் செக் வாங்க. நீளக் காரில் வருகிறவர். அக்காங்களே மரியாதை கொடுக்கும் பெரிய மனிதன்!

அவன் சற்று அதிகாரமாகப் புருவங்களை உயர்த்திக் கேட்கவும். அலுவல் அறையைச் சுட்டிக் காட்டிவிட்டு ஒதுங்கினர்.

கதவைத் தட்டியதுமே உள்ளே சத்தம் நின்று. மயூரி வந்து கதவைத் திறந்தாள்.

வந்திருப்பது யார் என்று பார்த்ததும். "உள்ளே வாருங்கள். தம்பி." என்று அழைத்து. அவனிடமே மகள்களைப் பற்றிக் குற்றப் பத்திரிகை படிக்கத் தொடங்கினாள்.

"பாருங்கள் தம்பி. நான் ஒருத்தி. வீட்டில் கிடந்து மெனக்கெட்டு இந்தப் பிள்ளைகளுக்குப் பிடித்தது பார்த்துச் சமைத்து எதற்கு அனுப்புகிறேன்? வயிறு காயாமல். குளிரச் சாப்பிட வேண்டும் என்றுதானே? மூன்று மணிக்கு வந்திருக்கிறேன்.. சாப்பாட்டுப் பாத்திரத்தைத் திறக்கக் கூட இல்லை என்றால். எனக்குக் கோபம் வருமா. இல்லையா? ஏய். சும்மா இருங்கடி! இந்தத் தம்பி என்ன. புதியவரா? வாராவாரம் பார்த்துப் பழகிவிட்டவர்தானே? நீங்களே சொல்லுங்கள். உழைப்பதும் சம்பாதிப்பதும் எதற்கு? முதல் நோக்கம் வயிறு வாடாமல் காப்பதற்குத்தானே? அதற்குப் பிறகுதானே அலங்காரம் ஆடம்பரம் எல்லாம்?

"நிறைய வேலை. ஒத்துக் கொள்ளுகிறேன். ஒரு மணிக்குப் பதிலாக இரண்டு மணிக்குச் சாப்பிடட்டும். ஒத்துக் கொள்ளுகிறேன். மூன்று மணி வரை வயிற்றைக் காயப்போட்டு. அப்படி எதற்குச் சம்பாதிப்பது?

"நீங்களே இவர்களிடம் கேளுங்கள். தம்பி. கேட்டு. இரண்டு பேருக்கும். கொஞ்சம் நல்ல புத்தி சொல்லுங்கள்!" என்று. அவனிடம் பொறுப்பைக் கொடுத்தாள்.

ஆனால். லேசாக முகம் கன்ற. "வந்து. உங்கள் அம்மா சொல்வது சரிதானே? அஅதுபோ...லக் கேட்டு " என்று அவன் தடுமாற்றத்துடன் தயங்கிப் பேசவும். சந்தேகமாகப் பார்த்து. "சற்றுப் பொறுங்கள் தம்பி."

என்று. பெரியவள் குறுக்கிட்டாள்.

வசீகரனின் முகத்தைக் கூர்ந்து பார்த்து. “தம்பி. நீங்கள் இன்று மதியம் சாப்பிட்டீர்களா?” என்று அவன் முகத்தைப் பார்த்து. நேரடியாகக் கேட்டாள்.

“ஷ்! என்னம்மா. இதையெல்லாம் போய். அவரிடம் கேட்டுக்கொண்டு. நான் போய். அவரது செக்கைக் கொடுத்துவிட்டு ” என்ற மயூரியின் பேச்சில். பகவதி குறுக்கிட்டு. “கொஞ்சம் சும்மா இருக்கிறாயா?” என்றாள் அதட்டலாக.

வசீகரனைப் பார்த்து. “சொல்லுங்கள் தம்பி. சாப்பிடவில்லைதானே?” என்று அவனிடம் விசாரித்தாள்.

லேசாக முறுவலித்து. “இப்போது திரும்பிச் செல்லும்போதே. சாப்பிட்டு விடுவேன். இன்று எப்படியோ. ஒன்று மாற்றி ஒன்று வேலை வந்துகொண்டே இருந்ததில். சாப்பிட நேரமில்லாமல் போயிற்று.” என்று சமாதானமாகப் பேசினான் வசீகரன்.

“செய்துகொண்டே இருந்தால். வேலையும் வந்துகொண்டேதான் இருக்கும். எப்போது அலை ஓய்வது? எப்போது கடலில் குளிப்பது? வாருங்கள். கையைக் கழுவிவிட்டு வாருங்கள். நீங்களும் சேர்ந்து சாப்பிடுங்கள்.” என்று. அவனையும் உண்ண அழைத்தாள்.

பகவதி.

“ஷ். அம்மா. நம் உணவு. அவருக்குப் பிடிக்குமோ. என்னவோ?” என்று தணிந்த குரலில் தாயிடம் சீறினாள். மயூரி.

“எல்லாமே பிடிக்கும் “ என்று சின்னவளிடம் சொன்னவன். தாயிடம் திரும்பி. “ஆனால். இரண்டு மகள்களுக்காக மட்டுமாக் கொண்டு வந்திருப்பீர்கள். இன்னொரு பங்கு வைத்தால் சரிவராது. ஆன்ட்டி. செக்கை வாங்கிக்கொண்டு. நான் கிளம்புகிறேன். அல்லது. அவர்களைச் சாப்பிடச் சொல்லுங்கள். நான். நாளைக் காலையில் வந்து வாங்கிக் கொள்ளுகிறேன்.” என்றான்.

“வேண்டாம். வேண்டாம். சாப்பாடு எல்லோருக்கும் போதுமானதாகவே இருக்கும். இந்தப் பருப்புருண்டைக் குழம்பு செய்தால். எப்போதும். மாலையில் ஒரு தரம் வெட்டுவார்கள். இப்போதுதான். முதல் சாப்பாட்டுக்கே மாலையாகிவிட்டதே. இரண்டாம் வெட்டுக்கு இடமேது? மூன்று பேருக்கும் தேவையானது இருக்கும். சாப்பிடுங்கள். “ என்று கூடையில் இருந்த உணவுப் பொருட்களை வெளியே எடுத்து. மூவருக்குமாக வைத்துக் கொடுத்தாள்.

மூவருக்குமே பசி!

பார்த்துப் பார்த்துப் பரிமாறியவாறே “எனக்கு என்ன தம்பி? பயம்தான். இவர்கள் அப்பா குணத்திலே பெரிய மகான் மாதிரி! ஒரே ஒரு குறை. நேரத்துக்குச் சாப்பிட வர மாட்டர். கடைசியாக. அது அல்சராகி . அவரையே காவு கொண்டு விட்டது. அதனாலேயே. யாரும் நேரத்துக்குச் சாபபிடவில்லை என்றால். என்னால் பொறுத்துக்கொன்ன முடிவதில்லை. ரொம்பத் திட்டிவிட்டேனோ? சாரி. வசீகரன் தம்பி.” என்று பகவதி வருத்தம் தெரிவித்தாள்.

“சாரி எதற்கு? நீங்கள் சொன்னதில் தப்பே கிடையாது. சொன்னதெல்லாம். எங்கள் நல்லதற்காகத்தானே!” என்ற வசீகரனுக்குத் தாயின் ஆற்றாமை நினைவு வந்தது.

அவ்வப்போது. கிட்டத்தட்ட இதே போலப் பேச்சுதானே?

அப்படியானால். தாயன்பு ஒரே மாதிரிதானே இருக்கிறது என்று. யோசனை ஓடியது. குணத்திலும். இதுவரை குறை கண்டதில்லை.

மயூரியும் பரவா... அவளிடம் தப்பே இல்லை என்றே சொல்லலாம்.

ஆனால். இந்த மதிவதனி  மெய்யாகவே மதி போன்ற முகத்தை வைத்துக்கொண்டு. அண்ணன் வாழ்வில். மிக மோசமாக விளையாடியிருக்கிறாளே! இவளோடு பிறந்த பாவம். மயூரியைப் பாதிக்க விடலாமா?

வழக்கம் போல. மயூரிதான் வந்து. செக்கை எடுத்துக் கொடுத்தாள்.

செக்கை எடுத்துச் சரி பார்ப்பது போல நேரம் கடத்தியவனுக்கு. அப்புறமும் கிளம்ப மனம் வரவில்லை. “ஆமாம். அப்படி என்ன சாப்பிடக் கூட நேரமில்லாதபடி வேலை?” என்று வினவினான்.

“ஏன். நீங்களும்தான் சாப்பிடவில்லை!” என்றாள் மயூரி பதிலுக்கு.

“என் வேலை வேறு  பல வகையானது பார்க்க வேண்டும். “

“அவரவர் வேலை அவர்களுக்குத்தான் தெரியும். இப்போது கூட. அம்மா வந்ததால்  கை வேலையைப் போட்டுவிட்டுத்தான் சாப்பிடப் போனோம்.”

வசீகரனின் பார்வை கடைக்குள் சுற்றிப் பாய்ந்து மீண்டது.

அப்படி ஒன்றும் கூட்டம் மொய்க்கிற நேரமில்லை.

அவனது பார்வையைக் கவனித்தவளுக்கு எரிச்சல் வந்தது. கடை என்றால். விற்பனை ஒன்றுதான் வேலையா? அடிப்படை வேலை

எத்தனை இல்லை? ஆனால். அதை அவனுக்கு விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்கும் மன நிலையும் அப்போது அவளுக்கு இல்லை.

தாயார் வைத்துக் கொடுக்க  குடும்பத்தில் ஒருவனைப் போல. அவன் கூட உட்கார்ந்து சாப்பிட்டது. அவளை ஒரு விதமாகப் பாதித்து. சும்மாவே அமைதியிழக்கச் செய்திருந்தது.

அவனைக் கிளப்பி அனுப்பி விடும் நோக்கத்தோடு. “எங்களுக்கு இன்னும் நிறைய வேலை இருக்கிறது. வசீகரன் சார். அதனால் போய் வருகிறீர்களா?” என்று கேட்டாள்.

விரட்டுவது போலத்தான் விருந்தோம்பல் பற்றி. ஒரு குட்டு வைக்கப் போகிறான் என்று அவள் நினைத்தபோது. அவன் தன் வெண்ணிறப் பற்கள் பளீரிட நகைத்தான்.

“நிச்சயமாய் வருகிறேன் நீ சொல்லிவிட்டாய் அல்லவா?” என்று. ரொம்ப சந்தோஷம் போலக் கூறிக் கிளம்பிச் சென்றான்.

நான் சொன்னதால் வருகிறானாமா? எப்போது வரச் சொன்னேன் என்று யோசித்தவளுக்கு. விஷயம் புரிந்து சிரிப்பு வந்தது.

போகிறீர்களா என்று கேட்பது. நாகரீகமில்லை. அதற்காகப் “போய் வருகிறீர்களா” என்பதுதான். அதைப் போய். என்ன மாதிரி மாற்றிச் சொல்லுகிறான்!

புன்னகையுடனேயே. மயூரி தன் வேலையைத் தொடரப் போனாள்.

# அத்தியாயம் -10

அந்த வாரம் சனிக்கிழமையன்று வசூலுக்கு. வசீகரன் வரவில்லை.

வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும். மதியம் தாண்டியதிலிருந்து வாயிலை அடிக்கடி எட்டிப் பார்த்துக்கொண்டே இருந்த மயூரியை. அவன் ஏன் வரவில்லை என்ற கேள்வி குடைந்துகொண்டே. இருந்தது. ஒரு வேளை. உடம்பு சரியில்லையோ?

கிட்டத்தட்ட எட்டு மணியளவில். அன்று வரமுடியவில்லை என்றும். செக்கை காவலாளியிடம் கொடுத்து வைக்கும்படியும். அவனுடைய பணியாளர்களில். அந்தப் பக்கம் வசிக்கும் யாரையேனும். காலையிலேயே அனுப்பி வாங்கிக் கொள்வதாகவும் அவனிடமிருந்து தகவல் வந்தது.

ஆனால். அதன்படி வாங்கப் போனவன் அவனே.

அன்று அதிகப்படியாக வாயை விட்டுவிட்டோமோ என்று. வசீகரனுக்கு ஓர் எண்ணம். மயூரி அதைப் பயன்படுத்திக் கொள்கிற விதம் இல்லை என்பது அவனுக்கு நிச்சயமே. ஆனால். நேர் மாறாக அவனைத் தவறாகக் கருதி. நத்தையாகச் சுருட்டிக் கொண்டுவிட்டால்?

சும்மா நட்பினருக்குள் போலக் காலை வாருகிற பேச்சு என்று. அவள் சாதாரணமாகக் கருதி ஒதுக்கும் அளவுக்கு ஓர் அவகாசம் கொடுப்பது நல்லது என்று நினைத்தான்.

அவனே செக்கை வாங்கிப் போனான் என்று செக்யூரிடி சொல்லாதிருக்க மாட்டான்.

ஆனால். அவளைச் சந்திப்பதற்காக மட்டுமே அவர்களது கடைக்கு வருவதாக மயூரி எண்ணமாட்டாள் அல்லவா?

என்னதான் அவன் சம்பந்தப்பட்ட அனைத்தையும் மயூரியே கவனித்தாலும். அது. தமக்கை மதிவதனியின் மனம் எந்த வகையிலும் நொந்துவிடாமல் காப்பதற்காகவே என்பதை. வசீகரனும் அறிந்தே இருந்தான்.

அவளது. தகுதியற்ற இந்தப் பாசம் மட்டும் இல்லாதிருந்தால் ஆனால். அது பக்காவாக. உடும்புப் பிடி போல அல்லவா. அவளைப் பிடித்துக்கொண்டு இருக்கிறது!

மறுநாள் அதிகாலையில் ஜாகிங் போய்விட்டு வரும்போது. "உங்களுக்காக" பக்கமாகச் சென்று செக்கை வாங்கப் போனால்.

கவரைக் கொடுத்துவிட்டு. “எப்பவுமே. சீக்கிரமே வருகிறவங்கதான். ஆனால். நேத்து ராத்திரியும் லேட்டு  இப்பவும். அஞ்சு மணிக்கே கடை திறந்தாச்சுது. சார். சின்னம்மாவுங்க  கடைக்குள்ளாரதான் வேலை பண்ணிக்கிட்டு இருக்கிறாங்க.” என்று. செக்யூரிடி தெரிவித்தான்.

காவலாள் சொன்ன “ஐந்து மணி”. அவனை ஆச்சரியப்பட வைத்தது. அது. ஆறாகவும் இருந்து  ரொம்பவும் சீக்கிரமாக என்பதைக் காட்ட. மிகைப்படுத்திச் சொன்னதாகவும் இருக்கலாம்.

ஆனால். ஆறு மணியே என்றாலும். இந்த நேரத்தில். துணிகளை விற்பனை செய்யும் ஒரு கடையில். என்ன வேலை இருக்கக் கூடும்? பலசரக்குக்கடை என்றாலும் கூட. ஏதோ ஒரு வகையில் ஒத்துக் கொள்ளலாம்.

அவரவர் வேலை. அவரவருக்குத்தான் தெரியும் என்று மயூரி சொன்னது. வசீகரனுக்கு நினைவு வந்தது.

அவரவர் வேலை! இந்த மகா மனுஷிகள் என்ன வெட்டி முறிக்கிறார்கள் என்று பார்க்கலாமே!

சற்று அலட்சியமாகத்தான் வசீகரன் கடைக்குள்ளே சென்றது. ஆனால். அங்கே கண்ட காட்சி. அவனை ஆச்சரியப்பட வைத்தது.

உள்ளே ஒரு புறமாய்க் குவியல் குவியலாய் கண்ணாடி உறையினுள் ஆடைகள். இன்னொரு புறமும். அதே குவியல்கள். சற்றுத் தள்ளி  ஏதோ கணக்கில் பிரித்து அடுக்கப் பட்டிருந்த ஆடைகள். அவையும் நிறைய இருந்தன.

பக்கத்தில் இருந்த குறிப்பைப் பார்த்துவிட்டு. ஒரு சிறு அட்டையில் ஏதோ எழுதி. ஒரு புறம் கிடந்த குவியல்களில் ஒன்றை எடுத்துச் சரிபார்த்துவிட்டு. அதன் உறையினுள் போட்டு. எதிர்ப்புறம் இருந்த குவியலில். மதிவதனி போட்டுக் கொண்டிருந்தாள். அடுத்தவள்

மயூரி

கடுமையான உழைப்பு காரணமோ. என்னவோ? அக்கா மதிவதனியின் மடியில் தலை வைத்து. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவருமாகச் செய்து கொண்டிருந்த வேலை என்ன என்று உடனே புரிந்தது. கொள்முதல் செய்த உடைகளுக்கு. அக்காவும் தங்கையுமாகக் கடையில் உட்கார்ந்து. விற்கும் விலை போடுகிறார்கள். இதை  விற்பனை வேலை பாதிக்காதபடி  செய்கிறார்கள். ஏனெனில். கடை நேரத்திலும்  சேல்ஸ் பெண்களோடு சேர்ந்து அந்த வேலையையும். இருவருமே செய்வதை. வசீகரன் பார்த்திருக்கிறான்.

இப்போது செய்வது. அதற்கும் மேலே. அதிகப்படி வேலை!

நுழை வாயிலிலேயே நின்று பார்த்தவனுக்கு ஏதோ நெருடியது.

இவ்வளவு கடின உழைப்பு. தப்பானவர்களுக்கு முடியுமா? அதிலும். கல்யாணம் ஆனவன் என்றும் பாராமல். பணக்காரனை மயக்கிக் கைக்குள் போட்டுக்கொண்டு. சொகுசு வாழ்வு வாழத் திட்டமிட்டவளுக்கு?

ஆனால் முடிந்திருக்கிறதே! அல்லது
ஒருவேளை. அதில் ஏதேனும்

பக்கத்தில் இருந்து துணிகளின் வேலை முடிந்துவிடவே. சற்றுத் தள்ளிக் கிடந்த துணி பாக்கெட்டை எடுக்கக் கை நீட்டிய மதிவதனியின் பார்வை வட்டத்தில் வசீகரன் விழ. நிமிர்ந்து பார்த்து. அவனைக் கண்டதும் லேசாக முறுவலித்தாள்.

“விலை போட்டு முடித்தால்தான். இன்றைய விற்பனைக்கு வைக்க முடியும்.” என்றாள் மெல்லிய குரலில்.

தங்கை விழித்து விடக் கூடாது என்பதற்காகத் தணித்த குரலோ? ஆனால். இப்படி மடித்த நிலையில் காலை வெகு நேரம் வைத்திருந்தால் வலிக்குமே!

முன்னே வந்து. அவளது கைக்கு எட்டும்படி பல பாக்கெட்டுகளை நகர்த்திவிட்டு. “இதோ வருகிறேன்.” என்று வெளியே சென்றான்.

செக்யூரிடியிடம் விவரம் கேட்டு. சற்றுத் தள்ளி இருந்த காஃபி. ஜூஸ் கடையில். ஃப்ளாஸ்குக்கு முன்பணம் கட்டி. காஃபியும். கப்புகளும் வாங்கி வந்தான்.

ஒரு கப்பில் காஃபியை ஊற்றி மதிவதனியிடம் கொடுத்துவிட்டுத் தானும் ஒரு கப்புடன். நாற்காலியில் உட்காருமாறு அவள் சொன்னதை மறுத்து சற்றுத் தள்ளி. கீழேயே அமர்ந்து. “காலையில் வேலை செய்யும்போது. ஒரு காஃபி குடித்தால் நன்றாக இருக்கும். ஆறுமுன் குடியுங்கள்.” என்றான்.

“ஓ ஆமாம். தாங்க்ஸ் வசீகரன். நானுமே ஒரு காஃபி குடித்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கத்தான் செய்தேன். ரொம்பத் தாங்க்ஸ். ஆனால். உங்களுக்குத்தான் வீண் சிரமம்.” என்றாள் லேசான தொண்டைச் செருமலோடு.

“ஏனோ? அன்று உங்கள் அம்மா முழுச் சாப்பாடே தர வில்லையா?” என்றான் அவன்.

“அம்மா
 எங்கள் அம்மா ஒரு தனிப் பிறவி. வசீகரன். அம்மா அன்பின் உருவம்.” என்றபோது. மதிவதனியின் கண்களில் நீர்த்திரை படிந்தது போல ஒரு பளபளப்பை. வசீகரனால் காண முடிந்தது.

என்ன பெரிய விஷயம்? எல்லா அம்மாக்களும். அவரவர் மக்களுக்கு அன்பின் வடிவங்கள்தானே என்று நினைத்தபோதும் அதைச் சொல்லாமல். “அப்படி அன்பே உரு என்றதால்தான் எனக்குச் சாப்பாடு கிடைத்தது.. இல்லாவிட்டால் இவனுக்கெல்லாம் என்ன பருப்புருண்டைக் குழம்பு என்கிறீர்களா?” என்று அவன் கேட்க. மதிவதனி சட்டெனச் சிரித்தாள்.

“நீங்கள் எதிர்பாராத விதமாகப் பேசுவீர்கள் என்று மய்யூ சொல்லுவாள். சரியாகத்தான் இருக்கிறது.” என்றாள் இயல்பாக.

இன்னும் என்ன சொல்லியிருப்பாள் என்று. வசீகரனின் சிந்தனை ஓடிற்று.

இந்தச் சிரிப்பு.  பேச்சினாலோ. ஃபில்டர் காஃபி வாசனையிலோ. மயூரி விழித்தாள். “ஐயோ. ரொம்ப நேரம் தூங்கிவிட்டேனாக்கா? உன் ...கால் ...என்னக்கா. என்னை எழுப்பியிருக்கக் கூடாதா? கீழேயாவது உருட்டி விட்டிருக்கலாமே.” என்று குறைப்பட்டாள்.

“வலியேல்லாம் ஒன்றுமில்லை. பார். மிஸ்டர் வசீகரன் நமக்குக் காஃபி வாங்கி வந்திருக்கிறார்.” என்று மதிவதனி ப்ளாஸ்கைக் காட்டினாள். “உனக்கும் இருக்கிறது.”

அப்போதுதான் வசீகரனைக் கவனித்து. “இவர் எதற்கு. இப்போது. இங்கே வந்தார்?” “ என்று கேட்டாள் சின்னவள்.

வேலை வேலை என்றவள் தூங்கும்போது பார்த்தானே என்பது ஒரு பக்கம் என்றால்  அந்த நேரத்தில்  அக்காவிடம் ஏதும் கேட்டானோ என்ற கவலை வேறு.

ஆனால். “என்ன உற்சாகமான வரவேற்பு!” என்று அதிசயித்தான் வசீகரன். “தனி ஆசிரியர் வைத்துத் தங்கைக்குக் கற்றுக் கொடுத்தீர்களா. மதிவதனி?” என்று கன அக்கறையாக மூத்தவளிடம் விவரம் கேட்டான்.

முறுவலித்தபடி. “ஏய். போடி. போய் முகம் கழுவிவிட்டு வந்து. காஃபியைக் குடி.” என்று. தங்கையை எழுப்பினாள் மதிவதனி.

“நேரம் கெட்ட நேரத்தில் வந்தால். என்ன என்று கேட்கக் கூடாதாக்கும்?” என்று முனகியவாறு. மயூரி முகம் கழுவப் போனாள்.

“பாவம். நேற்று நான் தூங்கிய பிறகும். வேலை செய்தாள்.

காலையிலும் சீக்கிரமாக எழவே அசந்துவிட்டாள்.” என்று தங்கைக்காகப் பேசும்போதே. சின்னவள் தலை வைத்திருந்த காலின் விரல்களை. அவனது கவனத்தை கவராத விதமாக. மதிவதனி அசைத்துப் பார்ப்பதைக் கண்டுவிட்டு. வசீகரன் எழுந்தான்.

“மாடி வேலையைப் பார்த்துவிட்டு வருகிறேன்.” என்று மாடிப் பக்கம் அவன் திரும்புகையில் மயூரி முகம் கழுவிக்கொண்டு வந்துவிட்டாள்.

காஃபியைக் கப்பில் ஊற்றி எடுத்துக்கொண்டு. அவனோடு சென்று சுற்றிக் காட்டினாள். “பெயின்டிங் வரை. கிட்டத்தட்ட எல்லாம் முடிந்து விட்டது. கொள்முதல் செய்ய வேண்டியதுதான். அதற்கான செக் எப்போது தருகிறீர்கள். வசீகரன்.” என்று கேட்டாள்.

அருமை அக்காவுக்குத் தெரியாமல் கேட்பதற்காகக் கூட வந்திருக்கிறாள்!

“கிட்டத்தட்ட என்பது இல்லாமல். முடித்த பிறகு கேள். “ என்றான் அவன்.

திரும்பிச் செல்லும்போது. தமக்கை மடியில் தலை வைத்து. மயூரி அசந்துபோய்த் தூங்கிய காட்சி. வசீகரன் மனதில் தோன்றிக்கொண்டே இருந்தது. தொடர்ந்த அனைத்தும். மனதில் ஓடியது.

எல்லாம் நல்ல விதமாகத்தான் தோன்றியது.

ஆனாலும். ஒரு முறை பார்த்த காட்சியை வைத்து எதையும் முடிவு பண்ணக் கூடாது. நாடு கடத்தப்பட்டவன் போல அண்ணன் இந்த நாட்டிலேயே இல்லாமல் போகக் காரணம் இதே மதிவதனிதான் என்பதை மறந்துவிடக் கூடாது என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். அவன்.

மதிவதனி எப்படிப்பட்டவளாக இருந்தாலும். மயூரியுடைய சகோதரியாக இல்லாமல் இருந்திருக்கலாமே என்று எண்ணாதிருக்க அவனால் முடியவில்லை. குறைந்த பட்சமாக. அவனது வாழ்க்கை. சிக்கலற்றுப் போயிருக்கும்!

மயூரியோடு நேர்ந்த இன்னோர் எதிர்பாராத சந்திப்பு. அவர்களது வாழ்வில் முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தியது.

ஆண்டுதோறும் வீட்டில் விழுகிற பழைய துணிமணிகளைச் சேர்த்து வைத்து. ஒரு தொண்டு நிறுவனத்துக்குக் கொண்டுபோய்க் கொடுப்பது. வசீகரனின் குடும்பத்தில் வழக்கம். தொண்டு நிறுவனம். புற நகர்ப் பகுதியில் இருந்தது.

தூரம் என்று எண்ணி  அடுத்தவர் மூலமாகக் கொடுத்து அனுப்பியபோது. அதில் சில தில்லு முல்லு நடந்ததாகத் தெரியவரவே மூன்று வருடங்களாக வசீகரனே துணிகளை நேரில் கொண்டுபோய்க் கொடுத்துக் கொண்டிருந்தான்.

அன்றும் அது போலக் கொடுத்துவிட்டுத் திரும்பினால். பக்கவாட்டில் இருந்த பெரிய தோட்டத்தில் எதையோ கொத்தி  பாத்தியைச் சீரமைத்துக் கொண்டிருந்த பெண்  மயூரியேதான்.

இவள்  இங்கே என்ன செய்கிறாள்? கடையில் எப்போதும் வேலையிருக்கும் என்பாளே. இவள்  இங்கே இருந்து. மண்ணைக் கொத்திக் கொண்டிருந்தால். கடையில். இன்றைய இவளது வேலையை யார் செய்வார்கள்?

“என்ன சார். பார்க்கிறீர்கள்?” என்ற குரல் அவனது சிந்தனையில் குறுக்கிட்டது.

சற்று முன். அவன் கொண்டு வந்த துணிகளைக் கணக்கிட்டு. அவனிடம் கையெழுத்தும் வாங்கிப் போன  அந்த இல்லத்துடைய அலுவலர்தான்.

“ஒன்றுமில்லை
தெரிந்தவர்கள். நகரத்தில் இருந்து. இங்கே வந்து தோட்ட வேலை செய்கிறார்களே. என்று பார்த்தேன்.” என்றான் வசீகரன். உண்மையை மறையாமல்.

“யார்...” என்று எட்டிப் பார்த்துவிட்டு. “அந்த மயூரிப் பொண்ணா? அப்பப்போ வந்து. “சிரமதானம்” பண்ணிவிட்டுப் போகும்! அந்தக் குடும்பமே. வரும். சார்! எங்கள் “இல்லம்” பணக்கார நிறுவனம் அல்ல. இப்படி சிரமதானம் செய்கிறவர்களை. இரு கை நீட்டி வரவேற்போம்.” என்று தெரிவித்தார் அவர்.

சிரமதானம் பற்றி மேலும் சில விவரங்களை அறிந்துகொண்டு பார்த்தால். மயூரி காணாமல் போயிருந்தாள். தேடியபோது. எதிர்ப்புறமாகப் பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தாள்.

அவசரமாகச் சென்று. காரில் கொண்டு விடுவதாகச் சொல்லி அழைத்தான்.

சிறு தயக்கத்தின் பின்  அவளே காரில் ஏறிக் கொண்டாள். “இங்கிருந்து நேர் பஸ்தான். ஆனால். உங்கள் காரும் சென்னைக்குத்தான் போகிறது எனும்போது. அனாவசியமாகப் பஸ்சுக்குப் பணம் கொடுப்பது அசட்டுத்தனமாகத் தெரிகிறது.” என்றாள் வசதியாக அமர்ந்தபடி.

பக்கவாட்டில் பார்த்து லேசாக முறுவலித்து. “பரவாயில்லை. அவ்வப்போது சரியாகவும் யோசிப்பாய் போல!” என்று இலகுவாகப் பேசினான் வசீகரன்.

கேலி புரிந்து. “இங்கே எல்லாம் சரியாகத்தான் யோசிப்போம். புரிந்து கொள்ளும் தன்மைதான். சில பேருக்கு. அவ்வப்போது இல்லாமல் போய் விடுகிறது.” என்று திருப்பினாள் அவள்.

நன்றாகவே நகைத்து. “அப்பா! ஒரு வார்த்தை கூடத் திருப்பிக் கொடுக்காமல் விடக் கூடாதே!” என்றான் அவன்.

“நம்மிடம் நியாயம் இருக்கும்போது  எதற்காக விடுவது?” என்று என்றாள் அவள் பதிலுக்கு.

உன் அக்காவின் நியாயம் எப்படி என்று கேட்க. அவனுக்கு ஆசைதான். ஆனால். ஓர் இனிய மாலை நேரத்தையும். எதிர்பாராத இந்தச் சந்திப்பையும் வீணாக்கிக் கொள்ள அவனுக்கு மனமில்லை. எனவே  வேறு விதமாகப் பேச்சுக் கொடுத்தான்.

“சிரமதானம் என்று இல்லத்து அலுவலர் சொன்னார். ஆனால் கடை வேலை கெட்டுவிடாதா?” என்று விசாரித்தான்.

“கொஞ்சம். ஆனால்  அக்காவோ  நானோ இப்படி வரும்போது. புளி சாதம் மாதிரி ஏதாவது செய்துவிட்டு. அம்மா முழு நேரமும் கடையில் இருப்பார்கள். எப்படியும். ஒவ்வொருவரும் மாதம் ஒரு நாளேனும் இங்கே வந்து பணி புரிந்துவிட்டுப் போவது. கட்டாயம். “ என்றாள் மயூரி.

“ஏதோ விரதம் இருப்பது போலச் சொல்லுகிறாயே!”

“அப்படிக் கூட வைத்துக் கொள்ளலாம். அப்பாவின் நினைவுக்காக. விடாமல் செய்கிறோம். ஒரு பிராயச்சித்தம் மாதிரி. அப்பா தொடங்கியது. அம்மா . அப்புறம் நானும் பிடித்துப் போய்ச் செய்யத் தொடங்கினேன்.  அக்கா வந்ததிலிருந்து. அவளும் சேர்ந்துகொண்டாள்.”

இவள் அக்கா பிராயச்சித்தம் செய்ய வேண்டியதுதான். ஆனால். அது. இவள் வாயிலிருந்தே வரட்டுமே! ஆனால். தந்தையுமா துணை போனார்? அந்தக் கதை. அவனுக்குத் தெரியாதே!

“பிராயச்சித்தம் என்றால் செய்த தப்புக்குப் பரிகாரமாய்க் கோவிலைச் சுத்தம் செய்து. கோயிலுக்கு வருகிறவர்களின் செருப்புத் துடைத்து என்று. சீக்கியர்கள் செய்வார்களே! ஜனாதிபதி ஜெயில்சிங் கூட ஒரு தரம் செய்தாரே. அது போல. இந்தப் பணியாக்கும்?” என்று.

புரியாதவன் போலக் கேட்டான் வசீகரன்.

ஏதோ யோசனையில் புருவம் நெரிந்திருக்க. அவள் மெதுவாகச் சொன்னாள். “அப்படி அது தப்பு என்று சொல்ல முடியாது. தப்பு செய்துவிட்டோமோ என்று ஒரு சஞ்சலம். இங்கே வந்து தன்னலம் சிறிதுமற்ற பணி செய்யும்போது. அந்தச் சஞ்சலம் மறைவதாக உணர்ந்து. தொடர்ந்து இந்தப் பணியை அப்பா செய்ததாக அம்மா சொல்லுவார்கள்.”

“உன் அப்பா பெரிய மகான் மாதிரி என்று. ஆன்ட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன்! அவருக்கு இந்த சஞ்சலம் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதே. “ என்றான் அவன். வியப்பு காட்டி.

ஒரு கணம் தயங்கிவிட்டு. ஒரு முடிவுக்கு வந்தவள் போல மயூரி சொன்னாள். “அம்மாவிடம் முழு நம்பிக்கை வைக்காமல் அக்காவை அந்தப் பாட்டியோடு கோவைக்கு அனுப்பியது தவறு. தான் செய்த பெரிய தப்பு என்பதாக அப்பா நினைத்ததாக... நினைத்திருக்கிறார். அந்தக் குழப்பம்தான்.”

ஆச்சரியமாய் அவளைப் பார்த்துவிட்டு. மேலே கேட்டான் அவன். “புரியவில்லையே! உங்கள் அம்மாவிடம் முழு நம்பிக்கை வைக்காமல். பாட்டியோடு மதிவதனியை அனுப்புவதா? பெற்றவளிடம்... அதுவும் ஆன்ட்டியிடமா? “

“அம்மா அக்காவைப் பெற்ற தாய் அல்ல.” என்றாள் மயூரி சுருக்கமாக.

திகைத்துப் போனான் அவன். பிரமிப்பு என்றே சொல்லலாம்!

“வாட்?! நம்பமுடியவில்லையே! அக்கா தங்கைகள் என்று தெரிகிற அளவுக்கு மேல் உங்களுக்குள் சாயல் ஒற்றுமை அதிகம் இல்லாவிட்டாலும். உன் அக்கா தாயைப் போலவே இருப்பதாக நினைத்திருக்கிறேனே!” என்று அதிசயித்தான்.

“அம்மா என்றால் அக்காவுக்குப் பைத்தியம். அம்மாவை ஒட்டிக்கொண்டே இருப்பாள். ஒவ்வோர் அசைவிலும் தன்னையறியாமலே அம்மாவைப் பின்பற்றுகிறவளும் அவள்தான். அதனாலேயே அம்மாவைப் போலவே அவள் தோன்றுவதாக நான் நினைத்ததுண்டு.”

சற்று யோசித்துவிட்டு. “இருக்கலாம்.” என்றான் அவனும். “ஆனால். இவ்வளவு அன்பு இருக்கும்போது. உன் அக்கா பாட்டியிடமே இருந்த காரணம்தான் புரியவில்லை.”

வெளிப் பார்வைக்கு இயல்பாகப் பழகுவது போலத் தோன்றினாலும். தன் தமக்கையிடம் வசீகரனுக்கு உள்ளூர ஒரு கடுப்பு வெறுப்பு இருப்பதாக மயூரிக்கு அவ்வப்போது தோன்றும்.

சில பல காரணங்களால். இன்றையப் பெண்களிடம் பெரு மதிப்பு கிடையாது என்பது போல. வசீகரனும் கூறியிருக்கிறான். என்ன காரணம் என்று யோசிக்கத் தேவையில்லை.

மதிவதனி வளர்ந்த முறை. அவளது மனநிலை பற்றித் தெரிந்தால். அவள் பனை மரத்தடியில் நின்று பால் குடித்ததை அவனால் ஒத்துக் கொள்ள முடியுமோ என்று தோன்ற. தான் அறிந்த உண்மைகளை அவனிடம் சுருக்கமாக எடுத்துச் சொன்னாள்.

ஆனால் அத்தனையும் கேட்ட பிறகும். மதிவதனியிடம். வசீகரனின் கடுப்பு மாறவில்லை எப்படியும். ஒரு மணமான மனிதனோடு சுற்றியிருக்கிறாளே. என்றான் அவன்.

“அவருக்கு மணமாகியிருந்தது அக்காவுக்குத் தெரியாது. வசீகரன்.” என்றாள் தங்கை.

“அதெப்படித் தெரியாமல் போகும்
” என்று அவன் அதே ரீதியில் பேசவும் பொறுமையிழந்து. “பின்னே. மணமானவன் என்று கழுத்தில் போர்டு மாட்டிக்கொண்டா. நீங்கள் அலைகிறீர்கள்? மணமானவரை. இல்லையா என்று எப்படிக் கண்டுபிடிப்பது? கழுத்தில் தாலியா கிடக்கிறது?” என்று ஆத்திரத்துடன் கேட்டாள் அவள்.

“இது ஒரு பேச்சா? தாலியைக் கழற்றி வைத்துவிட்டுச் சுற்றுகிற பெண்களே இல்லையாக்கும்? தினசரி காரில் வருகிறான். ஊட்டி வரை. அவனோடு வந்து. ரூம் போட்டுத் தங்கத் தெரிகிறது. அந்தக் கார் எண்ணைக் கொண்டு அவனைப் பற்றி விசாரித்து அறியத் தெரியாதா? “

என்ன பதில் சொல்வது? அவளானால் விசாரித்திருப்பாள்தான். ஆனால். ஆறு ஆண்டுகளுக்கு முன்னால். அவளுடைய அன்பு அக்கா. என்ன மாதிரி இருந்தாள் என்று. இவனுக்கு என்ன தெரியும்?

“அக்கா தப்பான நோக்கத்துடன் போகவில்லை. வசீகரன்.” என்றாள் தழுதழுத்த குரலில்.

“நம்ப முடியாது.” என்றான் அவன் இளக்கமற்ற குரலில்.

அந்தக் குரல் அவளுள் தீ மூட்டியது. இவன் என்ன. பெரிய நீதிபதி மாதிரி. அபிப்பிராயம் சொல்வது? அப்படிச் சொல்ல அவன் அண்ணன் என்ன ஒழுங்கு?

கண்ணில் கனலுடன். “நம்ப வேண்டாம். அந்த விவரம் தெரியுமோ. தெரியாதோ? என் அக்காவை விட்டுவிடுவோம். குறைந்த பட்சமாக உங்கள் அண்ணனுக்கு. தனக்கு மணமானது தெரியும்தானே? உங்கள் அண்ணன் ஏன் அக்காவோடு சுற்றினார்? அதுவும். நீங்கள் சொல்லுகிற மாதிரி ஊட்டியில் ரூம் போடுகிற அளவுக்கு?” என்று சீறினாள்.

அவன் பதில் சொல்லத் தயங்கவில்லை. “மறுக்க முடியாத அளவு ஒருத்தி மேலே வந்து விழுந்தால். அவன் வேறு என்ன செய்வான்?”

“அப்படி விழுகிறவளோடு எல்லாம் போனால் எவனை நம்புவது? நீங்களும் அதே போலப் போவீர்கள் போல?”

“மாட்டேன். உன் ஒருத்தியோடுதான் நான் “

வினாடி கூடத் தாமதியாமல் வந்த பதில். அத்தோடு நின்றது.

வசீகரனின் கையில். ஒரு வினாடி தடுமாறிய கார். உடனே நேராயிற்று.

சாலை ஓரமாக ஒதுக்கிக் காரை நிறுத்திவிட்டு. அவளைப் பார்த்தான் அவன்!

# அத்தியாயம் - 11

சற்று நேரம். காருக்குள் அமைதி நிலவியது.

“மயூரி
” என்று என்று தணிந்த குரலில் அழைத்து. வசீகரன் சொன்னான். “இந்த மாதிரிச் சொல்ல வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால். முதல் முதலாக மட்டுமின்றி. முதலிலிருந்தே என் மனதைப் பாதித்தவள் நீ மட்டும்தான் மயூரி என்றான். “சொல்லு. உனக்கும் பாதிப்புதனே?” என்று மென் குரலில் வினவினான்.

இல்லை என்று எப்படிச் சொல்வது?

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனாகிப் போய்விட்டானே என்று வருந்தினாளே! அடுத்து. இவன் பேச்சிலிருந்து தமக்கையைப் பாதுகாப்பதாகக் கருதி பேச்சுவார்த்தைக்கு அவளே சென்றாளே. வசீகரனைச் சந்திக்கும் ஆர்வமே இல்லை என்று சொல்ல முடியுமா? இப்போது கூட இவனை அன்னியனாக நினைத்திருந்தால். மதிவதனியைப் பற்றி விளக்கத் துணிந்திருப்பாளா? ஆனால்

“மயூரி?”

திடுக்கிட்டு நோக்கினாள் அவள். “இ இதற்கு என்ன எதிர்காலம் இருக்க முடியும். வசீகரன்?” என்றாள் தழுதழுத்த குரலில்!

சட்டென முகம் மலர்ந்து. “இருவர் மனதிலும் அன்பு இருப்பதுதான் முக்கியம். மயூரி. மற்றதை. அந்த அன்பின் வலிமையால். நாம் உருவாக்குவோம்.” என்றான் அவன். நம்பிக்கையோடு.

சென்னை வரும்வரை இருவருக்குமே சீரியசான எதையும் பேசப் பிடிக்கவில்லை. பார்த்து ரசித்த காட்சிகள் கேட்டு மகிழ்ந்த பாடல்கள். நகைச்சுவைத் துணுக்குகள் என்று இலகுவாகப் பேசி மகிழ்ந்தார்கள்.

சின்னச் சின்ன விஷயங்களிலும் ஒத்த மனம் இருப்பது. இருவருக்குமே மகிழ்ச்சி கலந்த அதிசயமாக இருந்தது.

வசீகரன். மயூரியைக் கடையிலேயே கொண்ட விட்டுவிட்டுப் போனான்.

வியந்து பார்த்த தாய் தமக்கையிடம். அவர்கள் சந்தித்த விவரம் மயூரி சொன்னாள்.

“நம்மைப் போலவே. கருணை இல்லத்திடம். வசீகரன் குடும்பத்துக்கும் நம்பிக்கை இருக்கிறதுக்கா. ஆண்டுதோறும். பழைய துணிமணிகளை அங்கேதான் கொடுப்பார்களாம். அவ்வப்போது பண

உதவியும் செய்வார்களாம்.” என்று புகழ்ந்தாள்.

“பணம் கொடுப்பது பெரிய விஷயமல்ல. மயூரி. அங்கே கொடுக்கிற பணத்துக்கு வருமான வரி விலக்கு உண்டு என்று எழுதிப் போட்டிருந்தது. ஆனால். இந்தத் துணிமணி கொடுப்பதை. நாமும் செய்யலாமே என்று தோன்றுகிறது. கடையில் கூட. விற்காமல். ரொம் காலம் தங்கிவிட்டதை. விலைக் குறைப்புப் போட்டு விற்பதற்குப் பதிலாக. அங்கே கொடுக்கலாம். என்னம்மா?”என்று தாயிடம் கேட்டாள் மதிவதனி.

“நல்ல யோசனை. செய்யலாம்டா.” என்றாள் அன்னை.

பூ விரிந்தால். அதன் வண்ணமும் வாசனையும். காட்டிக் கொடுத்துவிடும். இலையோடு இலையாக மறைந்து கிடக்கும் மனோரஞ்சித மலரின் இருப்பிடத்தை கூட. அதன் வாசனை அறிவித்துவிடும்.

காதலும் அப்படிப் பட்டதுதான்.

சாதாரணம் போலக் காட்டிக் கொண்டாலும். வசீகரன் மயூரியின் நேசமும். ஒருநாள் வெளிப்பட்டுவிட்டது. அதுவும். மதிவதனியின் கண்களுக்கு!

அவர்களது கடையின் மாடியில். பெண்களுக்கான உடைப் பகுதிக்கான மரவேலை. உள் அலங்காரம். மின் வசதிகள் ஆகிய அனைத்து வேலைகளும். சிசி கேமிரா வரை பொறுத்தி முடித்து. உடைகள் கொள் முதலும் தொடங்கி வேகமாக நடந்தது.

வரப் போகிற விரிவாக்கத்தின் முன் அறிவிப்பாக. பல “மான்னக்குயின்” களுக்கு கண்ணையும் கருத்தையும் கவரும்வண்ணம் உடை அணிவித்து. அங்கங்கே வைத்தனர்.

மேல் கடை திறப்பு விழா வேலைகளை. பகவதி கவனித்தாள்.

கடை அமைப்புகளைப் பார்வையிட என்று. வசீகரன் “உங்களுக்காக” கடைக்கு அடிக்கடி வந்தான். கையொப்பமிட்டுச் செக்கை வாங்க புதுக் கடன்களுக்கான ஒப்பந்தகளுக்கான வேலைகளுக்காக. மயூரி. அவனது “விருத்தி”க்குச் சென்று வந்தாள்.

வேண்டுமென்று உருவாக்கிக் கொள்ளாமலே இது போன்ற சம்பவங்கள் அவர்களது நேசத்தை வளர்த்தன. தானாக மனதில் ஒரு நெருக்கத்தையும் உருவாக்கின.

அன்று வசீகரன் “உங்களுக்காக” கடைக்குச் சென்றிருந்தபோது.

சற்று ஓரமாக ஒதுக்கமாக வைத்திருந்த ஆளுயர “மேன்னக்குயி”னின் முன்னே குனிந்து. உடையின் கீழ் மடிப்புகளை அழகாக எடுத்து விட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

“இதையெல்லாம் காட்சிக்கு வைக்கும்போது. தப்பித் தவறிக்கூட. இவைகளின் பக்கத்தில் போய்விடாதேம்மா. என் மையூரியின் இயற்கை அழகுதான் கண்ணைப் பறிப்பது என்பது புரியாமல். இந்த “மான்னக்குயின்”களின் உடைகள்தான் அழுது வடிவதாக எண்ணிவிடுவார்கள். அப்புறம். விளைவு நேர் எதிராகி விடும்!” என்றான் சன்னக் குரலில் சிரிப்பைக் கலந்து.

தென்றலில் தென்னை ஓலை சலசலப்பது போல மயூரியின் மெல்லிய சிரிப்பை எதிர்பார்த்த வசீகரனுக்கு ஏமாற்றமே! குனிந்த தலை நிமிராததோடு அவனைத் திரும்பியும் பாராமல் கடையின் பின்புறம் இருந்த சிறு கோடவுன் பகுதிக்குள் விரைந்து சென்றுவிட்டாள் அவள்.

யாரும் வருவதைக் கவனித்திருப்பாளோ என்று எண்ணியவாறே. மாடிப் பகுதியைப் பார்க்கிற சாக்கில். படியேறிச் சென்றான் அவன்.

பாதித் துணிகள் அடுக்கப்பட்ட நிறையில் விலை போட்டு அடுக்கப்பட வேண்டிய மீதித் துணிகள் மூட்டைகளாகக் கிடந்தன.

கீழ்ப் பகுதி மட்டும் இருக்கையில் அக்காவும் தங்கையும் விலை போட்ட காட்சி மனதுள் ஓடியது ஆனால் அது போல இனி எல்லாமே அவர்களே செய்ய இயலாது!

சில நிமிஷங்களிலேயே. “அக்கா ஆஃபீஸ் அறைக்கு வரச் சொன்னாங்க” என்று. சேல்ஸ் பெண் ஒருத்தி வந்து. அவனை அழைத்தாள்.

என்னவாக இருக்கும் என்று யோசித்தவாறே. அலுவல் அறைக்குள் காலடி எடுத்து வைத்த வசீகரனுக்கு. நடந்த தப்பு உடனே புரிந்தது.

மொத்தத்தில் அக்கா தங்கையரின் தோற்றத்தில் இருந்த மொத்த ஒற்றுமை. இருவரிடமும் இருந்த ஒரே நிறத்து சல்வார் செட். முகம் திருப்பி யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் ஓரமாய் ஒதுங்கி நின்று. அவள் பொம்மைக்கு உடை மாட்டிக் கொண்டிருந்த இடத்தில் ஒளி குறைவாக இருந்தது!

எல்லாமாகச் சேர்ந்து. அக்காவைத் தங்கையாக எண்ண வைத்துவிட்டன. அவனும். “என் மயூரி” என்று சொல்லித் தன்னைக் காட்டிக் கொண்டுவிட்டான்!

ஆனால். என்றேனும் ஒரு நாள் எதிர்நோக்க வேண்டிய நிலையே

என்பதால். வசீகரன் பெரிய பிரச்சினையாக இதைக் கருதவில்லை. பெண்கள் உடைப் பகுதி திறந்து. நன்றாக நடந்து லாபம் காணத் தொடங்கிய பிறகு. பேச நினைத்தது. கொஞ்சம் முந்திவிட்டது!

இயல்பாகவே நடந்து சென்று. ஓர் இருக்கையில் அமர்ந்தான்.

“எதற்காக வரச் சொன்னேன் என்று புரிந்திருக்கும்.” என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

அவன் ஒப்புதலாகத் தலையை லேசாக அசைக்கவும். “வேண்டாம். வசீகரன்.

உங்கள் குடும்பத்தால். நான் ஒருத்தி பட்டபாடு போதும். என் தங்கை சிசின்னக் குழந்தை! நல்லவேளையாக. அவளும் அம்மாவும் கொள்முதலுக்காக ஒரு பொட்டிக் நடத்துகிறவர்களிடம் போயிருக்கும் போது. இது நடந்தது. மய்யூ உலகம் அறியாதவள். வசீகரன். வேதனை தாங்க மாட்டாள். தயவு பண்ணி. அவளை விட்டு விலகி விடுங்கள்.” என்று. வெறுப்பும் தவிப்புமாகக் கேட்டுக் கொண்டாள்.

என்னமோ. இவள் மட்டும்தான் வேதனைப்பட்டது போலப் பேசுகிறாளே. என்றிருந்தது அவனுக்கு! அவர்கள் வீட்டின் ஓர் அங்கம். இந்த நாட்டிலேயே இல்லை! அது. யாரால் நேர்ந்தது?

அவளை நேராக நோக்கி. “விலகல் மட்டும் வேதனை தராதா?” என்று கேட்டான். அவள் திகைக்கவும். “நீங்கள் மயூரியிடம் பேசுங்கள் மதிவதனி. அப்போதுதான். அவளது மன நிலை உங்களுக்குப் புரியும்.” என்றவன். அதற்கு மேல் நில்லாமல் எழுந்து சென்றுவிட்டான்.

மதிவதனியும் இதை விடுவதாக இல்லை!

அன்று. அந்த ஊட்டி ஹோட்டலில். அந்தப் பெண். சுகந்தனுடைய மனைவி பேசிய பேச்சு. இந்தப் பிறவியில் மறக்கக் கூடியது அல்ல. அவ்வளவு ஆபாசமாக. கீழ்த்தரமாக . . என்னென்ன வார்த்தைகள் சொன்னாள்?

அவள் வாழும் அந்தக் குடும்பத்தில். பூ மாதிரி மென்மையான அவளுடைய தங்கை. எத்தனை நாள் தாங்குவாள்? எப்போது என்ன முடிவுக்குத் தள்ளப் படுவாளோ என்று. அஞ்சி அஞ்சியல்லவா. வாழ வேண்டும்?

அறுவை சிகிச்சை மாதிரி. இப்போது ஒரு வலியைத் தாங்கிவிட்டால். தினம் தினம் செத்துப் பிழைக்கிற துன்பம் வேண்டாமே!

எல்லாவற்றையும் விட. அவளைப் பெறாமல் பெற்ற தாய் பகவதி! அவள். இன்னொரு முறை இந்தத் துன்பம் படலாமா?

இந்த ஒரு கேள்வியில். மயூரி சுருண்டுவிட்டாள்.

“இந்த விஷயத்தில் வசீகரனை நம்ப முடியாது. அவன் அண்ணனைப் போல அவனும் ஏமாற்றுவான்.” என்று மதிவதனி சொன்னதை. அவள் ஒப்பவில்லை.

ஆனால். அந்தக் குடும்பத்தோடு எப்படிப் பழக முடியும் என்று பெரியவள் கேட்டபோது. அவளால் பதில் சொல்ல முடியவில்லை. ஏனெனில். அவளுமே. இது போன்ற சில விஷயங்களை எண்ணி. அவ்வப்போது மனம் குழம்பியிருக்கிறாள்.

பெண்கள் ஆடைப் பகுதியைத் திறந்த பிறகு இது பற்றிப் பேசி நல்ல முடிவு செய்யலாம் என்ற வசீகரனின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து. அமைதியும் அடைந்திருந்தாள்.

ஆனால். இப்போது எல்லாம் மாறிவிட்டது.

முன்பு மதிவதனி குறிப்பாகச் சொன்னபோதே தமக்கைக்காக மனம் நொந்தவள் அவள். இப்போது. அந்த வார்த்தைகளை அப்படியே கேட்டபோது. அவளது நெஞ்சுக்குள் தீயே எரிந்தது. நா கூசாமல் இப்படிப் பேசுகிறவள் இருக்கும் இடத்தில். அவளுமா? ஒருபோதும் நடக்காது!

அல்லது. அவளுடைய தாயையும் தமக்கையையும் தான். அவள் விட்டு விடுவாளா? அதுவும். ஒரு போதும் நடவாததே1

மதிவதனியிடம் சொல்லி விட்டே சென்று. வசீகரனைச் சந்தித்தாள் மயூரி!

ஆனால். “ அவர்கள் கதை. நம்மைப் பாதிப்பானேன்?” என்று கேட்டான் அவன்.

“பாதிக்காமல் போவதற்கு. நாம் என்ன. தனித்தனித் தீவுகளிலா. வசிக்கிறோம்? பாராமல். பேசாமல் இருப்பது சாத்தியமில்லை. அக்காவை யாராவது அவமதித்தால் என்னால் தாங்க முடியாது. வசீகரன். “ என்றாள் மயூரி.

“உன் அக்கா பேச்சு இப்போது வேண்டாம். முதலில். நம் விஷயம்... “

“அக்கா இல்லாமல் நாங்கள் இல்லை. வசீகரன். சாகக் கிடந்தவளை அரும்பாடு பட்டுப்பிழைக்க வைத்தோம். இந்த என்

அக்காவை விட முடியாது. அம்மாவைப் பெரும்பாலும் தொட்டுக்கொண்டும் உரசிக் கொண்டும் அருகில் அமர்கிறவள் அக்காதான். உங்களைப் பார்த்த அன்று. சற்று நேரம் கையைப் பிடித்துக்கொண்டு இருக்கும்படி என்னிடம் கேட்டாள். புரிகிறதில்லையா? வாழும் சக்தியே எங்களிடமிருந்துதான் அவளுக்குக் கிடைக்கிறது. அது இல்லாமல் அவளைத் தவிக்க விட என்னால் முடியாது." என்றாள் மயூரி. தீர்மானமாக.

"அப்படியானால்? உனக்கு. நான் முக்கியம் இல்லையா?" என்று குரலைக் கட்டுப்படுத்திகொண்டு. வசீகரன் கேட்டான்.

ஒரு கணம். மயூரியின் உதடுகள் துடித்தன.

ஆனால் உடனேயே சமாளித்து. "முக்கியம்தான் வசீகரன். அது உங்களுக்கே தெரியும். ஆனால். நான் இல்லாவிட்டாலும் நீங்கள் வாழுவீர்கள். அம்மாவும் நானும் இல்லாத அக்காவால் அது முடியாது. ஒரேயடியாக உடைந்துபோவாள். அதனால். நாம் பிரிந்துவிடுவோம். வேறு வழியில்லை." என்று மெல்லிய குரலில் கூறி முடித்தவள். அதற்கு மேல் தாங்க முடியாது என்று உணர்ந்து. வேகமாக எழுந்து அங்கிருந்து விரைந்து வெளியேறிச் சென்றுவிட்டாள்.

அதன் பிறகு. வசீகரனால். அவளைத் தனியே சந்தித்துப் பேச இயலவில்லை.

ஒன்று அவன் வரும் வேளைகளில் வேறு ஏதாவது வேலைகளை வைத்துக்கொண்டு மயூரி விலகிப் போனாள்.

அல்லது. அவனைக் கண்டதும். மதிவதனியே தங்கையை. வெளி வேலை எதற்காவது அனுப்பி வைத்தாள்.

ஓரிரு தடவைகளுக்கு மேல் வசீகரன் இந்த முயற்சி செய்யவில்லை. பயனிராது என்று தெரிந்தே. ஒன்றைச் செய்வானேன்? அவன் போராட வேண்டிய இடமே வேறு என்று புரிந்த பிறகும்!

எனவே. அவன் மதிவதனியையே நேராகச் சந்தித்தான். "உங்கள் வாழ்வு நன்றாக அமையவில்லை என்றால் தங்கையின் மகிழ்ச்சியையும் கெடுப்பானேன்?" என்று வெளிப்படையாகக் கேட்டான்.

அவளும் சுற்றி வளைக்கவில்லை. "நாங்கள் பட்டறிவு பெற்றவர்கள். அநுபவ அறிவு பட வைத்தது உங்கள் குடும்பம் வசீகரன். அதனால். முள்ளைக் கண்ட வாழை இலையாக விலகிப் போகிறோம் விட்டுவிடுங்கள்." என்றாள் அவளும் வெளிப்படையாகவே.

“விட்டுவிடுவதற்கும் இப்போது கஷ்டமாக இருந்தாலும். பின்னாலே நல்லது என்பதற்கும்  இது என்ன சிகரட் பழக்கமா. குடியா? உண்மையாகச் சொல்லுங்கள்.. என்னை விட்டு விட்டதால். உங்கள் தங்கை என்ன  உல்லாசத்தின் உச்சியிலா  பவனி வருகிறாள்?” என்று ஆத்திரத்துடன் கேட்டான் அவன்.

இல்லைதான் பகலெல்லாம் வேறு வேலைகளில் மனதைச் செலுத்தி சமாளிப்பவள். இரவில் ஓசையற்றுக் கண்ணீர் விடுவது அதே அறையில் படுக்கும் மதிவதனி அறியாதது அல்ல.

ஆனால். காலம் எத்தனையோ மனப் புண்களை ஆற்றி விடும் வல்லமை படைத்தது. தங்கை தேறி விடுவாள். அவளைப் போல. உயிரையே வெறுக்கும் அளவுக்குப் போகாமலே!

“இல்லைதான். ஆனால் தேறிவிடுவாள்.  மீள முடியாமல் மாட்டிக் கொள்வதற்கு  இது மேல்.” என்றாள் தமக்கை.

செய்வதறியாத சலிப்புடன் அவளைப் பார்த்தான் வசீகரன்.

ஒரு நல்ல விஷயம்! இடையூறுகள் இல்லாமல் நடப்பது எதுவும் இல்லை. சஞ்சலங்கள்  சங்கடங்கள்  தடைகள் எத்தனையோ வரும். உட்கார்ந்திருந்து. கலந்து  பேசி. மீள்வதைப் பற்றி ஆலோசியாமல். இதென்ன வறட்டுத்தனமாய் வேண்டாம். வேண்டாம் என்பது?

சொல்லப் போனால். அவன்தான் இப்படியெல்லாம் யோசித்துத் தயங்க வேண்டியவன். அவனே துணிந்து வரும்போது

“உங்களிடம் இன்னும் ஒன்று சொல்ல வேண்டும்.” என்றாள் மதிவதனி.

வசீகரன்  பேசாமலே பார்க்கவும். “ஒஒரு வேளை. எங்களுக்குத் தந்திருக்கும் கடன் தொகை பற்றி உங்களுக்கு ஏதோனும் மாற்று மனப்பான்மை இருந்தால். மறைக்காமல் சொல்லி விடுங்கள். எங்கேனும் அதிக வட்டிக்கு வாங்கியேனும்  உங்கள் பணத்தைத் திருப்பித் தந்து விடுகிறோம்.” என்று அவள் கூற. ஆத்திரத்துடன் அவளை முறைத்துப் பார்த்தான்.

“வாழ்க்கை வேறு. தொழில் வேறு என்று. தொடக்கத்தில் இருந்து நான்  சொல்லி வந்திருப்பதாக ஞாபகம். சொன்னதைச் செய்யும் பழக்கம் உங்களிடம் இல்லாததால். நானும் அப்படி என்று எண்ணிவிட்டீர்கள் போல! மயூரி என்னவோ. அம்மா. அக்கா என்று உயிரை விடுகிறாளே. உங்கள் அம்மாவிடம் என்ன காரணம் சொல்லி  அதிக வட்டி கொடுத்தேனும்  கடன் இடத்தை மாற்றுவீர்கள்? அவர்களுக்கு ஒன்றுமே

தெரியாது என்றாளே! ஒன்றைச் சொல்லுமுன். சற்று யோசித்துதானே பேசுங்கள்.” என்றான் பேச்சில் கடுமை தெறிக்க.

தங்கைக்காக அம்மாவை மறந்து பேசியது தப்புதான்.

தன்னைத் தானே நொந்தபடி மதிவதனி பேசாதிருக்க. வசீகரனே மேலும் பேசினான்.

“கடைசித் தடவையாகச் சொல்லுகிறேன். என்னைப் பொறுத்த வரையில். வாழ்க்கையையும் தொழிலையும் சேர்த்துப் போட்டு நான் குழப்பிக் கொள்வது கிடையாது. தொழில் என்பது. உணர்ச்சி சம்பந்தப் பட்டது அல்ல. அது. மூளை வேலை. ரோஷத்தை வைத்துத் தொழில் நடத்த முடியாது. இன்னும்... . ஒரு வேளை. தொழில் தொடர்பாக நான் இங்கே வருவது. உங்கள் தங்கையைப் பாதிக்கும் என்று நீங்கள் கருதினால் அதைத் தவிர்ப்பதற்கு. உருப்படியான வேறு நடவடிக்கை எடுங்கள். இந்த மாதிரி. அரை வேக்காட்டுத்தனம் வேண்டாம்.” என்று. கடுமையாகவே தொடர்ந்து கூறி முடித்தான்.

அவளது பேச்சின் உள் நோக்கத்தை வசீகரன் முழுதாகக் கண்டுகொண்டு பேசிய விதத்தில் மதிவதனியின் தலை தாழ்ந்துவிட்டது. “சாரி.” என்று எழும்பாத குரலில் முணுமுணுத்தாள்.

எழுந்து நின்று அவளை ஒரு தரம் எரிச்சலாகப் பார்த்தான் அவன்.

செல்லச் செல்ல அவனுக்கு ஆத்திரம் அடங்குவதாக இல்லை!

அதிக வட்டிக்கு வாங்குவதாம்! அவன் பணத்தைக் கொடுப்பதாம்! மாதம் மூன்று வட்டிக்கும் நாலு வட்டிக்கும் வாங்கி முழுகிப் போவதற்கா? அப்படி என்ன யதார்த்தம் தெரியாத வேகம்? ரோஷம்? பாசம்!

மணமானவன் என்று தெரிந்தும். பணத்துக்காகத் திட்டம் போட்டு வலை வீசியவளுக்கு எங்கிருந்து வந்தது இதெல்லாம்? சட்டென ஏதோ உறைத்தது அவனுக்கு.

பணம் முக்கியம் என்றால். தங்கையை விட்டே. அவனைப் பிடிக்கலாமே! அதுவும் இப்போது இன்னமும் பணம் அதிகம் எனும்போது?

இதில் வெளியே தெரியாத வேறே ஏதும் இருக்கிறதா?

அண்ணனுக்கு ஃபோன் பண்ணி இது பற்றிக் கேட்கலாமா என்ற பரபரப்பு. உடனேயே அடங்கியது.

அண்ணி குணம் எப்போதும் மோசம்தான். மறுவீடு போனவள்.

மறுபடியும் இங்கே வரமாட்டேன் என்று ஆடி கோவையிலேயே சுகந்தனைத் தங்க வைத்தாள். அடுத்து இந்த மதிவதனி பிரச்சினையில். இந்த நாடே கூடாது என்று. அவளது சிங்கப்பூர் சொர்க்கத்துக்கு அவனை இழுத்துப் போனாள். அதன் பிறகு. வீட்டினர் உறவை அண்ணனே விரும்பாத அளவு மாற்றிவிட்டாள்.

அவன் அவ்வளவு மாறிப் போன பிறகு. அவனிடம் இப்போது என்ன பேசுவது? எதைக் கேட்பது? கேட்டு என்ன பயன்? அழைத்தால்கூடப் பேச விரும்பாமல் ஓரிரு வார்த்தைகளில் பேசி முடிக்கிறவனிடம். எப்படிக் கேட்பது?

ஆனாலும் இந்த மதிவதனி. மணமானவனோடு ஊட்டியில் தங்கும் வரை போனவள்தானே? சுகந்தன் மணமானவன் என்று அவளுக்குத் தெரியாது என்று மயூரி சொன்னது மெய்யாகவே இருந்தாலும். திருமண உறவு இல்லாமலே. அவனோடு தங்கப் போனாள்தானே? அவளுக்காக. யாரிடம் போய். என்ன கேட்பது? ஏன் கேட்பது?

ஆனால் மயூரி? அவளை விட அவனால் ஒரு போதும் முடியாது.

“உங்களுக்காக” கடையில் இப்போது மூச்சு விட அவகாசம் இல்லாத வேலை!

மாடியில். பெண்கள் ஆடைப் பகுதியின் திறப்பு விழாவுக்கு நாள் குறித்து. அந்த நாளும் நெருங்கி வரவே. பெண்கள் ஆடைகளைக் கொள்முதல் செய்வதும் விலை போட்டு அடுக்குவதும். இந்த அதிகப்படி வேலைகளுக்குப் புதிதாக ஆட்களைத் தேர்ந்தெடுப்பதும் அவர்களைப் பழக்குவதுமாக. மூன்று பெண்களுமே. ஓய்வின்றி உழைத்தனர்.

அதிக உடல் உழைப்பை பெண்கள் இருவரும் எடுத்துக்கொண்டு திறப்பு விழா அழைப்பு புதிய பெண்களைப் பழக்குவது போன்ற இலகு வேலைகளைத் தாயாருக்கு ஒதுக்கினர்.

இதற்கு நடுவே. சொந்த வாழ்வை எண்ணி வருந்திக் கொண்டிருப்பதற்கு. மயூரிக்கு நேரமிராது. எனவே. வருங்காலம் பற்றிய முயற்சிகளைத் திறப்பு விழாவுக்குப் பிறகே தொடங்கலாம் என்று வசீகரன் முடிவு செய்தான்.

இந்த நிலையில். கடைசி நாளன்று. அழைப்பில் ஏதாவது பெயர் விட்டுப் போயிருக்கிறதா என்று. அழைக்கப்பட்டவர்கள் “லிஸ்டை”. சகோதரிகள் இருவரும் உட்கார்ந்து. சரிபார்த்தனர். விடுபட்டிருந்தால். ஃபோனிலாவது அழைக்கலாமே?

தாயார் குறித்து வைத்திருந்த அழைப்பு அனுப்பப் பட்டவர்களின் பட்டியலை மயூரி வாசிக்க. யார் யாரை அழைப்பது என்று முதலில் தயாரித்திருந்த "லிஸ்டில் மதிவதனி "டிக்" செய்துகொண்டே வந்தாள்.

நட்பு வட்டாரத்தினர். பழகிய வாடிக்கையாளர்கள் பழைய புதிய டீலர்கள் விரிவாக்க வேலைகளைச் செய்து கொடுத்தவர்கள். அப்பாவுடைய நண்பர்கள் சபாபதி சார். கதிரேசன்

வாசித்துக்கொண்டே வந்த மயூரி. திடுமென. "அக்கா!" என்று திகைத்தாள்.

அதுவரை வாசித்து முடித்த பெயர்களின் முடிவில். பென்சிலால் குறித்துவிட்டு நிமிர்ந்து. "என்ன மயூரி?" என்று கேட்டாள் மூத்தவள்.

"இங்கே பார்!" என்று மயூரி காட்ட. இப்போது மதிவதனியும் திகைத்தாள்.

ஏனெனில் அதில் இருந்தது. வசீகரனுடைய பெற்றோரின் பெயர்கள்.

# அத்தியாயம் - 12

அனாவசியமாய் அன்னைக்கு வேதனை வேண்டாம் என்று. வசீகரன் யார் என்பதைத் தாயிடம் மறைத்ததன் விளைவு. பகவதி. அவனுடைய பெற்றோரையும் திறப்பு விழாவுக்கு அழைத்து வைத்திருந்தாள்.

கையிலிருந்த பட்டியலை. சந்தேகத்துக்கு ஒரு தரம் பார்த்துவிட்டு. “இதில் இல்லை மய்யூ. அந்தப் பெயர்கள் அம்மாவுக்கு எங்கிருந்து கிடைத்திருக்கும்?” என்று மதிவதனி கவலையுடன் கேட்டாள்.

“அம்மாவுக்குக் கிடைப்பதற்கு என்ன? அதுதான். சந்தேகம் தெளிகிறேன்.. “ஸ்பெல்லிங்” கேட்கிறேன் என்று “செல்”லும் கையுமாகவே இருந்தார்களே! “விருத்தி” அலுவலகத்திலேயே கூடக் கேட்டிருக்கலாம். .... “ என்றவள். முன்னவளின் கண்களில் இருந்த கேள்வியைக் கவனித்து. “இல்லைக்கா. வசீகரன் கொடுத்திருக்க மாட்டார். அவரிடம் அம்மா கேட்டிருந்தால் கூட. தானே நேரில் கொடுத்துவிடுவதாகச் சொல்லி. அழைப்பிதழை வாங்கிச் சென்றிருப்பாரே தவிர இப்படி அவர்களது முகவரியை நிச்சயமாகக் கொடுத்திருக்கவே மாட்டார்.” என்று. உறுதியாகக் கூறினாள்.

எப்படியோ அழைப்பு போய்விட்டது. இதற்கு மேல் என்ன செய்வது?

சற்று யோசித்துவிட்டு. “அந்தக் குடும்பத்தை நேரடியாகப் பார்த்திருக்கிறாயா?” என்று தமக்கையைக் கேட்டாள் மயூரி.

ஒரு வேளை அம்மா போல அவர்களும் அறியாமலே இருக்கலாமே. என்ற நப்பாசை அவளுக்கு! ஆனால். மதிவதனி அப்படி நினைக்கவில்லை.

“இல்லை. மயூரி ஆனால் வசீகரனைப் போல அவர்களும் அறிந்திருக்கலாமே! தந்தையும் தொழிலில் உள்ளவர்தானே?” என்று கவலைப்பட்டாள் பெரியவள்.

முதல் முறை. வசீகரனைப் பார்க்க “விருத்தி”க்குச் சென்றது. மயூரிக்கு நினைவு வந்தது. வசீகரன் மரியாதையோடு கூடவே சென்று வழியகுப்பி வைத்த மனிதர். அவனுடைய தந்தைதான் என்பது. அவள் பிறகு அறிந்த விவரம். கௌரவமான தோற்றம். மகனது அலுவலிடத்தைப் படம் பிடிப்பது போலச் சுழன்ற பார்வையில் அவளும் பட்டிருப்பாள்தான் ஆனால் எந்த விதமான உணர்ச்சி

மாற்றமும் பார்வையில் வரவில்லை. அப்படியானால் அடையாளம் தெரியாது என்றுதானே. அர்த்தம்?

எடுத்துச் சொன்னால். அதில் ஆறுதல் அடைய. மதிவதனி மறுத்தாள். "அப்போது இப்போது கூட அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம் மயூரி. ஆனால் இங்கே வந்து. "பார்ட்டி" பேச்சில் ஏதாவது தூண்டித் துருவினால். கோவையும். என் பெயருமே விஷயத்தை அவர்களுக்கு வெட்ட வெளிச்சமாக்கி விடுமே! எல்லார் முன்னிலையிலும் ஏதாவது பேசினால்? உனக்கு அந்த மனிதர்களைத் தெரியாது. மய்யூ. அடுத்தவர் முன்னிலையில் அவமானப் படுத்துவது அவர்களுக்கு. ரொம்ப சாதாரணம்! அம்மாவால் தாங்க முடியாதே!" என்று தவித்தாள்.

அம்மாவால் தாங்க முடிகிறதோ. இல்லையோ? அந்த கவலையில். இவள் உடைவது நிச்சயம் என்று. மயூரிக்குத் தோன்றியது.

சற்று யோசித்துவிட்டு. "பயப்படாதேக்கா இதற்கு நான் ஏற்பாடு பண்ணுகிறேன்." என்று. செல்லில் வசீகரனைக் கூப்பிட்டாள்.

எடுத்ததுமே. "என்ன பிரச்சினை? சொல்லு." என்று அவன் கேட்ட விதத்தில். அவளுக்குக் கண்ணைக் கரித்தது.

ஏதோ பிரச்சினை இல்லாமல் அழைக்க மாட்டாள் என்று புரிந்து கேலி குத்தல் இளக்காரம் எதுவும் இல்லாமல் உதவிக்கு வரத் தயார் என்கிறான். இந்த மாதிரி மனிதன் அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லையே!

தன்னை அடக்கிக்கொண்டு. தாயார் அழைப்பு அனுப்பிய விவரத்தைச் சுருக்கமாகத் தெரிவித்தாள் அவள்.

"விழா அன்று எந்த விதமான ரசாபாசமும் கூடாது. வசீகரன். உங்கள் பெரியவர்கள் யாரும் வராமல். எப்படியாவது தடுத்து விடுகிறீர்களா?" என்று. தயக்கத்துடன் கேட்டுக் கொண்டாள்.

"பரவாயில்லை. இதற்காகவாவது என்னோடு பேசினாயே! அதுவே பெரிது. இது பற்றி. நீ கவலைப் படாதே.. உங்கள் கடைத் திறப்பு விழா அன்று. முக்கியமான உறவினர் வீட்டு திருமணத்துக்கும் போக வேண்டியிருக்கிறது. அதனால். திரும்பும்போது எட்டிப் பார்ப்பதாகத்தான் அம்மா. அப்பா பேசிக்கொண்டார்கள். அனேகமாக. அழைப்புக்காகப் பேருக்கு வந்து. உடனே கிளம்பி விடுவார்கள். உட்கார்ந்து. சாவகாசமாகத் தூண்டித் துருவ நேரமிராது. அதற்கு. நான் இடமும் கொடுக்க மாட்டேன். சரிதானே? இவ்வளவுக்கு என்னை நம்ப

முடியும்தானே? சந்தேகம் இல்லையே?” என்று  இப்போது கேலிக் குரலில் கேட்டான் வசீகரன்.

“ஏன் நம்ப மாட்டேன்?”

“என் சாதனைச் சக்தி மீது சந்தேகம் வந்திருக்குமோ என் திறமை மீது நம்பிக்கை குறைந்திருக்குமோ என்று. ஓர் எண்ணம்தான். முதல் சில முயற்சிகள் தோற்ற பின். மூன்று வாரங்களாக உன்னோடு பேசக் கூட இல்லாமல் ஒதுங்கிக் கிடக்கிறேனே. அதை வைத்து. இதிலும் தோற்றுவிடுவேனோ என்று. ஒருவேளை நீ ”

“வசி ப்ளீஸ்! “ என்றாள் மயூரி கெஞ்சுதலாக.

“அதற்குத்தானே. அதாவது ப்ளீஸ் பண்ணுவதைச் சொன்னேன். பொறுமையை இழுத்துப் பிடித்துக்கொண்டு  காத்திருக்கிறேன்! கூட உன் துணைதான் வேண்டும்.” என்றவன். அவள் பேசாதிருக்கவும். “இரண்டு முகம் திருப்பலில். எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போய்விடுகிறவனால் என்ன சாதிக்க முடியும். மயூரி? என்னை அப்படிப் பட்டவனாகவா. நினைத்தாய்? உரிய நேரத்துக்காக ஒதுங்கி இருக்கிறேன். திறப்பு விழாவை நல்லபடியாக நடத்துங்கள். அப்புறம் பார்ப்போம் வைக்கிறேன்.” என்று பேச்சை முடித்தான்.

“நோய் நாடி. நோய் முதல் நாடி” என்பார்கள். அவனோடு சந்திப்பை மயூரி தவிர்க்கிறாள் என்று உணர்ந்ததுமே. மூல காரணமான தமக்கையிடம் போய்ப் பேசியவன்  சும்மா இருக்கமாட்டான்தான்.

ஆனால். அவளது காரணங்கள் அப்படியே இருக்கின்றனவே! அதை மீறி. யாரால் என்ன செய்ய முடியும்?

ஆயினும். நிராசையை மீறிக்கொண்டு. உள்ளூர ஒரு நம்பிக்கை பரவுவதை. மயூரியால் உணர முடிந்தது.

ஆனால். எப்படி. என்ன என்று குழம்பிக் கொண்டிருக்க நேரமின்றி. நல்லவேளையாக. அவள் முழு மூச்சாகத் திறப்புவிழா வேலைகளில் ஈடுபட நேர்ந்தது.

வீட்டின் மூன்று பெண்களும் அதே நினைவாக உழைத்ததன் பலனாகத் திறப்புவிழாவும் வெகு சிறப்பாகவே நடந்தேறிற்று.

ஒரு சம்பிரதாயமாக மட்டுமின்றி. விரும்பியே பலரும் உடைகளை வாங்கிப் போயினர்.

“சும்மாப் பேருக்கு ஓர் உள்பாவாடை மட்டும் வாங்கிப் போக வந்தால். பர்சையே காலி பண்ண வைத்து விட்டீர்களே!” என்பது

போலப் பேச்சு. நிறையக் காதில் விழுந்து. மூவரையும் மகிழ வைத்தது.

திறப்பு விழாப் பரிசு என்று வந்தோருக்கெல்லாம். பொட்டுப் பாக்கெட். ஹேர்பாண்ட். அலங்கார க்ளிப்புகள் என்று. ஏதாவது கொடுத்தது. அனைவருக்குமே மகிழ்ச்சியை அளித்தது.

“இன்னும் நிறையப் பணம் எடுத்துக்கொண்டு வந்து. சாவகாசமாகப் பார்த்து வாங்க வருகிறோம்.” என்று விடைபெற்றவர்கள் நிறையப் பேர்.

மொத்தத்தில் பட்ட சிரமத்துக்கும். பார்த்துப் பார்த்து வாங்கி வைத்ததற்கும். நல்ல பதில் கிடைத்திருந்தது.

விழாவுக்கு வந்த கூட்டமெல்லாம் கலைந்து சென்றுவிட்டிருந்தது.

கடையில் பணி புரிகிற பெண்கள் எல்லோருக்கும் விருந்துச் சாப்பாடு ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். உணவு இடைவேளை நேரம் என்பதால். அவர்களை மாடிக்குச் சாப்பிட அனுப்பிவிட்டு. அம்மாவும் மகள்களுமாக. இறுக்கம் தளர்ந்து அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

“கதிரேசன் அண்ணனுக்குக் கண்ணீரே வந்துவிட்டது. மகேசு ஆசைப் பட்டதை  நடத்திக் காட்டி விட்டீர்கள் என்று ரொம்ப சந்தோஷப்பட்டார். ... “ என்று சற்றே தழுதழுத்த குரலில் பகவதி கூற. “என்னிடமும் அங்கிள்  அது போலச் சொன்னாரம்மா! ஒருவரது நினைவுக்கு மரியாதை என்றால். இது போலச் செயலில் காட்டுவதுதான்.. இதையே. தொடர்ந்து நடத்த வேண்டும் என்றாரம்மா.” என்றாள். தாயின் தோளில் சாய்ந்து அமர்ந்திருந்த மதிவதனி.

பாதி கவனத்தை வெளியே வைத்திருந்த மயூரி. சட்டென நிமிர்ந்து. “அக்கா!” என்று அழைத்துக் கண்ணால். வெளியே காட்டினாள்.

வசீகரனும். அவனுடைய பெற்றோரும் வருவது கண்ணாடிக் கதவின் வழியே நன்றாகத் தெரிந்தது.

மகள்களின் பார்வையைத் தொடர்ந்து வெளியே நோக்கிய பகவதி. வசீகரனைக் கண்டதும் முகம் மலர்ந்தாள். “அடெடே! தம்பி அம்மா. அப்பாவைக் கூட்டிக்கொண்டே வந்திருக்கிறாரே! நான் சும்மா ஓர் அழைப்பை அனுப்பியிருந்தேன்... “ என்றவாறு எழுந்து. உள்ளே வந்தவர்களை. “வாருங்கள். வாருங்கள். குடும்பமாக வந்திருப்பது. ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. “ என்று. புன்னகையோடு வரவேற்றாள்.

பெண்களும்  முகத்தில் புன்னகை பூசிக் கரம் குவித்தனர்.

கோகிலாவும் முகம் மலர்ந்து. “அம்மாவும் மகள்களுமாக. அயராது உழைத்து. சாதித்திருப்பதாகச் சொன்னான். அதுதான் பார்க்க வேண்டும் என்று வந்தேன். இவர்கள்தான் மகள்களா? இரண்டு ரதிகளைப் பெற்று வைத்திருக்கிறீர்கள்!” என்று கூறவும் பகவதிக்குப் பெருமை பிய்த்துக்கொண்டு போயிற்று.

“உட்காருங்கள். குளிர்ச்சியாகப் பழச்சாறு குடிக்கிறீர்களா? நீங்களும் உட்காருங்கள் சார் தம்பி நீங்களும் சொல்லுங்கள் அன்னாசியா சாத்துக்குடியா?” என்று வினவினாள்.

“அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்மா இப்போதுதான் கல்யாண வீட்டில் சாப்பிட்டு வந்தோம்
” என்றவாறு கடையைப் பார்வையிட்ட கோகிலா. தங்களைத் தவிர வேறு வெளி மனிதர்கள் இல்லை என்பதைக் கண்டு. “அடடா! ரொம்பவும் தாமதமாக வந்துவிட்டோம் போலத் தெரிகிறதே! பார் வசி. ஏதோ சொல்லி. அங்கே சாப்பிடாமல் கிளம்பி. இங்கே சரியான நேரத்துக்கே வந்திருக்கலாம். சொன்னால் கேளாமல் சாப்பிட இழுத்துப் போனாயே! இப்போது. இவர்களது உணவு நேரத்தைக் கெடுக்கிறோம். “ என்று. மகனிடம் குறைப்பட்டாள்.

தன்னிடம் சொன்னதற்காகப் பெற்றவர்களைச் சாப்பிட அழைத்துப் போய்த் தாமதம் பண்ணிருக்கிறான்! அன்று கல்யாண வீட்டில் அந்தப் புதுப் பணக்காரக் குடும்பத்தை இடை வழியில் நிறுத்தி அவளுக்கு உதவி செய்ததுபோல!

மயூரி நன்றியோடு பார்க்கையில். காலரைத் தூக்கிவிட்டுச் சிரித்தான். வசீகரன்.

ஒரு கணம் மெய்மறந்து நோக்கிவிட்டுத் தலையைத் திருப்பிக் கொண்டாள் அவள். ஆனால் அங்கிருந்து நகரவும் அவளுக்கு மனமில்லை.

கூடவே. மதிவதனி பற்றிய எந்த விதமான ஐயமும் அந்தப் பெரியவர்களுக்கு இல்லை என்பது தெளிவாக அது வேறு நிம்மதியாக இருந்தது.

மதிவதனியும் அதையே உணர்ந்தவள் போல. ஒருவாறு இயல்புக்குத் திரும்பி. “அப்படியெல்லாம் இல்லை ஆன்ட்டி. இன்றையப் பரபரப்பில். எங்கள் மூவருக்குமே சாப்பாடு இறங்காது. இப்போது கூடச் சும்மாதானே உட்கார்ந்திருந்தோம்! வாருங்கள். உங்களுக்குச் சுற்றிக் காட்டுகிறேன். “ என்று. கோகிலாவை அழைத்துப் போனாள்.

“வெறும் பழச்சாறுதானே. சார் தெரிந்தவர்கள் வீட்டில். சொல்லித்

தயாரித்தது  தண்ணீருக்குப் பதிலாகக் குடிக்கலாமே.” என்று கூறியவாறு. அன்றைய தினத்துக்காக வைக்கப்பட்டிருந்த கூலரை நோக்கிப் போனாள் மயூரி.

“நானும் வருகிறேன்  ஒரே தடவையாக எடுத்து வந்துவிடலாம்.” என்று வசீகரன் அவளைத் தொடர  சந்தானம். பகவதியிடம் பேச்சுக் கொடுத்தார்.

மாடிப் பகுதியைப் பார்க்கச் சென்ற கோகிலா அங்கே கடைப் பெண்கள் சந்தோஷமாக விருந்து உண்பதைப் பார்த்ததும். அங்கே நின்று. அவர்களைச் சங்கடப் படுத்த வேண்டாம் என்று. “இதில் நான் என்னம்மா பார்க்கப் போகிறேன். மருமகள் வந்த பிறகு வருகிறேன்.” என்று. உடனேயே மதிவதனியோடு இறங்கிவந்துவிட்டாள்.

“அக்கா அக்கா என்று உன்னிடம் ஆசையாகப் பேசுகிறார்களே. கூடக் கொஞ்ச நேரம் நின்றால். பாதிச் சாப்பாட்டில் கையைக் கழுவிக்கொண்டு வந்துவிடுவார்கள் என்று தோன்றியது!” என்று அவள் வியக்க. “எங்கள் அதிருஷ்டம். எல்லோரும் நல்ல பெண்களாகக் கிடைத்தார்கள்.” என்று. தன்னடக்கத்தோடு காரணம் சொன்னாள் சின்னவள்.

புன்னகையோடு கீழே வந்த கோகிலாவுக்கும். சிறு வற்புறுத்தலுடன் குளிர் பானம் அளிக்கப்பட்டது. பழரசத்தை அருந்தியபடி  சில நிமிஷங்கள் மகிழ்ச்சியோடு உரையாடிவிட்டு. வசீகரன் குடும்பம் கிளம்பியது.

அதுவரை. எல்லாமே நன்றாகத்தான் இருந்தது.

கடையின் திறப்பு விழாப் பரிசு அடங்கிய தங்க நிறச் சுருக்குப் பையை எடுத்து வந்து. கோகிலாவிடம் நீட்டிய மதிவதனி திடுமென முகம் சிவக்க “போபோங்கள்  உடனே போய்விடுங்கள். இங்கே வர உங்களுக்கு என்ன தைரியம்?” என்று. கண்களில் கனலுடன் ஆவேசமாகக் கூச்சலிட்டாள்.

ஏதோ பேசியபடி நின்ற வசீகரன் மயூரி. விடை பெற்றுக் கொண்டிருந்த சந்தானம் தம்பதி. வழியனுப்பத் தயாராக நின்ற பகவதி… .எல்லோருமே கண நேரம் ஒன்றும் புரியாமல். திகைத்துப் போயினர்.

மதிவதனியின் பார்வை வாயில் புறமாக நோக்குவதைக் கவனித்து. திரும்பிப்  பின்னே பார்த்தால் அங்கே வசீகரனின் சாயலில் ஒருவன் நின்றான்.

அவனைக் கண்டதும். ஒரு கணம் பிரமித்தபோதும். வசீகரன்

உடனேயே சமாளித்து. “அண்ணா!” என்று இரு கை நீட்டி வரவேற்றபடி. அவனிடம் சென்றான்.

அண்ணன் என்றால். இவனா. சுகந்தன்? சந்தேகத்துக்கு இடமே இல்லாது. “இந்தியாவுக்கு எப்போது வந்தாய். சுகன்? என்ன இப்படி இருக்கிறாய்? “ என்று கேட்டபடி. பெற்றோர் இருவரும் அவனை நெருங்கினர்.

அண்ணன் தம்பிக்குள் வயது வேறுபாடு அதிகம் போலும் என்று மயூரிக்குத் தோன்றியது.

வசீகரனின் நீட்டிய கையை லேசாகப் பற்றியபோதும் அவனது அழைப்பு. பெற்றோரின் கேள்வி  மதிவதனி பேச்சு எதையுமே. சுகந்தன் பொருட்படுத்தவில்லை.

மாறாகத் தாய். தந்தையைப் பார்த்து. “நீங்கள் இருவரும் இங்கே வந்து. என்ன செய்கிறீர்கள்? வசி நீயும்தான்! உண்மையில் அவள் மேல் தப்பே கிடையாது. ஒரு தப்புமே கிடையாது. என்னால் அவள் ஏற்கனவே பட்ட துன்பம் அவமானம் போதாதா? அவள் அனுபவித்த வேதனை போதாது என்று. இத்தனை ஆண்டுகள் கழித்தும். இன்னமும் நீங்கள் வேறு கஷ்டப்படுத்தாதீர்கள். தயவுபண்ணி  எல்லோரும் இங்கிருந்து கிளம்பிப் போய்விடுங்கள்!” என்று தாபமும். தவிப்புமாக கிட்டத்தட்டக் கதறினான் எனலாம்!

எதுவும் புரியாத தோற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்த இரு தாய்மாரின் முகங்களும். அவரவர் உண்மையைப் புரிந்துகொண்ட விதத்தில். பெரும் மாறுதல் அடைந்தன.

“அண்ணா. நீ நினைப்பது போல. எதுவும் இல்லை     ” என்று வசீகரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே  கோகிலா ஆத்திரத்துடன் சின்ன மகனை விளித்து. “என்னடா வசி  இந்தப் பெண்ணாடா  அவள்? ஏண்டா இருந்திருந்து இவர்களுக்கா. நீ குறைந்த வட்டிக்குப் பணத்தைக் கொடுத்து. உதவி செய்தாய்?” என்று கோபமாகக் கூறும்போதே. “அக்கா. நீ இங்கே நிற்கவேண்டாம். வா! “ என்று. முகத்தைக் கைகளால் மூடி அழுத  மதிவதனியைப் பாதுகாப்பவள் போல அணைத்தபடி. அலுவல் அறைக்குள் மயூரி அழைத்துப் போனாள்.

செல்லும்போதே. “வேண்டாம்மா. அவள் மேல் தப்புக் கிடையாது. “ என்று சுகந்தன் சொல்வது காதில் விழுந்தபோதும் மயூரி தயங்கி நிற்கவில்லை.

ஆனால். அலுவல் அறைக்குள் சென்று கதவைச் சாத்தும்போது

முகத்தில் அடித்தாற்போல. ஓங்கி அறைந்து பூட்டவுமில்லை.

வெளியே தமையனிடம். "அண்ணா. எனக்கு இந்த விவரம் சொல்லு. ஆறு ஆண்டுகளுக்கு முன் நீங்கள் பழகும்போது நீ மணமானவன் என்று மதிவதனிக்குத் தெரியுமா. தெரியாதா?" என்று வசீகரன் விசாரித்தான்.

தெரியாது என்று சுகந்தன் கூறவும். "என்னடா தம்பி. சொல்லுகிறாய்? நீ யாரென்று தெரியாமல் இருக்குமா? தெரியாமலேயா " என்ற தாயை மேலே பேச விடாமல். "ப்ளீஸ்மா. அவசரப்பட்டு எதையும் சொல்லாமல் இந்த ஒரு தடவை நான் என்ன சொல்கிறேன் என்று கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்களேன். " என்று குறுக்கே பேசித் தடுத்தான்.

"ஆனாலும்..." என்று அப்போதும் ஏதோ சொல்லப்போன மனைவியை. "பொறு." என்று சந்தானம் அடக்கினார்.

"ஏதோ இருப்பதால்தானே. சுகன் அதைச் சொல்லத் துடிக்கிறான்? ஆறு ஆண்டுகளுக்கு முன்பு மகனுக்கு நாம் அந்த வாய்ப்புக் கொடுக்கவில்லையோ என்று. ஓரொரு சமயம். நான் யோசித்திருக்கிறேன். ஆனால். அப்போது. மறுக்க முடியாத சான்றுகளோடு வந்த மருமகள். அவளைச் சேர்ந்தவர்களின் ஆவேசம். நம் பிள்ளை இப்படியா என்ற குன்றல் இரண்டுமாக. இவனிடம் என்ன என்று கேட்கக் கூடத் தோன்றாமல் போயிற்று. நியாயமான கோபம் என்று. அவர்கள் கேட்டதற்கு எல்லாம் தலையையும் ஆட்டி வைத்தோம். விளைவு என்ன ஆயிற்று? கிட்டத்தட்ட மகனை இழந்து வாழ்ந்தோம். இப்போது ரொம்பவே காலம் கடந்திருக்கலாம். ஆனாலும். "பெட்டர் லேட். தேன் நெவர்" என்பார்கள். சொல்லுப்பா. சொல்வதை. உட்கார்ந்து சொல்லு. அம்மா. நீங்களும் உட்கார்ந்து கேளுங்கள். உங்கள் பெண்ணும் தற்கொலைக்கு முயன்று. ரொம்பக் கஷ்டப்பட்டுக் காப்பாற்றினீர்கள் என்று அறிந்தபோது. குறைந்தபட்சமாய். அவளிடம் ஏதோ நியாயம் இருப்பதாக. எனக்குத் தோன்றத்தான் செய்தது. ஆனாலும் சரி. இப்போது நீ சொல்லு." என்றார் தன் மூத்த மகனிடம்.

சற்றே மூச்சு வாங்குவது போலத் தோன்றியபோதும். உணர்ச்சியற்ற பார்வையால் நோக்கி. "அவர் தொண்டை காய்ந்திருப்பது போலத் தோன்றுகிறது. ஏதாவது குடித்துவிட்டுச் சொல்லட்டும். " என்று கூலரை நோக்கித் திரும்பினாள் பகவதி.

அதற்குள் கூலரில் இருந்து ஒரு பாட்டிலை எடுத்து வந்துவிட்ட வசீகரன். "இந்தாண்ணா. முதலில் இதைக் குடி. பிறகு பேசு. " என்று

அண்ணனிடம் கொடுத்தான்.

பகவதியிடமிருந்து பார்வையை அகற்றாமலே. பானத்தை ஒரே மூச்சில் குடித்து முடித்துவிட்டு. “உங்கள் பெண் என்றால். நீங்கள்தான் மதிவதனியுடைய அம்...இல்லை. சித்தியா?” என்று கேட்டான் சுகந்தன்.

“சித்தியா?” என்றாள் கோகிலா ஆச்சரியத்தோடு.

“ஆஆமாம்.” என்று. சோர்வுடன் அமர்ந்தாள் பகவதி.

“ஆனால் அண்ணா... “ என்று தொடங்கிய தம்பியை அலட்சியப்படுத்தி. “என்னதான் சித்தி என்றாலும். தாயின் இடத்துக்கு வந்த உங்களுக்கு. அந்தக் கடமைகளும் உண்டுதானே? அதை விட்டு அந்த வீட்டில் அவளை எப்படி வளர விட்டீர்கள்?” என்று ஆத்திரத்துடன் கேட்டான் சுகந்தன்.

எல்லோருமே வியப்புடன் நோக்க. “அம்மாவை ஒன்றும் சொல்லக் கூடாது என்று சொல்லு. மயூரி!” என்று. மதிவதனியின் கண்ணீர்க் குரல். மொணமொணவென்று கேட்டது.

“மதியைப் பெற்றவர்களுடைய தாய் என்கிற உரிமையோடு. அவர்கள் அழைத்துப் போகும்போது. அவள் அப்பாவாலேயே தடுக்க இயலவில்லையே! நான் என்ன செய்ய முடியும்?” என்ற பகவதியின் கண்களிலும் நீர் கோத்திருந்தது.

“ஓ!” என்றவனின் கோபம் காற்றுப் போன பலூனாய் மறைய. தொப்பென்று அமர்ந்தான் அவன்.

ஒரு பெருமூச்சுடன். “எல்லோரும் தன்னைக் கைவிட்டுவிட்டதாக. தனக்கு யாருமே இல்லை என்ற தவிப்பு வதனிக்கு.” என்று தரையை வெறித்தபடி கூறியவன். நிமிர்ந்து பெற்றவர்களைப் பார்த்தான்.

“என் தப்பை
தப்புதான்.. அதை உங்களிடம் எப்படி விளக்குவது. எப்படி மன்னிப்புக் கேட்பது என்றே எனக்குத் தெரியவில்லை. அம்மா. நீங்கள் குடும்பத்தை மகிழ்ச்சியோடு இருக்க வைப்பதில். குடும்பத்தினரைத் திருப்தியோடு வாழ வைப்பதில் பிஹெச்டி வாங்கியவர்கள். ஆனால். என் இருபத்தியிரண்டாவது வயதிலேயே. அழகான பெண் என்று. எனக்குக் கல்யாணம் செய்து வைத்தீர்களே. அவள். குடும்பத்தைச் சிதறடிப்பதில். கூட இருப்பவனை உயிரையே வெறுக்க வைப்பதில் பிஹெச்டி! ஒரு பேயை மணந்து. அவளோடு நான் படும் பாடு. உங்களுக்குத் தெரிய வேண்டாம் என்றுதான். நான் அவள் குடும்பத்தோடு போய்விட்ட மாதிரி அங்கே. கோயம்புத்தூரிலேயே இருந்தேன். அப்போதும். அவள் ஆடிய ஆட்டம்! மனது வெறுத்து.

வாழ்வையே வெறுத்து. வீட்டை விட்டு வெளியிலேயே அலைந்தபோதுதான். மதிவதனியைப் பார்த்தேன். அம்மா. நீங்களும் பார்த்தீர்கள் அல்லவா? அவள் மதிவதனியேதானே? அவள் முகத்தைப் பார்த்தாலே. நிலவொளியில் நிற்பது போல. மனம் குளிருமே!" என்றபோது. சுகந்தனின் முகத்தில் ஒரு பரவசம் தெரிந்தது.

காதோரத்து நரையையும் மீறிக்கொண்டு. முகமும் இளமையாய்த் தோற்ற தாயார் ஆச்சரியத்துடன் பார்த்தாள்..

"

பத்து நிமிஷம் அவளோடு பேசியிருந்தாலே. மறுநாள் வரை உயிரோடு இருக்கும் தென்பு வரும். தப்புப் பண்ணுகிறேன் என்று தெரியும். ஆனால். அவளைப் பாராதிருக்க முடியவில்லை. தெரிந்தவர் யாரும் பார்த்து விடுவார்களோ என்று பயந்து பயந்து. முக்கியமாக எப்போதும் ஊர் சுற்றும் என் மனைவி. அந்தப் பிசாசு பார்த்து விடக் கூடாதே என்ற பயத்தில். காரைக்கூட எங்காவது. தள்ளி நிறுத்திவிட்டு. அவள் தனியே உட்கார்ந்து பொழுதை நெட்டித் தள்ளும் பூங்காவுக்குப் போவேன்.

"அவளுக்கும். வேறுவிதமான தவிப்பு. அந்தப் பாட்டியின் பேச்சினால். தான் உயிர் வாழ்வதே மற்றவர்களுக்குப் பாரம் என்ற உணர்வில். குன்றி இருந்தாள். அவள். பதினெட்டு வயது பச்சை மண். பூ. செடி. கொடி. பறவைகள் எல்லாமே. அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். ஊட்டியை எப்படி ரசிப்பாள் என்று எண்ணினேன்.

"பயந்து பயந்து ஓடாமல். சின்னப் பிள்ளைகள் போல. சுதந்திரமாக ஊட்டியில் சுற்றினோம். ஆனால். தப்பு எண்ணமே அவளைத் தொட்டுக் கொண்டிருந்தால். சுகமாக இருக்குமே என்று எனக்குத் தோன்றத்தான் செய்ததுப்பா! பொய் சொல்ல மாட்டேன். ஆனால். அதற்கு மேல் இல்லை. அவளோ குழந்தை! அவளது நரகத்திலிருந்து மீட்டுவிட மாட்டேனா என்ற ஏக்கம்தான் அவளுக்கு. தனித்தனி அறைகள்தான். வாழ்க்கை முழுதுக்கும். சொர்க்கவாசம் போன்ற இந்த இரண்டு நாட்கள் போதும் என்று. திரும்பி வந்ததும். உண்மை சொல்லி விலகி விடவே நினைத்தேன்.

"ஆனால். அதற்குள் எப்படியோ மோப்பம் பிடித்து. அங்கே வந்து. அவளையும் என்னையும் எவ்வளவு முடியுமோ. அவ்வளவு கேவலப்படுத்தி மனைவி என்று அவள் சொன்னதும். மதியின் முகம் மாறிய விதம் எனக்கு மறக்குமா? நிர்வாகியிடம் அவளைக் கோவைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தது தவிர. என்னால் ஒன்றும் பேசக் கூட முடியாத நிலை. இதைப் பயன்படுத்தி சிங்கப்பூர் வாழ்க்கைக்கு இழுத்துப்

போனாள்.

"மதிவதனி தற்கொலைக்கு முயன்றாள் என்று தெரிந்த பிறகு. இந்த மண்ணில் இருக்க. நானுமே அஞ்சிவிட்டேன். இன்னொரு தரம் அவள் கண்ணில் பட்டு விடக் கூடாது. எங்கே போனால் என்ன என்பதுதான் எனக்கு.

இப்போது. என் மாஜி மனைவி அந்த நீலிமாவுக்கு வேறு ஒருவனுடன் காதலாம். உலக அளவில் பணக்காரனாம். அவனை மணக்கப் போகிறாளாம். பாவம். அவன்!

"விவாக ரத்து கேட்டாள். எனக்கு விடுதலை என்றால் விடுவேனா? ஆறு மாதங்களாக டைவர்ஸ்க்காக இங்கே வந்து வந்து போகிறேன். இன்றுதான் கடைசிக் கையெழுத்தாயிற்று. விடுதலை கிடைத்தது." என்று நிறுத்தினான் சுகந்தன்.

அதிர்ந்து. "விவாகரத்தா? சொல்லவே இல்லையேடா!" என்றாள் அன்னை. "எதற்கம்மா சொல்லுவது? சொன்னால். ஆயிரம் காலத்துப் பயிர்.. பொறுத்துப் போ என்பீர்கள் அல்லது. இன்னொரு முயற்சி செய்யச் சொல்வீர்கள். இதன் காரணம். மறுபடியும் வதனியோ என்று சந்தேகப் படுவீர்கள். அவளைத் தேடிப்போய். விலகிவிடு என்று. நீங்கள் கேட்பதும் சாத்தியமே.

"இங்கே திரும்பி வந்தால். அந்த அறியாப் பெண்ணின் வாழ்வு மேலும் கெடுமோ என்ற பயம் எனக்கு. எந்த விதத்திலும் அவள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்றுதான். உங்களைக் கூடப் பாராமல். நான் அப்படியே திரும்பிப் போய்க் கொண்டிருந்தேன். "ஆனால். இன்று கடைசிக் கையெழுத்தும் போட்டு. எல்லாமே முடிந்துவிட்டது. பயங்கர விடுதலை உணர்வு! உங்களைப் பார்த்து. விவரம் சொல்லிவிட்டு. விமான நிலையத்துக்குப் போவதாகத்தான் வந்தேன். நீங்கள். இப்படி ஒரு திறப்பு விழாவுக்கு வந்திருப்பதாக வீட்டில் சொல்லவும் இங்கே வந்தேன். வந்தால். மதிவதனி! அவள் பக்கத்தில் உங்களைப் பார்த்ததும். அப்படியே மிரண்டு போனேன். அந்தப் பிசாசு. விவாகரத்தோடு திருப்திப் படாமல். இங்கே உங்களை வதனிக்கு எதிராக எப்படியோ கிளப்பி விட்டுவிட்டாளோ என்று நடுநடுங்கிவிட்டேன்! நிதானமாக யோசிக்கக் கூடத் தோன்றவில்லை!

"சரிம்மா. இப்போது. உங்கள் இருவரையும் பார்த்துவிட்டேன். இன்னும் இரண்டு மணி நேரத்தில். விமான நிலையத்தில் "செக்கின்" பண்ண வேண்டும். கிளம்பட்டுமா? வசி வருகிறேன்ப்பா." என்று

எழுந்தவன். சிலையாக அமர்ந்திருந்த பகவதியைப் பார்த்தான். “சித்தியா என்று அம்மா அதிசயமாகக் கேட்டார்கள். அப்படியானால். நீங்கள் அவளை நன்றாகத்தான் நடத்திக் கொண்டிருக்க வேண்டும். அவளது வாழ்வில் மிகப் பெரிய துன்பத்தைக் கொடுத்த என்னை அவளால் முடியுமானால். மன்னித்து விடச் சொல்லுங்கள். வருகிறேன் “ என்று கரம் குவித்தான்.

தாய் தந்தையை ஒரு தரம் பார்த்துவிட்டு. “அண்ணா. பொறு.” என்று வசீகரன் தமையனைத் தடுத்தான். “அண்ணா. உனக்கு விவாக ரத்தே ஆகிவிட்டதால். சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் சம்மதமானால். நீ. மதிவதனியையயே மணக்கலாமே. யோசித்துப் பார்.” என்று யோசனை சொன்னான்.

“என்னடா சொல்லுகிறாய்? வதனிக்கு இதுவரை திருமணமே ஆகவில்லையா? நிஜமாகவா?” என்று. சுகந்தன் பகவதியைக் கேள்வியாய் நோக்கினான்.

“எப்படிச் செய்வது. தம்பி? அந்தப் பேச்சைத்தான் அவள் எடுக்க விடுவதே இல்லையே. கடைசிவரை அவள் அப்பாவின் பெரிய குறையே. அதுதானே?” என்றாள் பகவதி.

“ஐயோ. அந்தச் சில நாட்களால் அவளது வாழ்வே அழிந்துவிட்டதா?”“ என்று கலங்கினான் சுகந்தன்.

இப்போது பகவதியைப் பார்த்தான் வசீகரன். பிறகு. அண்ணனின் தோளைப் பற்றி அழுத்தி. “அழிவானேன்? நான் சொன்னதை. நீ கவனிக்கவில்லையா? நல்லபடியாகத் தொடருங்களேன்! “ என்றான் புன்னகையோடு.

“ஆனால். வதனி என் பிழையை மன்னிப்பாளா? மன்னித்து. என்னை ஏற்பாளா?” என்று சுகந்தன் கலக்கத்துடன் கேட்டான்.

இப்போது வசீகரனின் முறுவல் நன்றாகவே விரிந்தது. “அதை என்னிடம் கேட்டால்? கேட்க வேண்டிய இடத்தில் கேள்.” என்று கூறியவாறே அவனை இழுத்துச் சென்று. அலுவல் அறைக் கதவை விரியத் திறந்தான்.

“பேசியது எல்லாம் நன்றாகவே காதில் விழுந்திருக்கும். நீ வெளியே வா. அவர்கள் இருவரும் பேசி. நல்ல முடிவை எடுக்கட்டும்.” என்று மயூரியை வெளியே அழைத்து வந்தான்.. “போண்ணா போய் அண்ணியிடம் கேள்.” என்று. அவனை உள்ளே தள்ளிக் கதவைச் சாத்தினான்.

சற்று நேரம். எல்லோரும். இறுகிப்போய் அமர்ந்திருந்தார்கள்.

திடுமென. "மய்யூ என்று குரல் நடுங்க அழைத்தாள் பகவதி.

தாயின் இறுகக் கோத்திருந்த கைகள் நடுங்குவதைக் கண்டதும். ஓடிப்போய். அவள் அருகே அமர்ந்து. "என்னம்மா?" என்று கைகளைப் பிரித்து வருடிக் கொடுத்தாள். "மதி ஒரு மாதிரி. பிடிவாதக்காரி ஆயிற்றே! மாட்டேன் என்று விடுவாளோடா?" என்று கலக்கத்துடன் கேட்டாள். அன்னை.

"அப்படி உளறினால். விட்டுவிடுவோமாம்மா? இதோ. மாப்பிள்ளை வீட்டார். அங்கிள. ஆன்ட்டி. அருமைத் தம்பி எல்லோரும் சரி சொல்லி விட்டார்கள். பெண் வீட்டில். நீங்களும் நானும். ஓகே பண்ணிவிட்டோம். அப்புறம். அக்கா மட்டும் என்ன மறுத்துப் பேசுவது?" என்றவள். தன் செல்லை எடுத்தாள்.

அழைத்தது. தமக்கையைத்தான். "ஏய் அக்கா. உனக்கென்ன. எங்கள் எல்லாரையும் கதி கலங்க வைத்து. இதயநோயாளி ஆக்க எண்ணமா? அதிக நேரம். அம்மா தாங்க மாட்டார்கள். சீக்கிரமாக வந்து. "சஸ்பென்சை" உடை!" என்று அதட்டினாள்.

எதிர் முனையில் என்ன பதில் வந்ததோ? "கொஞ்சம் சத்தமாகத்தான் சொல்லேன். காதில் சரியாகக் கேட்கவில்லை." என்றவாறு. "ஸ்பீக்கரை" ஆன் செய்தாள்.

"ச்ச். போடீ என்றேன்!" என்று கதவைத் திறந்து வெளியே வந்து மதிவதனி சிரிக்க. கூடவே சுகந்தனும் வந்து முறுவலிக்க. எல்லோருமே முகம் மலர்ந்தார்கள்.

உணவு வேளை முடிந்து. கடை திறந்தார்கள். அது கூட்டம் வரும் நேரம் அல்ல. எனவே. கடைப் பெண்களைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு. வீட்டினர் எல்லோரும். அலுவல் அறையில் இருந்து பேசினர்.

"சின்னப் பிள்ளைகள் என்று பார்த்தால். நமக்குத் தெரியாமல் என்னவெல்லாம் செய்திருக்கிறார்கள்." என்று. இரு தாய்மாரும் அதிசயித்தனர்.

ஓரக் கண்ணால் சின்ன மகனைப் பார்த்துவிட்டு. ஒப்புதலாக சந்தானமும் முறுவலித்தார்.

"அப்பாடி! இனிமேல். நிம்மதியாக இவர்களது கல்யாண வேலைகளைப் பார்க்கலாம். மதிவதனி சுகந்தன்! சொல்லும்போது. கேட்க நன்றாக இருக்கிறதுதானே?" என்று சந்தோஷமாக் கூறினாள்.

கோகிலா.

“ரொம்ம்மப!” என்றாள் பகவதி.

திடுமென “உங்களுக்கு எப்போதுமே. அண்ணன்தான் உசத்தி! இல்லையாம்மா?” என்று வசீகரன் தாயிடம் கேட்டான்.

“ஏய், என்னடா அசட்டுப் பேச்சு. அது. எனக்கு இரண்டு பேரும் ஒன்றுதான். அவனுக்குப் பெண் கிடைத்திருக்கிறாள். அடுத்து. உனக்கு.!” என்று. நகை முகத்துடனேயே. தாயார் பதில் சொன்னாள்.

“சும்மாக் கதை! அண்ணனுக்கு என்றால் ஒன்று கெட்டாலும் இரண்டாவதாவும் ஒரு நல்ல பெண்ணைத் தேடித் திருமணம் செய்வீர்கள். என்னைப் பாருங்கள்! முயற்சியே இல்லாமல் தண்ணீர் தெளித்து விட்டு விட்டீர்களே!” என்று சோகமாகச் சொன்னான்.

மகன் முகம் மெய்யாகவே ஒரு மாதிரிதான் இருந்தது. “திடுமென இப்படிச் சொன்னால் என்னடா செய்வது?” என்று குழப்பத்துடன் கேட்டாள் கோகிலா. ”கொஞ்சம் பொறு அண்ணன் திருமணம் ஆனவுடன் ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்து உனக்கும் பண்ணி வைத்து விடுகிறேன்” என்று கூறினாள்.

“நல்லப் பெண்ணைப் பார்த்துக் கொண்டே நல்லப் பெண்ணாகப் பார்க்கிறேன் என்று கூறுகிறாயே ! கோகிலா?” என்று

சந்தானம் கூறவும். “பார்த்துக்…” என்று திகைப்புடன் திரும்பிப் பார்த்தவளின் முகம் பளிச்சென மலர்ந்தது.

நேரே எதிர்ப்புறமாக. மயூரிதான் அமர்ந்திருந்தாள்.

“எதிரே இருப்பவள்தானே? கட்டாயம் செய்துவிடுவோம். என்னடா சந்தோஷம்தானா?” என்று மகிழ்ச்சியோடு கோகிலா மகனைக் கேட்க. “என்னம்மா நீங்கள்? இதையெல்லாம் என்னிடம் கேட்க வேண்டுமா உங்கள் சொல்லை நான் தட்ட மாட்டேன்”

என்று வசீகரன் பதவிசாகச் சொல்ல. எல்லோரும் நகைத்தனர்.

சிரிப்பை அடக்கிக்கொண்டு வேறு புறம் பார்த்தாள் மயூரி.

“இரண்டு திருமணங்களையும் ஒன்றாகச் செய்வோமா?” என்று கோகிலா அவசரப்பட்டாள். “உங்களுக்குச் சம்மதம்தானே. சம்பந்தியம்மா? இரண்டு பெண்களையும் ஒரே வீட்டில் கொடுக்கிறோமே என்று. அதுபோலத் தடை ஒன்றும் இல்லைதானே?” என்று கேள்வியுடனேயே. பதிலையும் எடுத்துக் கொடுத்தாள்.

புரிந்துகொண்டு. “அப்படிச் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால்.

என் இரு மகள்களுக்கும். இதை விட உயர்வான புகுந்த வீடு எங்கே கிடைக்கும்? எனக்கு முழுச் சம்மதம். அம்மா.” என்றாள் பகவதி. லேசாகக் கரகரத்த குரலில்.

“சம்பந்தியம்மா என்று சொல்லுங்கள்!” என்றாள் கோகிலா உற்சாகத்துடன். “அல்லது அண்ணி என்றே கூப்பிடுங்களேன்!”

பகவதியின் பார்வை கடையை ஒருதரம் சுற்றி வருவதைக் கவனித்து. “இந்தக் கடையைக் கூட நாலு ஆட்களைப் போட்டுக்கொண்டு நீங்களே நேரில் பாருங்கள். தங்கச்சி. இரண்டு பெண்களையும் திருமணம் செய்து கொடுத்துவிட்டால். அப்புறம் உங்களுக்கும் போழுது போக வேண்டுமே ” என்று அவள் மனதில் எழுந்த கேள்விக்கு. ஏற்றதொரு யோனையை சந்தானம் கூற. முகம் மலரத் தலையாட்டினாள். அந்தத் தாய்.

“அம்மா!”

திருமணம் தொடர்பான பேச்சுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்த பகவதி. சின்ன மகளின் அழுத்தமான அழைப்பில் திரும்பி. “என்னடி?” என்று. சற்றுப் பொறுமையற்ற குரலில் அவசரமாகக் கேட்டாள்.

“முதலில் இதைச் சொல்லுங்கள். இப்போது யாருக்குத் திருமணம் பேசுகிறீர்கள்?” என்று நிதானமாகக் கேட்டாள் பெண்.

“ஏய் செமி. உனக்கும்தானடி. முதலில் அக்காவுக்கும். அடுத்து உனக்கும். கேட்டுக் கொண்டுதானே இருந்தாய்? அப்புறம் இதென்ன கேள்வி?”

“அது ..ஓரளவு கேட்டது ஆனால் உனக்குச் சம்மதமா என்று யாரும் என்னிடம் கேட்டதாக என் காதில் விழவில்லையே! ஒருவேளை. என் காதில் ஏதும் பழுதோ என்னவோ? யாராவது. இஎன்டி டாக்டரிடம் போய்ப் பார்க்க ஏற்பாடு பண்ணுகிறீர்களா?” என்றாள் சற்று சோகமான குரலில் மயூரி.

பகவதிக்குச் சற்றே வயிறு கலங்கியது.

சின்னவளிடம் கேட்கவில்லைதானே? ஒருவேளை. அவளுக்குப் பிடிக்காதிருந்தால்? “அசடு போல உளறாதேடி ” என்று பகவதி மகளை அடக்க முயலும்போதே. வசீகரன் எழுந்தான்.

“இஎன்டியிடம் முன் பதிவு செய்துகொண்டு காத்திருப்பானேன்? தனியாகக் காதுக்கு மட்டும் பார்க்கும் மருத்துவ நிபுணர் எனக்கே தெரியுமே. வா. நானே கூட்டிப் போகிறேன்.” என்று அருகில் போய். அவளது கையைப் பற்றி எழுப்பினான். “ஆனால் பாரேன். அவரது

வைத்தியமே தனி. பாதிக்கப்பட்ட காதைப் பற்றி. வலிக்க ஒரு திருகு திருகினால். உடனே காது கேட்கத் தொடங்கிவிடும்! நான் கூட அதைக் கொஞ்சம் படித்து வைத்திருக்கிறேன். நானே செய்யட்டுமா?" என்று. கண்ணில் சிரிப்புடன் அவன் கேட்க. வேடிக்கை புரிந்து எல்லோரும் நகைக்கலாயினர்.

"ஓகோ என் கை பூப்பறித்துக் கொண்டிருக்குமாக்கும்." என்று மயூரி பதில் கொடுக்க சிரிப்பு இன்னும் வலுத்தது.

"ஐயய்யோ! வேண்டாம்ப்பா. வேண்டுமானால். நாம் வேறே சிகிச்சை செய்யலாமா? அதற்குக் கூட்டமே உதவாது! நாம் இருவர் மட்டும்தான் இருக்க வேண்டும்! என்ன சொல்லுகிறாய்?"

கடைக்கண்ணில் சிரிப்புடன் அவள் அவனோடு கூடப் போகவும் "பாருங்களேன்! ஆனாலும். சின்ன மாப்பிள்ளைக்கு ரொம்பத் துணிச்சல்தான்! " என்று வியந்தாள் பகவதி.

சிரித்தவாறே மூத்த மக்களைப் பார்த்து. "நீங்கள் மட்டும் ஏன் நிற்கிறீர்கள்? எங்காவது போய்ச் சுற்றிவிட்டு வாருங்களேன்!" என்றார் சந்தானம்.

சட்டென எழுந்து மதிவதனியின் கையைப் பற்றி எழுப்பினான் சுகந்தன். "நாங்கள் பெரியவர்களின் அனுமதிக்காகக் காத்திருந்தோம்! " என்று பணிவாகப் பதில் உரைத்தபடி அவர்கள் வெளியேறிச் சென்றனர்.

"அப்பாடியோவ்! இது. அதற்கு மேலே இருக்கிறதே!" என்றாள் கோகிலா.

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட பெரியவர்கள் மூவரும் அடக்க மாட்டாமல் நகைக்கலாயினர்.